

கல்கி
KALKI 28-12-1958
30
மணியம்


உங்கள் கேசத்திற்கு உரிய
பராமரிப்பை அளிக்கிறீர்களா?
இராஸ்மிக் பர்ப்யூம்ட் கோகனட் ஹேர் ஆயில் உபயோகித்து அன்றுடம் பராமரித்துவந்தால் உங்கள் கேசம் அடர்த்தியாகவும், பளபளப்புடனும் மினிரும். சுத்தமான தேங்காயெண்ணெயான இராஸ்மிக், கேசத்திற்கு போஷாக்களித்து சம்ரட்சிக்கும். உங்களுக்குப் பிடித்தமான—ரோஜா அல்லது மல்லிகை—நறு மணத்துடன் கிடைக்கும் சீசா ஒன்றை இன்றே வாங்கி உபயோகித்துப் பாருங்கள்.
இராஸ்மிக்
பர்ப்யூம்ட்
கோகனட் ஹேர் ஆயில்
PERFUMED
COCONUT
HAIR OIL
பரிசுத்தத்திற்கு உத்தரவாதம்
புதுமை மாறாமல் நீடித்திருக்கும்
ECH. 3-50 TM

கல்கி

பொருளடக்கம்

"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 18 | இதழ் 22

தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா — பாரதியார்

விளம்பிஞு மார்கழி 13

பிடிவாதம் இறுகுகிறது!

நிலப் பிரச்னை சம்பந்தமாகக் காங்கிரஸ் செயற்குழுவினர் நிலத்துக்கு உச்சவரம்பு கட்டியே தீரவேண்டும் என்று பிடிவாதமாகச் சொல்லி வருகிறார்கள்.

அந்த உச்சவரம்பு விஷயம் 1962 லிருந்துதான் அமுலுக்கு வரும் என்று முன்னால் சொல்லப்பட்டு வந்தது. அதிலிருந்து காங்கிரஸ் அடுத்த தேர்தலில் வோட்டுப் பிடிக்கத்தான் இம்மாதிரி செய்கிறதே யொழிய அந்தரங்கசுத்தியாக நிலச் சீர்திருத்தம் செய்ய வேண்டும் என்ற எண்ணமில்லை என்ற அபவாதம் ஏற்பட்டது. இந்த அபவாதத்துக்குப் பதில் அளிக்கும் வகையில் காங்கிரஸ் செயற்குழு 1959லேயே எல்லா ராஜ்யங்களிலும், நிலத்துக்கு உச்சவரம்பு கட்டிவிட வேண்டும் என்று சொல்லியிருக்கிறது.

ஆனாலும் இந்தத் திட்டத்திலுள்ள பேதைமை காங்கிரஸ்காரர்களுக்கு இன்னும் தெரியாமல் இருப்பதுதான் நமக்கு விந்தையாக இருக்கிறது.

"உழவனுக்கே நிலம்" என்ற கோஷம் மேற்கத்திய நாடுகளிலிருந்து இறக்குமதியானது. தொழிலாளர்களை, விவசாயத்தை நம்பி வாழும் தொழிலாளர்கள், ஆலைத் தொழில்களை நம்பி வாழும் தொழிலாளர்கள் என்று பிரித்தால் மேற்கத்திய நாடுகளில் தொழிற்சாலைகளை நம்பி வாழும் தொழிலாளர்களே அதிகம். ஆனால் நம் நாட்டில் தொழில்கள் இன்னும் பெருகவில்லை. தொழிற்சாலைகளை நம்பி வாழும் தொழிலாளர்களும் குறைவு. விவசாயத்தை நம்பி வாழும் தொழிலாளர்களின் எண்ணிக்கையே மிக அதிகம். இருக்கும் நிலத்தை நாட்டிலுள்ள இத்தனை விவசாயத் தொழிலாளிகளுக்கும் பிரித்துக் கொடுத்துவிட முடியுமா?

நிலமிழந்த நிலச்சுவான்தார்களின் அதிருப்தி ஒருபுறமிருக்க, விவசாயத் தொழிலாளிகளிடையே நிலம் பெற்ற தொழிலாளி, நிலம் பெறாத தொழிலாளி என்று ஒரு புதுப் பிரிவினை ஏற்பட்டுப் பலப் பல புது பிரச்னைகள் விளையாதா?

இல்லை ; உச்சவரம்பு கட்டிவிட்டு, நிலச்சுவான்தார்களிடம் அதிகமாகவுள்ள நிலத்தைப் பெறும் சர்க்கார், தாங்களே விவசாயத்தை மேற்கொள்ளப் போகிறார்களா? தேசம் முழுவதிலும் சர்க்கார் விவசாயத்தை ஏற்று லாபகரமாக நடத்த முடியுமா?

மொத்தத்தில் நில உச்சவரம்பு என்று பயங்காட்டி, பயங்காட்டி இன்று நாட்டிலுள்ள பெரும் பண்ணைகளையெல்லாம் சின்னாபின்னப்படுத்தி விட்டார்கள். இதனால் உற்பத்தி பெரிதும் தடைப்பட்டிருக்கிறது.

உரிமையற்றவர்களுக்கு நிலத்தின் உரிமையைத் தந்து விட்டு, பெரும்பாலராகிய அவர்களுடைய வோட்டைச் சம்பாதித்து விட்டால் மட்டும் போதுமா? அந்தக் குடும்பங்களும் பெருகிக் கொண்டே போகும் அல்லவா? ஜனப் பெருக்கத்தைப் பற்றிய உண்மைகளை உணர்ந்தவர்கள், நிலச்சீர்திருத்தம் என்கிற பெயரில் விவசாயத்துக்கு உதவாத அளவாகப் பண்ணைகளைச் செய்துவிடும் திட்டம், விவசாயத்துக்கு ஹானியே செய்யும் என்பதை அறிவார்கள். பண்ணை குறுகிப் போகும் என்ற ஆட்சேபணைக்குச் சமாதானமாகக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி விடுவோம் என்கிறார்கள். நம்முடைய குடியானவர்கள் நில உரிமைக்கு ஆசை கொண்டவர்கள். கூட்டுறவு முறையானது குடியானவர்களையெல்லாம் கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளர்களாக்கும் முறையாகும். கூட்டுறவு முறை விவசாயம் நம் நாட்டுக்கு உதவாது.

வரிகளும் தொழில்களும்

ஐரோப்பிய வர்த்தக சம்மேளனத்தின் பொதுக் கூட்டத்தில் சமீபத்தில் பேசிய நிதி மந்திரி திரு மொரார்ஜி தேசாயின் அனுதாப மற்ற பிரசங்கத்தைக் கேட்டுக் கலக்கத்துப் போன தொழில் ஸ்தாபனங்களுக்கு இப்போது காங்கிரஸ் காரியக் கமிட்டி வெளியிட்டுள்ள ஆறு அம்சத் தீர்மானம் பீதியையே உண்டாக்கி யிருக்கிறது.

வரி கொடுப்பவர்கள் எப்போதும் குறை சொல்லிக் கொண்டேதான் இருப்பார்கள். அவர்களுடைய அழுகைக்கும் கூக்குரலுக்கும் அர்த்தமில்லை என்பது போலிருக்கிறது அரசாங்கத்தின் மனப்பான்மை. வரி கொடுப்பது சிரமம்தான் என்றாலும், நியாயமான எந்த வரியையும் செலுத்த மக்கள் முணுமுணுப்பதில்லை. தொழில் அதிபர்களும் தயங்குவதில்லை. அதிலும் பாரதத்தின் சுதந்திரப் பிரஜைகளானபிறகு, அவர்களுடையபொறுப் புணர்ச்சி அதிகமாகத்தான் இருக்கிறது. திட்டங்களுக்குத் தேவைப்படும் செலவுகளுக்கு வரிகள் மூலம் நிதி வசூலிப்பது அவசியம் என்பதை அவர்கள் உணராதவர்களும் அல்ல. அவர்களும் ஜனநாயக உணர்ச்சியுள்ளவர்கள் தான். அவர்கள் விரும்புவதும் ஜனநாயக அரசாங்கம். அதன் செலவுகளுக்குப் பணம் தேவை என்பது அவர்களுக்கும் தெரியும்.

அரசாங்கமும் பிரசங்கத்துக்குப் பிரசங்கம் வார்த்தைக்கு வார்த்தை 'தனியார்த் தொழிலுக்கு சோஷலிஸ சமுதாயத்தில் இடமுண்டு. அவர்களை ஒழித்துக் கட்டும் உத்தேசமில்லை. அவர்கள் தொழிலை வளர்க்க வேண்டும்' என்றெல்லாம் சொல்லிக்கொண்டிருந்தது. ஆனால் மற்றத் துறைகளில் காணப்படுவதுபோல் இங்கேயும் சொல் வேறு, செயல் வேறு என்ற ரீதியில்தான் நடவடிக்கைகளும் மனப்போக்கும் இருக்கின்றன.


அவர்கள் கோரும் சலுகைகள் முக்கியமாக மூன்று. முதலாவது, கம்பெனிகள் மீது விதித்து இப்போது வசூலிக்கப்பட்டு வரும் செல்வ வரியிலிருந்து விலக்கு. இரண்டாவது கோரிக்கை "போனஸ்" வரி நீக்கம். மூன்றாவதாக உபரி லாப வரியிலிருந்து விலக்கு. இவையெல்லாம் தொழில் அபிவிருத்திக்காகப் பாடுபடுபவர்கள் கோரும் நியாயம். வரிப் பளுவைப் பற்றி ஐரோப்பிய வர்த்தக சம்மேளனம் மட்டும் குறை சொல்லவில்லை. இந்திய வர்த்தகத் தொழில் சம்மேளனம் கூட இதைச் சுட்டிக் காட்டியிருக்கிறது. கொஞ்ச நாட்களுக்கு முன்னர் பம்பாய் வர்த்தக ஸ்தாபனமும் இவ் விஷயத்தைப் பற்றி எடுத்துரைத்திருக்கிறது.

நிலைமை இப்படி யிருக்க, லாபத்தை இன்னும் கட்டுப்படுத்த வேண்டும் என்று புதுக் கட்டுப்பாடுகளுக்கு அடிகோலுகிறது காரியக் கமிட்டித் தீர்மானம். இவ்வாறு உண்மை நிலையைச் சரிவர ஆராயாது தட்டிக் கழிப்பது தொழில் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதாகாது. தொழில் வளம் பெருகினால் வரிகள் மூலம் கிடைக்கும் வருமானம் தானாகப் பெருகும். தொழில் வளர்ச்சியை அழுத்தும் வகையில் வரிகளை விதித்துவிட்டு, 'திட்டத்துக்குப் பணம் தேவை, வரி விதிக்கத்தான் வேண்டும்' என்று சொல்வது ஒன்றுக்கொன்று முரணானது. வரி விதிப்பைத் தொழில் ஸ்தாபனங்கள் எதிர்க்கிறார்கள் என்று மக்களுக்கு அவர்கள் மீது அனாவசியமாக வெறுப்பை உண்டாக்குவதில்தான் இது கொண்டுவிடும்.

டாக்டர் வி. கே. ஜான் மறைந்தார்

சென்ற வாரம் டாக்டர் வி. கே. ஜான் தமது 65-வது வயதில் திடீரென்று காலமானார் என்ற செய்தி கேட்டு வருந்துகிறோம். சட்ட நுணுக்கங்கள் தெரிந்தவர், நீதிமன்றத்தில் முன்னணியிலிருந்த வழக்கறிஞர் என்பது மட்டுமன்றி அரசியல் துறையிலும் சிறந்த முறையில் பணியாற்றியவர் திரு ஜான். இரண்டாண்டு இடைக்காலத்தைத் தவிர, 1940-ம் ஆண்டிலிருந்து இறுதிக் காலம் வரையில் சென்னை மேல் சட்ட சபையில் அங்கம் வகித்தார். சட்டசபை நடவடிக்கைகளில் முதிர்ந்த அனுபவமுள்ளவர். உருப்படியான எதிர்க்கட்சியே இல்லாது அரசாங்கத்தின் அலுவல்கள் கட்சிப் பலத்தை ஆதாரமாகக் கொண்டு நடத்தப்பட்டுவரும் இந்நாட்களில் எதிர்க்கட்சிகளின் அபிப்பிராயங்களை எடுத்துச் சொல்லும் பணியைத்திறமையுடன் நிறைவேற்றி வந்தார். ஜனநாயகத்தில் எதிர்க்கட்சியின் அவசியத்தை உணராத எல்லாப் பொது மக்களும், டாக்டர் ஜான் இந்தத் துறையில் செய்துள்ள சேவையையும், விருப்பு வெறுப்பின்றி ஆணித்தரமாக அவர் பேசிய பேச்சுக்களையும், எடுத்துக் கூறிய வாதங்களையும் மறக்கவே மாட்டார்கள். இந்திய அரசியலை வளம்பெறச் செய்த வழக்கறிஞர்கள் பலர். அத்தகையோரின் எண்ணிக்கை வேகமாகக் குறைந்து வருகிறது. இந்த வர்க்கத்தைச் சேர்ந்த டாக்டர் ஜானின் மறைவு சென்னை அரசியலுக்கும், கடைசியாக அவரைத் தலைவராகக் கொண்ட பாரதீய ஜனசங் கட்சிக்கும் மகத்தான நஷ்டம். அவர் பிரிவினால் துயரத்தில் ஆழ்ந்துள்ள அவருடைய குடும்பத்தினருக்கு மனமார்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.




நிலச்சுவான்தார்
உடைமையை
இழந்து விடுவார்.
விவசாயி
தற்காலிக
சந்தோஷம்
அடைவான்.
நாட்டுமக்கள் பஞ்சத்தில்
கஷ்டப்
படுவர்.
விளை நிலமோ தரிசாகப் போகும்!

அருள் வாக்கு

நாம் நான்கு விதத்தில் தர்மம் செய்து வரலாம். சரீரத்தாலும், வாயாலும், மனத்தாலும், பணத்தாலும் செய்யலாம். பணத்தை ஆத்ம லாபத்தில் உபயோகப்படுத்தலாம்; தான தர்மம் செய்யலாம். தரித்திர தசையில் தான தர்மம் எப்படிச் செய்வது என்கிற சந்தேகம் தோன்றுகிறது. தரித்திர தசையிலும் செலவைக் குறைத்து ஒரு தம்பிடியாவது தர்மம் பண்ணலாம்.

நாம் மிகவும் பாபம் பண்ணியிருக்கிறோம் என்று பயப்படக் கூடாது. நம்மை விடப் பாபிகளானவர்கள்கூட நல்ல நிலைக்கு வந்திருக்கிறார்கள். பாபிகளை ரட்சிப்பதனால்தான் ஈசுவரனுக்குப் பெருமை ஏற்படுகிறது. அதனால் நாம் தைரியமாக இருக்க வேண்டும். பகவத் கீதையில் பகவான் அர்ஜுனனைப் பார்த்து, "லோகத்தில் எல்லாப் பாபிகளிலும் மகா பாபியாக உன்னை வைத்துக் கொண்டாலும் பாபமாகிற சமுத்திரத்தை ஞானம் என்கிற ஓடத்தினால் நீ தாண்டி விடுவாய்" என்று கூறுகிறார்.

நாம் எப்படிப் பாபம் செய்கிறோம் என்பதை யோசித்துப் பார்க்கலாம்:

தேகத்தாலும், மனத்தாலும், வாக்கினாலும், பணத்தாலும் பாபம் செய்கிறோம்; மனத்தில் கெட்ட எண்ணங்களை எண்ணிப் பாபம் செய்கிறோம். நாம் இந்தப் பாபங்களைப் பண்ணக் கூடாது என்று நினைத்தாலும் நம்மையும் மீறிப் பாப காரியங்களையே செய்துவருகிறோம்.

நித்தியம் மனத்தினாலும், வாக்கினாலும், உடம்பினாலும், பணத்தினாலும் நல்ல காரியங்களைச் செய்து, பாபங்களை அகற்றிப் புண்ணியத்துக்கு வழி தேட வேண்டும்.

வாக்கினால் புண்ணியம் செய்ய வேண்டும். தினமும் ஆயிரம் பகவந் நாமத்தையாவது சொல்ல வேண்டும். மனத்தினால் பகவானைத் தியானிக்க வேண்டும். உடம்பினால் நல்ல காரியங்களைச் செய்ய வேண்டும். கோயிலுக்குப் போய் பிரதட்சிணம் செய்து நமஸ்காரங்கள் பண்ண வேண்டும். சரீரத்தால் பிறருக்குச் சேவை செய்ய வேண்டும்.

உண்மையான பக்தி இருந்தால் பாவமே செய்ய இடமில்லை. பாபத்துக்குக் காரணமான ஆசையை அறவே நீக்கி, பக்தியைக் கடைப்பிடிக்க வேண்டும். ஆசையின்றி ஒரு காரியத்தைச் செய்தால் அப்பொழுது பாபமில்லை. மனிதனுக்கு ஒரு வஸ்து வேண்டும் என்ற ஆசை இருக்கிறது. அதை அடைய முயற்சி செய்கிறான். நியாயமான வழியில் கிடைக்கவில்லையென்றால் அநியாய வழியில் முயற்சி செய்கிறான். அதுதான் பாபம். அந்தப் பாபத்துக்குக் காரணமாக இருப்பது 'வேண்டும்' என்கிற ஆசை. அதைத்தான் காமம் என்று சொல்லுவார்கள். அது நமக்கு ஒரு சத்துரு. மற்றொன்றும் இருக்கிறது. அது குரோதம். ஒரு வஸ்துவை ஆசைப்பட்டுக் கிடைக்காமல் போனால் தடையாக இருப்பவர்கள்மேல் உண்டாகும் கோபம்தான் குரோதம். ஒருசமயம் காமமாக இருப்பதே பின்பு குரோதமாக மாறுகிறது. ரப்பர்ப்பந்தை சுவரில் எறிகிறோம். எறியும் பொழுது காமமாகவும், திரும்பி வரும் போது குரோதமாகவும் மாறித் திரும்புகிறது.

காமம் எதனாலும் திருப்தி அடையாது. காமம் நெருப்புக்குச் சமானம். விறகிட்ட தீப்போல மேன்மேலும் பெருகும். திருப்தியே அடைவதில்லை. நெருப்பு எங்கு சென்றாலும் போகும் வழியெல்லாம் கறுப்பை உண்டு பண்ணிக் கொண்டே செல்லும். அதற்கு 'கிருஷ்ண வர்த்மா' என்று ஒரு பெயர் இருக்கிறது. காமமும் அப்படித்தான். முதலில் இன்பம் போல் தோன்றிய போதும் பின்னால் மீண்டும் கிடைக்கவில்லையே என்ற ஏக்கமும் துன்பமும் உண்டாகிறது.

நாம் செய்யும் பாபங்களைப் பார்த்தால் நமக்குச் சாதம்கூடக் கிடைக்கக் கூடாது. பகவான் கருணாசமுத்திரமானதால் பாபிகளான நமக்கும் பல சௌகரியங்களைக் கொடுக்கிறார். ஆகையினால் பாபங்களை அகற்றிப் புண்ணிய வழிகளை அனுசரித்து அந்தப் புண்ணிய பலன்களையும் எல்லாம் வல்ல இறைவனுக்கு அர்ப்பணம் செய்து விட்டால் ஸ்திரமான சௌக்கியத்தை அடைவோம்.

ஸ்ரீ சங்கராச்சாரியார் • காஞ்சி காமகோடி பீடம் •


1
2
3
4

விஞ்ஞான மேதைக்குப் பாராட்டு விழா

புது தில்லியிலுள்ள விஞ்ஞான பவனத்தில் சென்ற ஞாயிறு 14-12-58 அன்று டாக்டர் கிருஷ்ணனின் அறுபதாண்டு நிறைவு விழா நடைபெற்றதன் மூலம் இந்த விஞ்ஞான பவனம் கட்டிய பயனை எய்தியது. ஒரு விஞ்ஞானியைக் கௌரவித்துத்தன் பெயரைக் காப்பாற்றிக் கொண்டது. தருமபுர ஆதீனத்தார் மனமுவந்து அளித்த பொன்னாடை நாட்டின் தவப்புதல்வர் ஸ்ரீ கிருஷ்ணன் அவர்கள் மேனியை அலங்கரித்தது.

இப் பாராட்டு விழா கூட்டத்துக்கு இவ்வளவு ஜனத்திரள் இதுவரையில் கூடியதில்லை. தேசத் தலைவர் நேருஜி முதல் கிருஷ்ணனின் அன்பு வலையில் சிக்கிய சாதாரணப் பொது ஜனம் வரை பவனத்தை நிரப்பியது விழாவை மங்களகரமாக்கியது. இறை வணக்கம் பாடிய ஸ்ரீமதி மணி கிருஷ்ணஸ்வாமி தம் இனிய குரலினால் மஹாலையே நாத வெள்ளத்தில் நிரப்பி விட்டார்.

கர்நாடகப் பண்பாட்டை யொட்டி, கிருஷ்ணன் தம்பதிகளைப் பூர்ண கும்பம் வைத்து வரவழைத்த காட்சி கண்கொள்ளாததாயிருந்தது. இப்போதெல்லாம் நம்மவர்கள் கூட ஆண்டு நிறைவன்று மெழுகுவத்தியை ஏற்றி வாயினால் 'சுபமாய்' ஊதி அணைத்துக் கொண்டாடுவதைப் பார்க்கும்போது என் போன்ற பழமையாளர்களுக்கு...!

ஜனத்திரளைப் பற்றிச் சொன்னேனல்லவா? அதில் ஒன்றும் ஆச்சரியமில்லை. அவர்கள் காட்டிய அமைதியும் ஒழுங்கும்தான் என்னை ஆச்சரியத்தில் ஆழ்த்தின. நிர்வாகிகளுக்கு ஒரு ஷொட்டு கொடுக்க வேண்டியதுதான்.

எல்லாரையும் விட நேருஜிக்குத்தான் அந்த வைபவம் மிகுந்த விச்ராந்தியை அளித்தது என்று எனக்குப் பட்டது. ஏனெனில் அப்போதுதான் அவர் காங்கிரஸ் காரியக் கமிட்டிக் கூட்டத்திலிருந்து வந்தார். அந்தச் சூழ்நிலைக்கு இந்தச் சூழ்நிலை அவருக்கு நிரம்ப நிம்மதியைக் கொடுத்திருக்கும் என்பது அவருடைய சொற்பொழிவில் நன்கு தெரிந்தது. மனம் விட்டுப் புகழ்ந்தார் என்பதை விட மனம் நெகிழ்ந்து என்பது சாலப் பொருந்தும். அவருடைய உரையில் வெளியான முக்கியமான விஷயம் டாக்டர் அவர்களின் சங்கீத ஞானத்தைப் பற்றிய குறிப்பு. எதையுமே பறைசாற்றிக் கொள்ளாத ஸ்ரீகிருஷ்ணனின் பல்வேறு குணங்களில் அவருடைய சங்கீத ஞானத்தைப் பற்றிய குறிப்பு மிகவும் விசேஷமாயிருந்தது. சபாக்காரர்கள் கவனிக்க.

விஞ்ஞான மேதை கிருஷ்ணன் அவர்களுக்கு நடந்த பாராட்டு விழா காட்சிகளை எதிர்ப் பக்கத்தில் காணலாம்.

1 பிரதமருக்குக் குதூகல வரவேற்பு.

2. கிரோல்பாக் பகுதி சமாஜத்தாரும் திரு கிருஷ்ணன் அவர்களைக் கௌரவித்தனர்.

3 ஆதீனகர்த்தர் அளிக்க ஆடை அலங்காரம்

4. பூக்கடைத் திறப்பு விழா இல்லை! ஸ்ரீ கிருஷ்ணனுக்குப் பாராட்டு விழா.

தலைமை தாங்கிய உள்நாட்டு மந்திரி ஸ்ரீ பந்த் பொன்னாடை போர்த்தினார். உண்மையில் அங்கு கூடியிருந்த ஒவ்வொருவருக்கும் அப்போது புல்லரித்தது. அவருடைய ரத்தினச் சுருக்கமான பேச்சு எப்போதுமே விஷயத்தை ஒட்டியே இருக்கும். அழகுக்கு அழகு செய்வது போல் அமைந்துவிடும்.

டாக்டர் வி. கே. ஆர். வி ராவ் ஒரு அதிசய மனிதர். ஆசிரியப் பணியாற்றும் அவருக்கு எல்லாருமே மாணவர்களாகப் பட்டுவிடுவதில் வியப்பொன்றுமில்லை. எதையாவது சொல்லப் போய் எக்கச்சக்கத்தில் மாட்டிக் கொள்வதில் நிகரற்று விளங்குகிறார். முன்பொருதரம் இந்தி சம்பந்தமாய்ச் சொல்லப் போய்ச் சந்தியில் மாட்டிக் கொண்டார். இந்த வைபவத்திலும் அவர் தமது கைங்கரியத்தைச் செய்யாமலில்லை. "முன்பெல்லாம் அரசியல்வாதிகளுக்குத்தான் மவுசு; அவர்களுக்குத்தான் விருதுகளும் கௌரவங்களும் வந்து சேரும்..." என்று ஆரம்பித்த அவர், பக்கத்தில் கொலுவீற்றிருக்கும் அரும் பெரும் அரசியலாளரைக் கண்டவுடன் பேச்சை மாற்ற முடியாமல் மென்று விழுங்கி ஒரு வழியாகச் சமாளித்தெழுந்தார்.

ஒரு வைபவத்துக்கு அந்யோந்ய பாவம் இட்ட வேண்டுமானால் அதற்கு லோக சபைத் தலைவர் அனந்தசயனமய்யங்காரைச் சம்பந்தப்படுத்துவதைத் தவிர வேறு வழி கிடையாது. அவர் அன்று ஐந்து நிமிஷங்கள் தான் பேசினார்! ஆரம்ப வாக்கியமே அருமையாக அமைந்து விட்டது. "என்னைக் கூப்பிடுவீர்கள் என்று காத்துக்கொண்டிருந்தேன்..." என்று துவங்கியபோது டாக்டர் அவர்கள்மீது அவர் கொண்டிருந்த அன்பு வெளியாயிற்று.

டாக்டர் அவர்களின் மாணவர்களில் முன்னணியிலுள்ள டாக்டர் பகவந்தம் ஒரு ரஸமான விஷயம் வெளியிட்டார். "ஒரு காலத்தில் விஞ்ஞானிகளின் பெயர்கள் 'ன'காரத்தில் முடிய வேண்டும் என்ற நம்பிக்கை பிரபலமாயிருந்தது. சன்ஸ்மன், ராமன், கிருஷ்ணன் என்பன போல் என் பெயரையும் பகவந்தன் என்று மாற்றி விட்டார்கள். கடிதங்கள் அவ்வாறே விலாசமிட்டு வரத்துவங்கின" என்று அவர் தெரிவித்த போது சபையில் சிரிப்பொலி பரவியது.

விழாவில் எல்லார் கவனத்தையும் கவர்ந்தது திரு காமராஜரின் பிரசன்னம்.

ஏது சரி! ஹைதராபாத்திலிருந்து வழி நெடுக வந்து தமது காணிக்கையைச் செலுத்த எண்ணிய சம்ஸ்கிருதக் குழுவினரைப் பேச விடாதது பெரிய குறையாகவே பலருக்குப் பட்டது. ஸ்ரீ கிருஷ்ணன் அவர்கள் என்ன பதிலளித்தார் என்று அறிய ஆவலாயிருக்கிறதல்லவா? கேளுங்கள்.

"கற்றது கைமண்ணளவு
கல்லாதது உலகளவு—என்று
உற்ற கலைமடந்தை ஓதுகிறாள்"
"என் கடன் பணி செய்து கிடப்பதே"

வாழ்க கிருஷ்ணன் தம்பதிகள்! வாழ்க பல்லாண்டு!

— கப்புடு.

கால்கேட் குளோரோபில்*
ஈறுகளை
பலப்படுத்துகிறது

வைத்திய சோதனை நிரூபிக்கிறது!



ஈறுகளைப் பலப்படுத்துகிறது!

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை வழக்கமாகத் தேய்ப்பதால், குளோரோபில் மூலம் அது ஈறுகளைப்பலப்படுத்துகிறது.

வாய்நாற்றத்தை அதி தீவிரமாய் ஒழிக்கிறது!

வேறு சாதாரண பற்பசையை விட மிக மிகத்தீவிரமாக வாய்நாற்றத்தை கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட் ஒழிக்கிறது என்பது ருசுவான உண்மை.

சொத்தையாக்கும் கிருமிகளை ஒழிக்கிறது!

கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை ஒவ்வொரு முறையும் சாப்பிட்டவுடன் தேய்ப்பதால் பல் எனாமலை அரிக்கும் நாச அமிலங்களும், அவற்றை விளைவிக்கும் கிருமிகளும் குறைகின்றன!

வேறு எந்த பற் பசையிலும் இதை விட அதிக வீரிய குளோரோபில் இல்லை!



இதோ! பெரிய ...



17. ஜடபரதரும் ரஹூகணனும்

சிந்து தேசத்தில் ரஹூகணன் என்று ஒரு அரசன் இருந்தான். ஒரு நாள் அவ்வரசன், பல்லக்கில் ஏறிக் கொண்டு, மெய்யறிவைத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற எண்ணத்துடன் கபில முனிவரைக் காணச் சென்றான். போகும் வழியில் இக்ஷுமதி நதிக்கரையில், பல்லக்கு தூக்குவதற்கு ஒரு ஆள் வேண்டுமென்று சேவகர் தலைவன் தேடினான். அப்பொழுது தற்செயலாக அவன் ஜடபரதரைக் கண்ணுற்றான். "இவன் பருத்துத் திறமை வாய்ந்த இளைஞனாக இருக்கிறான். மாட்டையும் கழுதையையும் போல் சுமை தூக்கத் தகுதியானவன்" என்று தீர்மானித்து அப்பெரியோரை இழுத்துச் சென்று அரசனுடைய பல்லக்கைத் தூக்கும் வேலையில் அமர்த்தினான்.

ஜடபரதர் பேச்சின்றிப் பல்லக்கைத் தூக்கிச் சென்றார். ஆனால் அவருக்குப் புவி மீது ஊர்ந்து செல்லும் புழுக்களைத் தம் காலால் மிதிக்க மனமில்லை ஆகையால் கீழேயே கண்ணுற்று, அடிக்கொரு தரம் பார்த்துக் கொண்டே நடந்தார். மற்றவர்கள் நடைக்கும் இவருடைய நடைக்கும் வேற்றுமை ஏற்பட்டுப் பல்லக்கு ஆட ஆரம்பித்தது. இதைக் கண்ட அரசன், "பல்லக்கைச் சரியாகத் தூக்குங்கள். ஏன் இவ்விதம் ஆடுகிறது?" என்று சேவகர்களை எச்சரித்தான். இச்சொற்களைக் கேட்டு, நான்காவது முறைக்கு (செயலைச் செய்விப்பதற்கு நான்கு முறைகள். முதலில் நல் வார்த்தை; இரண்டாவது கொடை; மூன்றாவது ஒருவரைத் தூண்டி மற்றொருவரைப் பிரித்தல் நான்காவது நையப் புடைத்தல்) பயந்தவராய் அவர்கள் அரசனிடம் விண்ணப்பம் செய்து கொண்டனர்.

"அரசே! எங்கள் மீது தவறொன்றும் இல்லை. இதோ இந்தப் புதுமனிதன் வேகமாக நடப்பதில்லை. அவனுடன் சேர்ந்து செல்வது தான் சிரமமாக இருக்கிறது" என்றார்கள்.

இந்தப் பரிதாபப் பேச்சைக் கேட்ட அரசனும் சேர்க்கையால் ஒருவனுடைய குற்றம், மற்றவரையும் பாதிக்கும் என்று கருதினான். அதனால் படித்தும் பக்குவம் எய்தாமல், மன வேகத்தில் மயங்கிச் சினம் கொண்ட அரசன், சாம்பலால் மூடுண்ட நெருப்பென வெளிக் காணாச் சாந்தியுடன் காத்திருக்கும் அந்தணனை நோக்கி ஏளனமாய்ப் பேசலுற்றான்.

"அந்தோ! தம்பி! நீயோ சோர்ந்திருக்கிறாய்! ஒருவனாகவே பல்லக்கைச் சுமந்து வருகிறாய். வெகுதூரம் வெகு நேரம் வேலை செய்திருக்கிறாய். கூட வருவோர் ஒருவரும் உனக்கு உதவிபுரியவில்லை. வயது முதிர்ந்து இளைத்துப் பலம் குன்றியிருக்கிறாய்" என்று மாறு சொல் உரைத்தான். உடலைத் தனதென்றே எண்ணாத அந்தணன் கேலியைக் கவனிக்கவில்லை. முன் போலவே பல்லக்கைத் தூக்கிச் சென்றார். ஆனால் திரும்பவும் பல்லக்கு ஆட ஆரம்பித்தது. அரசனுக்குக் கோபம் மேலிட்டது. "தலைவன் கட்டளையை மீறி நிற்கும் நீ உயிரிருந்தும் பிணமே. உன்னை நல்வழியில் திருப்ப வேண்டும். தண்டித்தே தீருவேன்" என்றான்.

அப்பொழுது ஜடபரதர் அவனுக்குப் பின்வருமாறு மறுமொழி சொன்னார்:

"அரசே! எனக்குச் சோர்வில்லை. நான் வெகுதூரம் நடக்கவில்லை என்று நீங்கள் சொன்னதில் ஒரு தவறும் இல்லை. இந்தப் பல்லக்கின் பாரம் என்மீது இருந்தால் அல்லவா எனக்குத் தளர்ச்சி ஏற்படும்? நான் வழி நடந்தால் அன்றோ எனக்குச் சோர்வு? இளைத்திருப்பதும் பருத்திருப்பதும் உடலின் தன்மை. பசியும் தாகமும், பயமும் சச்சரவும், ஆசையும் முதுமையும், உறக்கமும் இன்பத்தில் பற்றுதலும், சினமும் துயரமும், நானென்ற நோக்குதலும் நோக்குதலால் வரும் இறுமாப்பும், தன்னைத் தன் உடலோடு ஒன்றெனக் காணும் கல்லாதவருக்கே! என்னை உயிருள்ள பிணமென்றனையே. மாறிவரும் வாழ்வு இறப்பின்றி வேறென்ன? அரசனென்று அதட்டினையே. ஆள்பவனென்றும் ஆளென்றும் தொடர்பு நீங்காமல் இருந்தாலன்றோ சொல்வோனும் செய்வோனும் வேறாகும். இன்று நீ அரசன் நான் சேவகன். நாளை நான் அரசன். நீ சேவகன். இவ்வாறு சுழன்று வரும் பிறப்பில் வேந்தன் யார்? வேலையாள் யார்? ஆன்மாவுடன் அணைந்து பித்தனைப் போல் நடக்கும் என்னைத் திருத்துவதில் பயனில்லை; இல்லை உண்மையிலே நான் மதியீனனென்றால் எனக்

ளுச் சொல்லும் படிப்பு எப்படியும் வீண். பிசைந்த மாவை எவர்தான் திரும்பவும் பிசைவார்?"

இவ்வாறு கருங்கச் சொல்லிவிட்டு ஜடபரதர் தமக்கு எஞ்சியிருக்கும் வினையையும் தீர்க்கவேண்டிப் பல்லக்கை மறுபடியும் தூக்கிச் சென்றார். ஆனால் அரசன் அறிவுள்ளவன். அந்தணன் சொற்கேட்டுப் பரபரப்புடன் பல்லக்கிலிருந்து கீழே குதித்தான். தாள் வணங்கினான். மன்னிக்குமாறு விண்ணப்பம் செய்தான். மன்னவன் என்ற மோகத்தை இழந்தான். அவருடன் பேசலானான்:—

"அந்தணனைப் போல் வேடம் பூண்டிருக்கும் நீங்கள் யார்? முற்றிலும் துறந்த 'அவதூதர்க'ளுள் நீங்கள் எவரோ! எங்கு பிறந்தீர், எங்கு வளர்ந்தீர், ஏன் இங்கு வந்தீர்? எங்களுக்கு அறி



வளிக்க வந்த கபிலரா? நான் இந்திரனுடைய இடியேறுக்கு அஞ்சவில்லை. முக்கண்ணன் சினத்தையும் பொறுப்பேன், தர்மராஜன் தண்டனையையும் தாங்குவேன், ஆனால் பெரியோரை மதிக்காத தவறைத் தாள மாட்டேன். ஏன் இந்தப் பெருமையை மறைக்கின்ற மதியீனக் கோலம்? கபிலரைக் கண்டு, பிறப்பெடுத்தவர்களுக்குப் புகல் என்னவென்று வினவவே போய்க் கொண்டிருந்தேன். வழியிலே உங்களைச் சந்தித்தேன். நீங்களே கபிலரோ? வீட்டென்றும் வாயிலென்றும் உறவாடி உழன்று வரும் மானிடர்கள் யோகத்தில் சிறந்திருக்கும் பெரியோரின் வழியை அறிவதும் அரிது.

"போராடித் தளர்வேன். அதுபோல் தேவரீரும் பாரத்தைத் தூக்கி வழி நடந்து சோர்வெய்தினீரென்று எண்ணினேன். கண்ணுக்கு முன்னிருக்கும் தோற்றத்தைப் பொய் என்பதெப்படி? உண்மையில்லா உலகம் வேலைக்கு உதவுமா? இல்லாத மண் குடத்தில் நீரெடுத்து வருவதேது? பானையிலே தீப்பட்டு, உள்ளிருக்கும் நீர் கொதித்து, அரிசியின் வெளி சமைந்து, உள் வெந்து சாதமாய் மாறுவதுமுற்றிலும் வீணான தோற்றமா? அதுபோலவே உடல் படும் சோர்வானது புலன்களுக்குப்பட்டு, மனத்துக்கும் ஆன்மாவுக்கும் படக்கூடாதா? மேலும், அரசன் தன் குடிகளைக் காக்கவேண்டியவன். காக்கும்வரை அவன் அரசன்தான். தன் கடமையைக் கடவுள் பணிவிடையென்று செய்யும் செயல் பிசைந்த மாவைப் பிசைவது போன்ற வீண் வேலையன்று. பாபத்தைப் போக்கும் வழியே ஆகும்! ஆகையால் அரசன் என்ற எண்ணத்துடன் நான் சொன்னதையும் செய்ததையும் தவறாக நீங்கள் நினைக்காமல் கருணை புரிய வேண்டும்."

மன்னவன் மொழியைக் கேட்ட முனிவர் அவனுக்கு மீண்டும் உபதேசம் செய்தார்.

"நெய் விட்டு வளரும் சுடர் எரிந்து புகையும்; நெய் தீர்ந்ததும் தீயும் புகையும் அழிந்து போகின்றன. மனிதனுடைய மனம் முக்குணங்களுக்கு அடிமையாய் இருக்கும்வரையில், பத்துப் புலன்கள்வாயிலாக இன்பத்தையும் துன்பத்தையும் அனுபவித்துக் கொண்டேதான் இருக்கும். குணங்களின் ஆட்சியை மீறி நிற்கும் மனம் பிறப்பிலும் இறப்பிலும் நின்று விடுதலை அடைவதற்குக் கருவியாகும்.

"இயற்கையாலும், வினையாலும், அவரவர் தன்மையாலும் பல்வேறு வெளிப் பொருள்களாலும் காலத்தின் செயலாலும் மனத்துக்குவரும் மாறுதல்கள் எண்ணற்றவை. ஆயினும் இம்மாறுதல்கள் தாமாகவே உதிப்பதில்லை: ஒன்றின் மூலமாய் மற்றொன்று பெருகுவதும் இல்லை. அவைகளுக்குக் கடவுளே காரணம். தம்முடைய மாயையால் நம் முன்னே இருக்கிறான். காற்றைப் போல் அங்கிங்கெனாதபடி எங்குமே நிறைந்திருக்கிறான். மனத்தின் போக்கைப் பற்றின்றிப் பார்த்து வரும் இப்பரமனைத் தானென்று அறியாத ஜீவன், மனம் செய்யும் மாயைச் செயல்களைத் தான் செய்வதாக எண்ணிப் பிறந்தும் இறந்தும் வருந்துகிறான். தான் யார் என்று மெய்யறிவு வருவதற்கு இந்த மாயை முதலில் விலக வேண்டும். தனக்குள் இருக்கும் ஆறு பகைவரை (அதாவது காமம், கோபம், பேராசை, அறிவு மயக்கம், தற்பெருமை, பொறாமை) வெல்ல



பெண்மணிகளுக்கு ஒரு சொல்!

★

ஐந்திலும் சரி, ஐம்பதிலும் சரி; உங்கள் கூந்தலை கருகருவென்றும், அடர்த்தியாகவும் வைத்துக் கொள்ளலாம். இள வயதில் வரும் வழுக்கையைத் தடுத்து கேசத்தைக் காப்பாற்ற, கேசவர்த்தினியை இன்றே உபயோகியுங்கள்!

★



கேசவர்த்தினி ஷாம்புவினால் தலையை மணமுள்ளதாகவும் சுத்த மாகவும் வைத்துக் கொள்ளுங்கள்

★

எங்கள் இதர தயாரிப்பு

அஞ்சன் கண்மை

கேசவர்த்தினி பிராடக்ட்ஸ்

இராஸ் கட் ரோடு - - - கோயமுத்தூர்

G. P.

வேண்டும். அப்பொழுது இவ்வுடல் என்னுடையது என்ற எண்ணம் விலகும். ஆகவே குருவேடத்தில் வந்திருக்கும் கடவுளைத்தொழுது பழக்கத்தால் பலமேறிய மனமென்ற பகைவனை அகற்றிடுவாய்!''

அரசன் முனிவரை மீண்டும் வணங்கினான். 'நோயாளிக்கு மருந்தைப் போலவும் தாகத்தினால் வறண்டவனுக்குக் கங்கையின் நீரைப் போலவும், தேவரீருடைய சொற்கள் உடலுடன் தொடர்பென்ற நஞ்சேறி மதி இழந்த எனக்கு அமுதாகவே வந்துள்ளன. ஆயினும், எனக்கு ஒரு சந்தேகம் மிகுந்தே நிற்கிறது. பல்லக்கு தூக்குவதும் அதனால் வரும் சோர்வும் இருத்தும் முற்றிலும் உண்மை அல்ல என்று தேவரீர் உரைத்தது எனக்கு விளங்கவில்லை'' என்று ரஹூகணன் பரதரைத் திரும்பவும் வினவினான்.

அதற்கு முனிவர் விவரித்துப் பதில் அளித்தார்.


''எக்காரணத்தாலோ மண்ணானது மனிதனுடைய உடலென்று பேர்பெற்றுப் புவியில் திரிகிறது. பல்லக்கைச் சுமக்கிறது. மரப் பல்லக்கில் மற்றொரு மண் பொம்மை வேந்தனென்று வீற்றிருக்கிறது. மண்ணை (அதாவது மண், தண், தீ, காற்று, ஆகாயம் இவற்றால் செய்த உருவை) தானென்று நினைத்துத் தற்பெருமை கொள்கிறாய். மண்ணில் தோன்றி மண்ணில் அழியும் பொருள்கள் பல பெயர்கள் பொருந்தியும் மண்ணேயன்றிவேறில்லை. மண்ணானிலும் உண்மையா? இல்லை. அணுக்களில் மண் ஒடுங்குகிறது. அணுவும் ஆண்டவனுடைய மாயை. சிறிதாகவும் பெரிதாகவும் காரியமாகவும் காரணமாகவும் அசைவதாகவும் அசைவற்றதாகவும் வெவ்வேறாகத் தோன்றுவனவெல்லாம் கடவுளுடைய மாயைக்கு வாய்ந்த பல பேர்கள். பகவான் என்றும் வாசுதேவன் என்றும் பெரியோர் உரைக்கும் நீக்கமற்று நிறைந்திருக்கும் மெய்யறிவு ஒன்றுதான் உண்மை. இவ்வறிவு தவத்தாலும் நன்கொடையாலும் மறையோதி வருவதாலும் வராத செல்வம். நாராயணனுடைய கதையைப் பாடி மகிழும் பெரியோரின் கால் புழுதி தலைமேல் தரித்துப் புண்ணியத்தைப் பெற வேண்டும்.

''நான் பரதன் என்ற பேரரசனாக இருந்தேன். பற்றுதலை விட்டுப் பரமனுடைய பூஜையில் ஈடுபட்டேன். ஒரு மானிடம் ஆசை வைத்து நற்பயனை இழந்து மானாகவே மாறினேன். ஆனால் அப்பிறவியிலும் எனக்கு முன் நினைவு அழியவில்லை. ஆகவே இப்பிறப்பில் உறவுக்கு அஞ்சியவனாய்க் கண்காணாமல் திரிந்து வருகிறேன்.

''பக்தருடன் பழகிப் பரமன் கதை கேட்டு வரும் அறிவென்ற கத்தியால் உறவென்ற பாசத்தை அறுத்து அவனையே அடைய வேண்டும்.

''வாழ்வு என்ற கானகத்தில் திரவியம் தேடத் திரியும் வணிகரைப் போல் மனிதன் சுற்றுகிறான். இந்தக் காட்டில் ஆறு திருடர்கள் இருக்கின்றனர். அவர்கள்தான் ஐம்புலன்களும் மனமும். இவர்களுக்கு ஒரு கொடுந் தலைவன். அதுதான் புத்தி. இவர்கள் ஒன்று கூடி வணிகர்களின் பொருளை எடுத்துச் செல்லும் திருடர்களைப் போல், தர்மத்துக்குச் செலவு செய்ய வேண்டிய பொருளைச் சிற்றின்பத்தில் அழிக்கும்படி ஏவுகின்றனர். காட்டிலிருக்கும் நரியும் ஓநாயும் காவலை மீறி ஆட்டைத் தூக்கிச் செல்வது போல் மனைவியும் மக்களும் மனிதனுடைய செல்வத்தை அபகரிக்கின்றனர். காட்டில் நுழைய முடியாத அளவில் புல்லும்புதரும் அடர்ந்துள்ளன. அதுதான் காமமும்சினமும் நிரம்பிய இல்லறம். எவ்வளவுதான் உழுதாலும் வறுக்காத விதை மீண்டும் முளைத்தே தீரும். இல்லறத்திலும் செயல் வினை திரும்பத் திரும்ப முளைத்து வரும். காட்டிலிருக்கும் ஈ கொசுவைப் போல் வாழ்க்கையில் கொடியவர் துன்புறுத்துகின்றனர். வானத்தில்தெரியும் கந்தர்வ நகரப்போல்பொய்த்தோற்றம் இவ்வுலக அனுபவங்கள்; அவைகளை மெய்யென்று மயங்குகிறான். இருட்டில் காணும் கொள்ளிவாய்ப் பிசாசினிடம் நெருப்பை விரும்பிய விந்தையாகும் மனிதன் பொன்னுக்கு மன்றாடுவது. சில சமயம் காட்டில் புயற்காற்றடித்துக் கண்மங்கித் திக்குகள் புழுதியால் மறைக்கப்படுகின்றன. அது போல் உடல் வேகத்தால் மாசுண்ட மனத்துடன் புயல் போன்ற மாதரைத் தேடித் திரிந்து திக்குத் தெரியாமல் திண்டாடுகிறான். காட்டில் கண்ணுக்குத் தெரியாத சிள்வண்டின் சத்





...ங்கன்: அடுத்தாப்பலே என்ன பாடணும்?

சபைக் காரியதரிசி: அடுத்தாப்பலே வேறு ஒரு வித்வான் பாட வேணும். நீங்க சீக்கிரம் முடிச்சிண்டு வந்து விடறேளா?

தம் கண்முன்னே தெரியும் கோட்டாவின் கத்தலும் காதைத் துளைக்கும். அவ்வாறே வாழ்க்கையில் பின்னிருந்து தூற்றும் கொடியோரும், நேராக மிரட்டும் அதிகாரிகளும் பலர். காட்டிலிருக்கும் நச்சுக் கொடியின் நிழலை அடைவது போலாகும், வாழ்க்கையில் தீயோரை அண்டுவது. சில சமயம் காட்டில் கானல் நீரைக் கண்டு பசித்தவன் போவது போல் வெளிப் பொருள்களைக் கண்டு ஓடுகிறான். நீரில்லா ஆற்றில் குதித்துக் காயமுறும் மதியிலியென, மறைக்கு மாறான மார்க்கங்களைப் பின்பற்றித் துன்புறுகிறான். பிச்சைக்காரனிடம் பிச்சை எடுக்கும் கதியையும் அடைகிறான். ஒருசமயம் இல்லறம் என்ற காட்டுத் தீயின் தாபம் தாங்காமல் வைராக்கியத்தை அடைகிறான். அரசர் வந்து தனத்தைத் தூக்கிச் சென்றால் உயிரே போனால் போல் வருந்துகிறான். இதனிடையே குடும்பம் என்ற கூட்டத்தில் நொடி நேரமாவது சுகத்தை விரும்பி வாழ்கிறான். காட்டுப் பாதையில் முள்ளும் கல்லும் மலிந்திருக்கும். மலையிலே ஏறுவது மீண்டும் வருத்தம். அதுபோல் வேள்வி முதலிய செயல்களைச் செய்ய முன் வந்து இடையூறுகளால் வருந்தி வாடுகிறான். உறக்கமென்ற மலைப் பாம்பால் விழுங்கப்பட்டுக் காட்டிலே எறிந்து விடப்பட்ட பிணமென்று தோன்றுகிறான். தேனைத் தேடும் வண்டைப் போல் பிறர் மனையாளைச் சேர்ந்து அரச தண்டனையை அடைந்து களிக்கிறான்.

'அரசன் தண்டனைக்குத் தப்பினாலும் கிடைத்த பொருளை மற்றவர் பறித்துச் செல்கின்றனர். பணத்தைக் கொடுத்துப் பேராசைக்காரன் பிடுங்காமல் பழியைச் சுமந்துக் கொள்ளுகிறான். இறந்தவரை மறந்து பிறந்தவரிடம் உறவாடித் தோன்றிய வீட்டுக்குத் திரும்ப வேண்டுமென்ற எண்ணமே அற்றிருக்கும் மாந்தர் எவ்வாறு கடைத்தேறுவார்? வீரனும் புவியாளப் போர்க்களத்தில் மடிகிறான். சில சமயம் பெண்ணென்ற பைங்கொடியால் கட்டுண்டு, கிளையிலிருக்கும் குயிலோசை போன்ற மைந்தர் சொல் செவியுற்று நிற்கிறான். காட்டில் வரும் சிங்கம் போல் வாழ்க்கையின் முடிவு துரத்தி வருங்கால் பயனற்ற கொக்கும் கழுகும் போன்ற அற்பரிடம் நட்புக் கொள்கிறான். இவர்கள் தன்னைக் காப்பாற்றத் திறமற்றவரெனத் தெரிந்து அன்னம் போல் தூய்மையான பெரியோரை அண்டியும், அவருடைய நல்வழியில் பற்றுதல் இல்லாது, குரங்கென வாழும் கீழோரிடம் சேர்ந்து கொண்டும் மனம் போனபடி மானங்கெட்டு வாழ்ந்து தனக்கு வரும் இறப்பையும் மறந்திருக்கிறான். வாழ்க்கை என்ற வழியில் வியாதியால் வருந்தி, துயரமென்ற குகையில் விழுந்து அங்கிருக்கும் யானை என்ற மரணத்துக்குப் பயந்து, முன் செய்த செயற் பயன் என்ற மெல்லிய கொடியைக் கைப்பற்றித் தொங்குகிறான். தப்பியும் முன்போலவே திரிகிறான்.

"ஏ, ரஹூகணா, இந்த வாழ்க்கையில் ஆசையுறாதே! பற்றை அறுத்துப் புலனை அடக்கிப் பக்தியில் ஈடுபட்ட பெரியோர் போகும் வழியில் போவாயாக. அதுதான் முக்தியை அளிக்கும்."

பரதரைப் பற்றிப் புராணம் புகழுகிறது:

கருடனைபோல பூச்சிதான் பறக்குமோ?
பரதன் போல் வேறரசர் வாழ்வரோ?
முற்றிலும் சிறு வயதில துறந்தவர்
பற்றென்ற வேரையே அறுத்தவர்.
உண்மையே நாராயணன் சேவையில்
விண்ணையும் வீட்டையும் மதியார்.
மானென்று விலங்குடலை எய்தித்
தானுகப் பரமனைப் புகழ்ந்தார்
வேள்வியே! யோகத்தின் உருவே!
ஆண்களுக்கிசைவோ! மாயையே
மறை சொன்ன அறத்தினில் நின்றவா!
குறைந்த இம் மானுரையைச் செவி
யுறுவாய்.

பரதனின் கதையைக் கேட்டவருக்கும் சொன்னவருக்கும் செல்வமும் பெரும் புகழும் வயதும் விண்ணுலகும் வைகுண்டமும் எய்துதல் எளிது.

உள்ளத்தால் உயர்ந்தவன்



கோமதி நாகராஜன்

இடையறாத சிந்தனையில் உள்ளுணர்வு கலந்த நிலையில், என் கைகள் துரிதமாக வேலையில் ஈடுபட மறுத்தன. கையிலுள்ள இஸ்திரிப் பெட்டி அசையாது இருக்கவே, முரளி அவசரமாக வந்து என் கைகளை விலக்கி விட்டுத்தானாகவே இரண்டு முறை மடித்து இஸ்திரி செய்துவிட்டு ஆடை அணிந்து கொண்டான். எந்த நிமிஷமும் அவன் ஓர் சுழலும் சக்கரம்தான்! அடுத்த நிமிடம் அவன் குரல் கீழே ஒலித்தது.

'சிட்டுப்போல் என்னைச் சுற்றி வந்த மஞ்சுவின் நடத்தையில் ஏன் இந்த மாற்றம்? புத்தகத்தின் புதிய சூழ்நிலை ஒட்டாத உள்ளத்தின் பிரதிபலிப்பா? அல்லது என்மீதிருந்த பிடிப்பே இற்று விட்டதோ? இருக்காது. இருபது வருட இருண்ட வாழ்க்கையிலின்றும் ஒளி கூட்டி, நான் அனுபவித்து வரும் வாழ்வும், வரிசையும் அவள் தந்தவைதானே!'

'கம்'மென்று தவழ்ந்துவந்த வாசனைத் திரவியங்களின் சுகந்தம் மஞ்சுவின் வருகையைக் கட்டியம் கூறவே, நான் திரும்பினேன். புத்தாடை உடலிலே சரசரக்கக் கூந்தலைக் கோதியபடி அவள் கண்ணாடிமுன் நின்று கொண்டிருந்தாள். அலைகளூடே மீன் துள்ளுவது போல், அவளது சிவந்த கரம் அடங்காத கருங்குழற்கற்றைக்குள் புகுந்து புகுந்து மீண்டது. கண்களின் கடையிலே எண்ணங்களின் தேக்கம் முத்துப் போல் ஒளிர்ந்தது.

அவள் நான் ஆழ்ந்து நோக்குவதை விரும்பாதவள் போல் வெடுக்கென்று முகத்தைத் திருப்பிக் கொண்டாள். என் பார்வையிலேயே குளிர்ந்துவிடும் அந்த இன்முகம் ஏன் இப்படிப் பொலிவு குன்றிப் போய் விட்டது?

"இரு, மஞ்சு! நான் பின்னி விடுகிறேன்" என்று அவளை நெருங்கினேன்.

"உனக்கு எங்கே நேரம் இருக்கிறது, பெரியம்மா?" திரும்பாமலே அவள் என் சேவையை நிராகரித்தாள்.

"இதைவிட வேறு என்ன வேலை எனக்கு?" என்று சிரித்தவாறு கூறிவிட்டு அவளது கூந்தலைச் சிலாவினேன்.

"முரளியின் தேவைகளைக் கவனிக்கவே உனக்கு நேரம் போதவில்லையே!" அவளது குரலில் வெறுப்பு எதிரொலித்தது.

"அவன் ஓர் இயந்திரம்" வகிட்டைச் சரி பார்க்க அவள் முகத்தைத் திருப்பினேன். துடிக்கும் அதரங்களிடையே, அகத்தே வாங்கிக் கொண்டிருந்த உணர்வுகளைத் தேக்கிய தவிப்பு படர்ந்தது.

கூந்தலின் மென்மைக்குள் ஒளிந்து கொண்டிருந்த சிக்கை மெல்லப்பிரித்துப் பின்னி விட்டேன். அவளது சுபாவத்தில் ஏற்பட்டுள்ள சிக்கல் முடிச்சாக இறுகுவதற்கு முன்னமேயே முனைந்து பிரித்து விட வேண்டும்.

சிறிதுநேரத்தில் மஞ்சுளா கிளம்பி விட்டாள். அடுத்த தெருவில் தான் அவள் கணவன் வீடு. வழக்கமான அவளது நமஸ்காரத்திலும் வேற்று பாவங்களையே கூறு போட்டது என்னுடைய மனம்.



"போய் வா, மஞ்சு! நாளைக்குக் கார்த்திகைச் சீர்களோடு விளக்குகளையும் நான் கொண்டு வந்து கொடுக்கிறேன்" என்று வழியனுப்பினேன்.

உள்ளே சென்று பீரோவைத் திறந்து என் சிந்தனையைத் தட்டி எழுப்பிய ஒரு ஜோடி குத்து விளக்குகளையும் எடுத்து மேசையின் மீது வைத்தேன. ஒதுக்கிய துரும்பென அச்சம்பவம் மனத்தளத்தில் மீண்டும் மிதந்து வந்து மோதியது.

இந்த விளக்குகளைத் தேர்ந்தெடுப்பதில் ஏற்பட்ட சிறு மனஸ்தாபம்தான் மஞ்சுவின் பராமுகத்துக்குக் காரணம். அவள் மனத்துக்குப் பிடித்திருந்த அந்த ஜோடியையே நான் வாங்கியிருக்கலாம். ஆனால் மறுத்து விட்டேன். குடும்பத்துக்கேற்ற தேவைகளைப் பொறுக்குவதில் என்னைவிடத் தேர்ந்தவளா அவள்?

முதல் தினம் தலைக் கார்த்திகைக்காக மஞ்சுளாவுக்கு ஒரு ஜோடி விளக்குகள்

வாங்கக் கடைக்குள் நுழைந்தோம். ஒவ்வொன்றையும் அலசி அலசிப் பார்த்து ஒரு ஜோடியை எடுத்து வைத்தேன். இதற்குள் மஞ்சு வேறு ஒரு ஜோடியைப் பொறுக்கிப் 'பில்' போடும்படி கூறிக் கொண்டிருந்தாள். நீவி விட்டாற்போல் ஒரே உயரம்! தற்கால நாகரிகம் போல் அடக்கமற்ற ஓர் எடுப்பு.

"மஞ்சு! அவை வேண்டாம். இதோ பார் நான் எடுத்தவை."

"இல்லை, பெரியம்மா! இவைதான் எனக்குப் பிடித்திருக்கின்றன."

"அவள் இஷ்டம் போல் வாங்கிவிடுவோமே!" என்றார் என் கணவர்.

"ஐய! சிறு பெண்? அவளுக்கு என்ன அனுபவம்? பெண்களுக்கு அடக்கம் அணிகலன் போல, விளக்கு நாச்சியாருக்கும் அடக்கமான தோற்றம் வேண்டாமா? இது வேண்டாம், மேலே பாய வருவது போல நிமிர்ந்து இருக்கிறது" என்று விட்டுக் கொடுக்காமல் பேசி, நான் எடுத்தவற்றையே விலை கொடுத்து வாங்கி விட்டேன்.

இரண்டுக்குமுள்ள விலை வித்தியாசத்தைக் கவனித்துவிட்டுப் பில்லை அலட்சியமாக வீசி எறிந்தாள் மஞ்சு. நான் தேர்ந்தெடுத்தவை எழுபது ரூபாய் குறைவாக இருந்ததுதான் அவளுடைய சீற்றத்துக்குக் காரணமோ?

நாளைக்கே ஐந்து முகங்களுக்கும் திரி போட்டு நெய் வார்த்து ஏற்றி வைத்தாளானால் அறை முழுவதும் தெய்வ சான்னித்தியம் கூட்டும் சுடர் ஒளி 'தகதக' வென்று பிரகாசிக்கும். அதில் அவள் கோபமெல்லாம் கரைந்து விடும். என்னிடம் வந்து அன்பைக் கொட்டுவாள். அவள் சுபாவமே அலாதி.

மறுநாள் பொழுது விடிந்தது முதல் விருந்து ஓடியாடிச் சாமான்களை வாங்கி, வேலைக்காரர்களைத் துரிதப்படுத்தி வேண்டியவற்றைத் தயாரித்துக் கொண்டு காரில் புறப்படத் தயாரானேன். என் உள்ளம் மட்டும் நிறையவில்லை. மஞ்சுவுக்குச் செய்யும் விஷயத்தில் எனக்கு ஏனோ அப்படி ஓர் அர்த்தமற்ற ஆதங்கம்!



முரளி பெட்டியினுள் உடைகளை அடுக்கிக் கொண்டிருந்தான். அவனது பிரயாண ஏற்பாடு என் கவனத்தைக் கவரவில்லை. நான் புறப்படுவதைக் கண்ட அவன், "அம்மா! எதுவரையில் போகிறாய்?" என்று கேட்டான்.

"மஞ்சுவின் வீடு வரைக்கும்!" என்றேன் நான்.

"நான் புறப்படுவதற்குள் நீ வந்து விடுவாயல்லவா?"

"உம், பார்க்கலாம்!"

என் அவசரத்துக்கு அவனது கேள்வி பெருந் தடையாகத் தோன்றியது.

•

வாசற்படியிலேயே மஞ்சுவின் குரல் கேட்டு என் நடை தயங்கிவிட்டது.

"பெரிய ஜோடிகளை விலை அதிகம் என்று பெரியம்மா தட்டிக் கழித்து விட்டார். அவர் முன்போல் இல்லை!"

நெஞ்சிலே வார்த்த எண்ணங்களுக்குத் தீயிட்டாள் அவள் மாமி. "அவள் எப்படி முன்போல இருப்பாள்? அனாதையாகக் கிடந்தவளை அழைத்து வந்து ஸ்தானத்திலே வைத்தாய். அப்பொழுது தனிக் கட்டை. இன்று வாரிசுக்கு மகன் வந்திருக்கிறான். இனி அவனுக்குச் சேர்த்து வைக்கப் போக மீதியிருந்து, விருப்பமிருந்தால் தானே உன் பங்குக்குச் செய்வாள்! நீ ஓர் உபகாரியாதவள்!"

கோபமற்ற நிலையில் கதவை இறுகப் பற்றிக் கொண்டேன்.

'அந்தக் காலத்திலே ரெண்டு கொண்டிருக்கும் சோபாவின் மறைவிலே நான். மா...ப்பட்டிருந்து வேலைக்காரரின் சம்பந்தி


யாகிய நான் சொற்களைத் தொடுத்து, பலவீனத்தை விளம்பரப் படுத்தக் கூடாது.' பளீரென்று வெட்டிப் பறித்த கௌரவ உணர்ச்சி அசாதாரணப் புன்னகையாக மலர, நான் கல கல வென்று பேசிச் சீர் வகையறாக்களை அடுக்கி வைத்தேன். பதில் உபசரணையையும் பெற்றுக் கொண்டேன்.

வீடு வந்து சேரும் வரையில்தான் என் உறுதி நிலைத்திருந்தது. என் புது வாழ்வின் முதல் அத்தியாயமாகக் காட்சி தந்த பங்களாவும், கார் சவாரியும் முன்னாக உடலை உறுத்தின.

வெளியூருக்குப் புறப்படத் தயாராகப் பெட்டியுடன் நின்று கொண்டிருந்த முரளியைக் காணவும், எல்லையற்ற வெறுப்பு குமைந்து வந்தது.

"அம்மா! நான் மதுரை வரை போய் வருகிறேன்" என்றவன் என் பதிலுக்காகவும் நிற்கவில்லை. போர்டிகோவைக் கடந்த காரை அவன் உபயோகப்படுத்திக் கொள்ளவும் இல்லை. எதிரே விரைந்த வாகனங்களின் பக்கமும் திரும்பவில்லை. வளர்ந்து கொண்டிருந்த ஜன சந்தடியிலே பாதசாரியாகக் கலந்து விட்டது அவனது நெடிய உருவம். நான் நெட்டுயிர்த்தேன்.

முரளி வாழத் தெரிந்தவன். உலகத்தை உணர்ந்தவன். போலிப் பூச்சுத் திரைக்குள் ஒளிந்துள்ள இதயத்தை



சமீபத்தில் இந்தியாவுக்கு வந்திருந்த அமெரிக்கக் கோதுமை ஆராய்ச்சிக் குழுவினர் சென்னையில் செஞ்சுரி பிளவர் மில்ஸ் லிமிடெட்டின் தொழிற் சாலைக்கு விஜயம் செய்தபொழுது எடுத்த படம். உலகத்திலேயே இதற்கு ஈடான தொழிற்சாலை இல்லை என அபிப்பிராயம் கூறினர்:

அறிந்தவள்! கணவனால் ஒதுக்கப்பட்ட தாயின் வயிற்றிலே பிறந்து, வறுமைப் புழுதியிலே புரண்டு, ஊர்ப் பிச்சையாக வளர்ந்து, உலகின் எங்கோ ஓர் மூலையில் உழைத்து ஆளாகி வந்தவனுக்குப் பங்களாவும் காரும் எதற்கு? புதிய சூழ்நிலையிலும் தாமரையிலைத் தண்ணீராக ஒட்டாத அவனது அலட்சியம் அவன் சுபாவத்துக்குத் தனி கம்பீரம்!

"எனக்கு மட்டும் ஏன் இந்தச் சபலம்? வாழ்வோடும் வரிசையோடும் நான் பிறந்தேனா? அந்தஸ்தை உதறி விட்டு வெளியேறினால் நான் பழைய ஜானு நான். நாடோடி மகனின் தாய்! இந்தத் திடீர் போகம் எதற்கு? இல்லை. இந்த ஸ்தானம் எனக்குத்தான் சொந்தம். இந்தக்கிருகத்திலே முதன் முதல் இல்லக்கிழத்தியாக அடி எடுத்து வைத்த எனக்கு இல்லாத உரிமை யாருக்குண்டு? இருபது வருடங்களாக என் ஸ்தானத்திலிருந்து வஞ்சிக்கப்பட்டதால் முழு வாழ்நாட்களையுமே தியாகம் செய்துவிட வேண்டுமா?" கனன்று எழுந்த எண்ணப் போராட்டத்தில் உடல் துவள, அருகேயிருந்த பெஞ்சியின்மீது சாய்ந்தேன்.

"மஞ்சு!...... என் வாழ்க்கையைத் துண்டாடி என் உரிமையைப் பறித்து அனுபவித்தவளின் மகள்...அவள் என்னை எந்த முறையில் எடை போட முடியும்?

ஆறு வருடங்களோடு வாழ்க்கையின் எல்லா இன்பங்களும் முற்றுப் பெற்ற நிலையில் முரளியின் மழலைதான் எனக்கு மருந்தாக இருந்தது. அவன் தந்தை வடக்கே ஊர் ஊராகச் சுற்றி வந்ததால் மூன்று வருடங்கள் கிராம வாசத்திலேயே கழிந்தது. திடீரென்று ஒருநாள் அவரது மறு விவாகச் செய்தியும் என் சம்ரட்சணைப் பிச்சையும் என்னைத் தேடி வந்த பொழுது, நான் கதறித் துடித்துக் கண்ணீர் பெருக்கவில்லை.

அம்மாவின் காலத்துக்குப் பிறகு, குடும்பத் தலைவனின் அவசியத்தை நினைக்கத் தூண்டியது முரளியின் நடத்தை. ஒருநாள் எனது ஒரு ஜோடி தங்க வளையல்களைப் பையில் போட்டுக் கொண்டு என்னிடம் கூடக் கூறாது ஓடி மறைந்தான். பெற்றவன் துறந்த மகன் எப்படியாவது பிழைத்துக் கொள்ளட்டும்!



வித்வான்: கச்சேரி செய்யறதை நீங்க என்னவோ இலேசா நினைச்சுக் கொண்டிருக்கிறீர்கள்! மேடை ஏறும் போதே, தூக்கு மேடையில் ஏறுவது போல்தான் இருக்கு சார்!"

ரசிகர்: ரொம்ப சரி! தண்டனையாக கச்சேரி செய்வதற்கு முன்னேயே நீங்க அடைந்துவிடுறீங்க போலும்!

மௌனத்திலே தேய்ந்த வைரங்கள். இனந் தெரியாத பகைமை நெஞ்சிலே படர்ந்து வந்த புத்துணர்ச்சி ஒருநாள் உண்மையாயிற்று! வாசலில் கப்பல் போல் வந்து நின்ற காரிலிருந்து பன்னிரண்டு வயதுச் சிறுமி இறங்கி வந்தாள். சிரம் பூமியிலே படக் குனிந்து வணங்கி, "பெரியம்மா!" என்று என்னை அழைத்துக் கொண்டாள்.

இருபது வருடங்களுக்கு முன்பு மூன்று முடிச்சுக்களிட்டவரை, பொங்கி வந்த உணர்ச்சிகளோடோ, துளிர்த்து வந்த அன்போடோ, அன்றி அளித்து வந்த பிச்சைக்காக நன்றி வழிந்த நயனங்களோடோ நான் ஏறிட்டுப் பார்க்க

வில்லை. தாயின் பிரிவைத் தாளாது துடித்த பிஞ்சு இதயத்தின் அன்பு ஒலி இயக்க அவர்களைத் தொடர்ந்தேன்.

திரண்ட ஐசுவர்யத்தை ஒரு கொத்துச் சாவிக்குள் குலுக்கியபடி அந்த வீட்டின் தலைவியாக நான் உலவி வந்தேன். இன்பத்தின் எல்லையை நகையும் பட்டுமாக, பங்களாவும் காருமாக வரிசையோடு பல கோணங்களில் அனுபவிக்கப் பருவ மங்கையாக நான் வரவில்லை. உதிர்ந்த மரமாக, உணர்ச்சிகள் பட்டுப்போய் நாற்பது வயதைத் தாண்டிய தாயாக வந்தேன். வருடங்களாகத் தேக்கிக் கிடந்த அன்புப் பிரவாகத்தில் மஞ்சுவை நீராட்டினேன்.

மஞ்சுவுக்கு நல்லதோர் இடத்தில் விவாகம் நடந்தது. மூன்று மாதங்களுக்கு முன்புதான் அஞ்ஞாதவாசத்திலிருந்து முரளி மீண்டான். தந்தையும், மகனும் முதற் சந்திப்பிலேயே அதிர்ச்சியுற்றனர். அந்த வீட்டின் ஒரே மகன்! மூத்த மகன்! இளமையெல்லாம் இன்னல்களிலே ஓட்டிவிட்டுத் தனது ஸ்தானத்துக்கு வந்து சேர்ந்தும் அதை அவன் உணர்ந்தானா? உரிமைகள் நசுக்கப்பட்ட தாயின் அரவணைப்பிலே வளர்ந்ததினால் அவன் நடத்தையே ஒரு புதிர்!

மஞ்சுவின் மனமாற்றச் சிக்கலை அவிழ்க்க முடியாமல் எழுந்தேன்.

"அந்த வீட்டை மஞ்சுவின் பேரில் வாங்க நினைக்கிறேன். நீ என்ன சொல்கிறாய்?" என்று அவர் என்னை வினவினார்.

"வீட்டை முடிக்க இப்பொழுதென்ன அவசரம்? காக்கப் போட்டால் விலை இறங்குவதைப் பார்த்து வாங்கலாமே?" என்று மிக சகஜபாவத்தோடு கூறினேன்.

மஞ்சுவின் கண்களில் சீற்றத்தின் செம்மை திரண்டது. உணர்ச்சிகள் கொதித்து எழ அவளது நாவு கடுசரங்களை உதிர்த்தது. "பெரியம்மா! அப்பா சேர்த்த சொத்தை உன் மகனுக்கே விஸ்தரிப்படுத்தி, நீயே அனுபவித்துக் கொள். அதிலிருந்து என் பங்குக்கு நீ ஒன்றும் செய்ய வேண்டாம். ஆனால் இந்தப் பணமும், அந்தஸ்தும் உனக்கு நான் தந்தவை என்பதை மறக்காதே!"

புயலாக அவள் மறைந்த அதிர்ச்சியில் ஊமையாக நான் நின்றேன். "அம்மா!" என்ற குரல் என் பிரக்ஞையைத் தட்டி எழுப்பியது. பெட்டியைச் சுமந்தபடி முரளி நின்று கொண்டிருந்தான்.

"அம்மா! என் வரவால் உனது ஸ்தானத்தின் தவிப்பை நான் உணருகிறேன். இருபது வருடங்களுக்குப் பிறகு கிடைத்த உன் மன அமைதியைப் பறிக்க மாட்டேன்; இங்கு இனி நான் இருக்கமாட்டேன், வருகிறேன்."

"முரளி, எங்கேயடா நீ போவாய்?"

"இத்தனை வருடங்களாக எங்கு இருந்தேனோ, அங்கே செல்வேன்."

அவனது முரட்டுக் கரங்கள் என் கைகளுக்குள் சிக்கித் தவித்தன. "அம்மா! உரிமையை நிலைநாட்டிச் சொத்தை அனுபவிக்க இங்கு நான் வரவில்லை. அது பணத்திலே பிறந்தவர்களுடைய பிரச்னை. அறியாத பருவத்திலே உனது ஒரு அணிகலனையும் எடுத்துச் சென்ற செயலுக்குப் பரிகாரமாக இதை உன்னிடம் சேர்ப்பிக்க வந்தேன். நான் வரட்டுமா?" நரம்புகளோடிய என் கைகளில் கண்ணைப் பறிக்கும் கல் வளையல்கள் மின்னின. கல் நெஞ்சத்தின் கலக்கம் கண்களிலே வரியிட அவன் நடந்தான்.

தெருவிலே நிரம்பி வழிந்த ஜன வெள்ளத்தோடு என் பார்வை கலந்தது. உழைப்பால் உயர்ந்த தோள்களை நம்பி, உள்ளத்தால் உயர்ந்தவன் தன் யாத்திரையைத் தொடங்கி விட்டான். இதயத்தின் கனிவு கண்களில் பனியாகப் படர்ந்தது. "அம்மா!" என்ற அன்புக் குரல் என் இதயத்தோடு கலக்க, என்னை நெருங்கி வந்த மஞ்சுவை நான் வாஞ்சையோடு நோக்கினேன்.

திருவாதிரை


நமக்கு ஒரு வருடம், தேவர்களுக்கு ஒரு நாள். அதில் மார்கழி மாதம்தான் அவர்களுக்கு அதிகாலை நேரம் என்று சொல்கிறார்கள். மார்கழி மாதத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில் ஈசுவரனுக்குக் குளிரக் குளிர அபிஷேகம் செய்வித்து மகிழ்கிறார்கள் பக்தர்கள்.


இம்மாதத்தில் பௌர்ணமியை ஒட்டித் திருவாதிரை நட்சத்திரம் இருக்கிறது. சந்திரன் இல்லாத சமயங்களில் இதே திருவாதிரை நட்சத்திரம் தனிச்சென்று தெரியும். மிருகசீரிஷ நட்சத்திரத்தை மையமாக நினைத்துக் கொண்டு திருவாதிரை நட்சத்திரத்தையும், அதைச் சுற்றியுள்ள நட்சத்திரங்களையும் கவனித்தால் நடராஜ தாண்டவமூர்த்தியின் வடிவம் போலவே பிரபையுடன் இருப்பதைக் காணலாம். இதை ஆருத்ரா தாண்டவம் என்பார்கள்.

இறைவனின் ஆனந்தத் தாண்டவம் அண்ட சராசரங்களை ஆட்டி வைக்கிறது. இந்தத் தாண்டவத் திருக்கோலத்தைக் காண எக்கா... விசேஷமாக வர்ணிக்கிறார்கள் அருளாளர்கள்:

விரவிய வங்கணை னெங்கணு மவிரிசடை மண்டிட லேந்திட
எரிவிர செங்கைக முன்றிட முடிதடி கொளெடுட எண்டிசை
பரிபுர புண்டரி கந்தரு பதயுக ளம்பல நன்கொளு
அருள்புரி எந்தைம டந்தையும் அதிர நடஞ்செய் தொடங்கினன்.

ஈசனின் இந்த நடனக் காட்சியை நமக்கு அட்டையில் தருகிறார் ஓவியர் மணியம்.


Lakmé
டால்கம் பௌடர்
யூ டி கோலான்
லிப்ஸ்டிக்
பேஸ் பௌடர்
டஸ்டிங் பௌடர்
Lakmé
லக்மே
அழகின் அலங்காரத்திற்கென
ப்ரஞ்சு முறையிலிருந்து
தயாரிக்கப்பட்ட சாதனங்கள்
Lakmé
லக்மே ஒரு டாடா தயாரிப்பு


ரூ. 7.75 விலைக்கு உடைபடாத
நிப்புடன் கூடிய சுயமான
"வில்ஸன்" பேனா கிடைக்கிறது
நெடுங்காலத்திற்கு எழுதி இன்பமடைய வில்ஸன் 'அமர்' பவுன்டன் பேனா ஒன்று வாங்குங்கள். வெறும் வர்ண எழிலுக்கும் சரி, திறமையான அமைப்புக்கும் சரி, வில்ஸன் 'அமர்' பேனா ஈடிணையற்றது. 5 வருஷ உத்தரவாதமுள்ள, பொன் முலாமிடப்பட்ட ஆஸ்மி-இரிடிய-முனையுடன் கூடிய நிப்புதான் வியக்கத் தக்க அதன் சேவைக்கு மூல காரணம்.
சேதமடையா நிப்பு உடையது.
எழுதுவதற்குரிய பொருள்களை விற்கும் எல்லா சிறந்த வியாபாரிகளிடமும் பொறுக்கி எடுத்த வசீகர வர்ணங்களிலும், பல மாதிரிகளிலும் கிடைக்கின்றன.
கிரண் அண்டு கம்.
பம்பாய் • சென்னை • டில்லி
பூர்ண திருப்திக்கு வில்ஸன் வாங்குங்கள்
K.C. 58. 1A. TM.
EVEREST

பாண்டிமாதேவி



பன்னிரண்டாம் அத்தியாயம்

அவசரச் செய்தி!

சேந்தன் மகாமண்டலேசுவரரின் அந்தரங்கத் திருமுகத்தை அவளிடம் எடுத்துக் கொடுத்து விட்டுத் தூங்கச் சென்று விட்டான்.

மனத்தில் பெருகும் ஆவலையும், பரபரப்பையும் அடக்கிக் கொண்டு அந்தத் திருமுகச் சுருளோடு தன் தனியறைக்குச் சென்றாள் குழல்மொழி. அதைப் படித்து அறிந்துகொள்வதற்கு முன் அவள் மனத்தில் பல்வேறு உணர்ச்சிகள் தடுமாறின. தந்தை என்ன எழுதி விருப்பாரோ என்று எண்ணும் போதே பயம், பதற்றம், வியப்பு அத்தனையும் அவளைப் பற்றிக் கொண்டன. அவள் இருந்த அறை அவளுடைய கன்னி மாடத்தின் மேற்பகுதியில் ஒதுக்குப்புறமாக இருந்தது. அவளுடைய அணிகலன்கள், அலங்காரப் பொருள்கள், இசைக் கருவிகள், இவையெல்லாம் மறைந்திருந்த அந்தத் தனியறையில் பிறர் அதிகம் பழக முடியாது. பணிப் பெண்கள், வண்ணமகளிர் கூட முன் அனுமதியின்றி அந்த அறைக்குள்ளே வரக் கூடாது.

அறைக்குள் மங்கலாக எரிந்து கொண்டிருந்த தீபச் சுடரின் நுனியைத் தூண்டி விட்டாள். சுடர் குதித்தெழுந்தது. ஒளியும், வனப்பும் மிக்க அந்த அறையின் பொருள்கள் தீப ஒளியில் கவர்ச்சி செறிந்து காட்சியளித்தன. எத்தனை விதமான யாழ்கள்? எவ்வளவு வகை மத்தளங்கள்? இன்னும் இசை, நாட்டியக் கலைகளில் பயிற்சியுள்ளவர்கள் பயன்படுத்தும் வகை வகையான நளின கலைக் கருவிகள் நாற்புறமும் அறையில் தென்பட்டன. குழல்மொழி தீபத்தின் கீழே அமர்ந்து திருமுகத்தைப் பிரித்

நா. பார்த்தசாரதி



தான். தந்தையின் திருமுகத்தையே பார்ப்பது போல் அவள் விழிகளில் பயபக்தி ஒளிர்ந்தது.

"ஒருவர் மற்றொருவருக்கு எழுத்து மூலம் எழுதி அனுப்பும் செய்திக்குத் தமிழில் 'திருமுகம்' என்று எவ்வளவு பொருத்தமாகப் பெயரிட்டிருக்கிறார்கள்! ஒருவர் எழுதியதைப் படிக்கும் போது படிக்கிறவருக்கு எழுதியவரின் முகம்தானே நினைவுக்கு வருகிறது!"

தந்தையின் முகத்தை நினைவுபடுத்திக் கொண்ட போது பெயர்ப் பொருத்தத்தைப் பற்றிய இந்த அழகிய கற்பனையும் அவளுக்குத் தோன்றியது. திருமுகத்தைப் படிக்கலானாள்:

"அருமைப் புதல்வி குழல்மொழிக்கு, எல்லா நலன்களும் பெருகுக! மங்கலங்கள் யாவும் பொலிக.

செல்வக் குமாரி! என்னுடைய இந்தத் திருமுகத்தைப் படிக்கத் தொடங்கும் முன்,—படித்துக் கொண்டிருக்கும் போது, படித்த பின்,-ஒவ்வொரு நிலையிலும் உன் மனத்தில் 'எந்தெந்த உணர்ச்சிகள் அலைமோதும் என்பதை இதை எழுதும் முன்னாலேயே இங்இருந்தே என்னால் நினைத்துப் பார்க்க முடிகிறது. ஆனாலும் எழுத வேண்டியதையெல்லாம் உனக்கு எழுதித்தான் ஆக வேண்டும்.

எப்போதுமே உன் தந்தைக்கு வியப்பு உணர்ச்சி குறைவு என்பது உனக்குத் தெரியும். எதையும், எதற்காகவும், ஆச்சரியமாகக் கருதாமல் சர்வ சாதாரணமாக நினைப்பவனுக்கு அதிசயங்களிலும் அபூர்வ அற்புதங்களிலும் எப்படி ஈடுபாடு

இருக்க முடியும்? ஆச்சரியம் எவ்வாறு ஏற்பட முடியும்? உணர்ச்சிமயமாக வாழ்பவர்களால் வாழ்க்கையில் எதிலும் ஒட்டிக் கொண்டு கலந்து எதையும் அனுபவிக்க முடிகிறது. உணர்ச்சிகளை வென்று புளியம் பழமும் அதை மூடிக் கொண்டிருக்கும் ஓடும் போல் ஒட்டாமல் வாழ்ந்தால் சமயா சமயங்களில் வேதனைப்படத்தான் வேண்டியிருக்கிறது. ஆச்சரியப்படத் தெரியாதவன் மற்றவர்களுக்கு ஆச்சரியப் பொருளாகவே ஆகி விடுகிறான். என்னைப் போன்ற ஒருவன் தனி அறிவாகி மட்டுமே வாழ்ந்து பார்க்க முயன்றால் என்னைச் சுற்றியிருக்கும் பல்லாயிரம் பேர்களுக்கு நான் ஒரு ஆச்சரியம் — ஒரு புதிர் — என்று ஆகி விடுகிறேன். அப்படி ஆகும்போது சந்தர்ப்பங்கள் என்னைக் காலை வாரி விட ஒவ்வொரு கணமும் நெருங்குகின்றன.



புதல்வி! அம்பலவன்வேளான் வந்து கூறிய செய்திகள் ஆச்சரியப்படத் தெரியாது, அதிர்ச்சியுற அறியாமல் இருந்த எனக்கும் அவற்றை உணர்த்தி விட்டன. மற்றவர்களுக்குத் தெரிந்து விடாமல் நானும் ஆச்சரியப்பட்டேன். நானும் அதிர்ச்சியடைந்தேன். உன்னால் எனக்கு ஏற்பட்ட தோல்விகள் அவை. போகட்டும்! நான் அங்கிருந்து புறப்படும்போது எவ்வளவு எச்சரிக்கை செய்து விட்டுப் புறப்பட்டேன்? 'பெண்ணே! வசந்த மண்டபத்தில் வந்து தங்கியிருக்கும் 'துறவியை' ஒவ்வொரு கணமும் அருகிருந்து கவனித்துப் பேணிக் கொள்ள வேண்டியது உன் பொறுப்பு. அந்நியர்களை அவரோடு சந்தித்துப் பழகவிடக் கூடாது' என்று நான் கூறி விட்டு வந்த அறிவுரையை நீ புறக்கணித்து விட்டாய் போலும். துறவியாக வந்து தங்கியிருந்தது யார் என்று நீயே தெரிந்து கொண்டிருப்பாய். தெரியாமலிருந்தால் நாராயணன் சேந்தன் விளக்குவான்.

"யாரோ வந்தார்கள், சந்தித்தார்கள். வசந்த மண்டபத்தில் கூடிப் பேசினார்கள். மறுநாள் விடிந்தபோது வந்தவர்களையும் காணவில்லை, துறவியையும் காணவில்லை, பாதுகாவலில் வைக்கப்பட்டிருந்த அரசுரிமைப் பொருள்களையும் காணவில்லை" என்று வேளான் வந்து கூறினான்.

குழல்மொழீ! வடக்கே போருக்கும், பூசலுக்கும் எதிரிகள் தயாராகிக் கொண்டிருக்கிறார்கள். மகாராணி கவலைகளால் மன நிறைவு இழந்து காணப்படுகிறார். கூற்றத்தலைவர்கள் என்னைச் சரியாகப் புரிந்து கொள்ளாமல் ஏதேதோ கேள்விகளையெல்லாம் கேட்டுத் துளைக்கிறார்கள். தளபதிக்கு என்மேல் இருக்கும் சந்தேகங்களைப் பார்த்தால் அவற்றை இப்போதைக்குப் போக்க முடியாது போலிருக்கிறது. அறிவின் அளவைக் கொண்டு செயல்களைத் திட்டமிட்டு வரும் எனக்கும், உணர்வின் அளவைக் கொண்டு என்னைக் கண்காணித்து வரும் மற்றவர்களுக்கும் நடுவில் இப்படி ஒரு உள்துறைப் பிளவு இருந்து வருகிறது. நான் என் மனத்துக்குள்ளேயே பாதுகாக்க விரும்பும் செய்திகளை அறிந்துகொள்ள முயல்கின்றவர்கள் அதிகமாகி விட்டார்கள். இந்த நிலையில் எனது பலவீனத்தை வளர்ப்பது போன்ற செய்திகளை அம்பலவன் வேளான் வந்து கூறினான். ஆனாலும் நான் இதுவரையில் கலங்கி விடவில்லை. தளர்ந்துவிடவில்லை. சோர்ந்து விட

வில்லை. எனக்கு என்மேல், என் அறிவின் மேல் இன்னும் நம்பிக்கை இருக்கிறது.

இந்தச் சமயத்தில் உன்னிடமும் நாராயணன் சேந்தனிடமும் ஒரு பொறுப்பை அளிக்கிறேன். இடையாற்றுமங்கலத்திலிருந்து நீங்கள் இருவரும் இந்தத் திருமுகத்தைப் படித்த மறுநாள் காலையிலேயே புறப்பட வேண்டும். கொள்ளை போன சுந்தர முடியையும் பொற்சிம்மாசனத்தையும் வீரவாளையும் தேடிக் கண்டுபிடிக்கும் முன்பே அவைகளை ஆளவேண்டியவனைக் கண்டு பிடிக்க வேண்டும். என் அனுமானம் உண்மையானால் அவைகளை ஆள்பவனைக் கண்டு பிடித்தால் அவனிடமே அவைகளைக் காணலாம். அவனைக் கண்டுபிடிக்க வேண்டுமானால் அந்த இளந் துறவியைக் கண்டு பிடிக்க வேண்டும்.

உண்மையை மறைத்து, மறைத்து எழுதுவானேன்? நம்முடைய வசந்த மண்டபத்தில் வந்து தங்கியிருந்த இளந் துறவிதான் குமாரபாண்டியன் இராசசிம்மன். நாராயணன் சேந்தனிடம் கேட்டறிவதற்கு முன் நானே சொல்லி விட்டேன் உனக்கு. ஒரு வேளை எங்கள் இருவரையும் முந்திக் கொண்டு இதை நீ அறிந்திருந்தால் உனக்கு மதி நுட்பம் மிகுதிதான். குமார பாண்டியனை விரைவில் அழைத்து வருவதாக மகாராணிக்கு வாக்களித்து விட்டேன். நானே தேடிக் கொண்டு புறப்பட முடியாதபடி இருக்கிறது சூழ்நிலை. வேறு யாரையும் அனுப்புவதற்குமில்லை. அதில் எனக்கு நம்பிக்கையுமில்லை; உடனே புறப்படுங்கள்! எங்கே எப்படிப் புறப்பட வேண்டுமென்று தயங்காதே. உனக்கு அது தெரியும்! உன் உள்ளத்துக்கும் அது தெரியும். சேந்தனுக்கும் சேந்தனுடைய உள்ளத்துக்கும்கூடத் தெரியும். உரிமையோடும், உரியவனோடும் திரும்பி வாருங்கள். படித்து முடித்ததும் நீ எந்த விளக்கின் ஒளியிலிருந்து இதைப் படிக்கிறாயோ, அதன் சுடர்ப் பசிக்கு இதை இரையாக்கி விடு." அவள் அப்படியே செய்து விட்டாள்.

பதின்மூன்றும் அத்தியாயம்

முள்ளால் எடுத்த முள்

மகாமண்டலேசுவரரான இடையாற்று மங்கலம் நம்பியைச் சாதாரண மனிதராக, சாதாரண உணர்ச்சிகளுக்கு ஆளாக்கிப் பார்க்க வேண்டுமென்று விதிக்கு என்னதான் ஆசையோ? தெரியவில்லை. சந்தர்ப்பங்கள் தொடர்ந்து அப்படி வந்து கொண்டிருந்தன.

கரவந்தபுரத்திலிருந்து அனுப்பப் பட்ட இரண்டாவது தூதன் அரண்மனைக்கு வந்தபோது அவர் மேலும் வியப்புக்கு உள்ளானார். கொற்கைக் கலவரங்களும், வடக்கு எல்லைப் பூசல்களும் பற்றிய செய்திகள் அந்த இரண்டாவது தூதன் மூலம் வந்து சேர்ந்தன. ஏற்கெனவே அனுப்பப்பட்ட மானகவசன் என்னும் தூதன், தான் அங்கிருந்து புறப்படுகிற வரையில் கரவந்தபுரத்துக்குத் திரும்பி வந்து சேரவில்லை என்பதையும்புதிதாகவந்தவன் கூறினான்.

அவற்றைக் கேள்விப் பட்டபோது உணர்வுகள் பதிந்தறியாத அந்த நெற்றியில் உணர்ச்சிகளைக் காண முடிந்தது. இரண்டாம் முறையாக அந்தத் தூதன் வந்திருப்பதையும், அவன் கூறிய செய்திகளையும் மகாராணியாருக்கு அறிவிக்கவில்லை அவர். புதுப் புதுத் துன்பங்களைக் கூறி முன்பே கவலைகள் பெருகியிருக்கும் அந்த மலர் நெஞ்சத்தை மேலும் வாட விடுவதற்கு விரும்பவில்லை அவர். எல்லைக் கற்களை உடைக்கிற அளவு வடக்கே பூசல் நடப்பது அவருடைய பொறுமையையே சோதித்தது.

"உன்னிடமும் ஒரு பதில் ஓலை கொடுத்து அனுப்புகிறேன். ஆனால் நீ அதைக் கரவந்தபுரத்துக்குக் கொண்டு செல்லும்போது இடை வழியில் எங்காவது, யாராவது உன்னிடமிருந்து பறிக்க முயன்றால், சிரமப்பட்டு அவர்களுடன் போராடிக் கொண்டிருக்க வேண்டாம். தாராளமாக விட்டுக் கொடுத்துவிடு."

இடையாற்றுமங்கலம் நம்பி இப்படிக் கூறியபோது வந்திருந்த தூதன் திகைத்துப் போனான். அவனுக்கு அவர் என்ன நோக்கத்தோடு அப்படிச் சொல்லுகிறார் என்பதே புரியவில்லை. அவன் விழித்தான். அவரோ சிறிதும் தாமதம் செய்யாமல் பதில் ஓலை எழுதி உறையிலிட்டு அரக்கு இலச்சினை பொறித்து அவன் கையில் கொடுத்து விட்டார். கொடுத்ததோடு மட்டுமல்லாமல், அந்தத் தூதன் அங்கே அதிக நேரம் தங்கியிருப்பதையே விரும்பாதவர்போல் துரத்தினார். அவனும் புறப்பட்டு விட்டான். அவனை அனுப்பியபின் மகாமண்டலேசுவரர் சிந்தனையில் மூழ்கினார்.

அவருடைய சிந்தனையில் முக்கியமான இடத்தைப் பிடித்துக்கொண்டு நின்ற ஒரே கேள்வி இதுதான்:



இல்லை—லக்ஸினால் சலவை செய்தது!

குளிர் காலத்துக்கான கம்பளித் துணிகள்—ஸ்வெட்டர்கள், கம்பளிச் சட்டைகள், சாக்ஸ், குழந்தைகளுக்கான அரிய ஆடைகள்—எல்லாமே மிக மென்மையானவை, குளிருக்கு அடக்கமானவை, அடிக்கடி அணியப்பட வேண்டியவை. தூய, மென்மையான லக்ஸ் தூள்களால் அவற்றை அடிக்கடி சலவை செய்யுங்கள். கம்பளி ஆடைகளின் வர்ணம், வடிவம், மென்மை யாவும் பாதிக்கப்படாத வண்ணம் எல்லா அழுக்குகளையும் அகற்றுவது லக்ஸ். உங்கள் கம்பளித் துணிகளின் ஆயுளை நீடிக்கச் செய்வதற்கு நீங்கள் அவற்றிற்கு அளிக்க வேண்டிய விசேஷப் பராமரிப்பு—லக்ஸ் பராமரிப்பே.



அழகான ஆடைகளுக்கு நெடுங்காலம் புதுமைத் தோற்றம்
அளித்துக் காப்பது லக்ஸ்

L.X. 140-50 TM — பம்பாயிலுள்ள ஹிந்துஸ்தான் லீவர் லிமிடெடின் தயாரிப்பு

"நெருங்கி வந்து கொண்டிருக்கும் போரை இன்னும் சிறிதுகாலம் பொறுத்துத் தாமதமாக வரச் செய்வதற்கு வழி என்ன?"

இந்தச் சில நாட்களுக்குள் எத்தனையோ துன்பங்களையும், அதிர்ச்சிகளையும், தாங்கி அவற்றைத் தவிர்க்கும் வழி வகைகளையும் உடனுக்குடன் நினைத்து முடிவு செய்திருக்கிறார் அவர். ஆனால் மலைபோல் எழுந்து நிற்கும் இந்தப் பெரிய கேள்விக்கு அவ்வளவு எளிமையாக விடை கண்டு பிடிக்க முடியவில்லை. சிந்தனை பல கிளைகளாய்க் கிளைத்து எங்கெங்கோ சுற்றிப் படர்ந்தது. எத்தனையோ பெரிய படையெடுப்புக்களின் நடுக்கிடத்தக்க நிலைமைகளையெல்லாம் அவர் சமாளித்திருக்கிறார். போரில் வெற்றிகளையும் பார்த்திருக்கிறார். தோல்விகளும் உண்டு. இதே இராசசிம்மன் இப்போது இருப்பதைவிட இளைஞனாக இருந்த காலத்திலும் போர்கள் ஏற்பட்டிருக்கின்றன. பராந்தக பாண்டியர் மறைந்த நாளிலிருந்து எங்கேயாவது ஒருமூலையில் ஏதாவது ஒரு காரணம் பற்றிப் போர் உண்டாகிக் கொண்டுதான் இருக்கிறது.

"உலப்பிலி மங்கலத்துப் போரைக் காட்டிலுமா பெரிய போர் இனிமேல் ஏற்படப் போகிறது? வடதிசை அரசர்களுக்கு ஒத்துழைத்து அந்தப் போருக்கு ஏற்பாடு செய்த கொடும்பாளூர் மன்னன் பாண்டி நாட்டை வென்றுவிடலாமென்று எத்தனை நம்பிக்கை வைத்திருந்தான். கடைசியில் மேலாடையையும் உடைவாளையும் கூடக் களத்தில் எறிந்துவிட்டு உயிர் பிழைத்தால் போதுமென்று தோற்று ஓடும் நிலையை அடைந்தான் அவன்.

அதன்பின் வைப்பூரிலும், நாவற்பதியிலும் நடந்த போர்களில் தஞ்சைப் பெருமன்னனை இரண்டு முறை ஓட ஓட விரட்டினோம். அப்போது பாண்டி நாட்டின் எல்லை விரிந்து பரந்திருந்தது. போர் வீரர்களும் ஏராளமாக இருந்தார்கள். இராசசிம்மனுக்கு அது மிகவும் இளமைப் பருவமாதலால் எதற்கும் அஞ்சாத துணிவும் வாலிபச் செருக்கும் இருந்தன. தளபதி வல்லாளதேவனும், அவனும் உற்சாகமாகப் போர் வேலைகளில் ஈடுபட்டார்கள். பாண்டிய மன்னன் பெருமையைக் காத்துவிட வேண்டும் என்ற ஒரு வீராவேச வெறி அப்போது எங்கும் பரவியிருந்தது. இப்போது மட்டும் அந்தத் துடிப்பு இல்லாமலா போய் விட்டது?

துடிப்பும், துணிவும் இருந்து என்ன செய்வது? சரியான தலைமையில்லை. தொடர்ந்து அடுத்தடுத்து நிகழ்ந்த படையெடுப்புக்களால் படை வசதிகள் அழிவுபட்டுக் குறைந்துபோயின. நாட்டு எல்லை தென்கோடி வரை குறுகி விட்டது. அன்றைய நிலையில் வஞ்சிமா நகரம் வரை சென்று பெரும்படையோடு தனியனாக நின்று தனது தாய்வழிப் பாட்டனுக்கு வெற்றி தேடித் தரும் அளவுக்குக் குமாரபாண்டியன் தீரனாக இருந்தான். கடைசியாக வடதிசையர்கள் ஒன்று சேர்ந்து கொண்டு செய்த போரில் வடபாண்டி நாடாகிய பகுதி முழுவதும் தோற்றுப் போக நேரிட்டு விட்டது. தோற்றால்தான் என்ன? எப்போதுமே வெற்றியடைந்து கொண்டிருக்க முடியுமா? குமாரபாண்டியன் நாடு தோற்றது பெரிதன்று. மனம் தோற்றுப்



பயந்து போய்க் கடல் கடந்து ஓடினானே. அதுதான் பெரிய தவறு. அவனுடைய இந்தத் தவறு வடதிசையரசர்களைப் பெரிய அளவுக்கு ஊக்கமுறச் செய்து மேலும் மேலும் படையெடுத்துவரத் தூண்டுகின்றது. அவன் நாட்டில் இல்லாமல் எங்கோ மறைந்திருப்பது கூடாதென்று, அரிய முயற்சியால் ஈழநாட்டிலிருந்து வரவழைத்தேன்; வந்தான். அவனை இரகசியமாக மறைத்து வைத்திருந்து என்னென்னவோ செய்ய எண்ணினேன். காலம் வரும் வரை பொறுத்திருந்து சரியானபடைபலத்தை உருவாக்கிக் கொண்டு வடபாண்டி நாட்டை மீண்டும் கைப்பற்றியிருக்க

முடியும். மகாராணி வானவன்மாதேவியின் இரண்டு பெரிய கனவுகளை நனவாக்கிவிட எண்ணியிருந்தேன்.

"செந்தமிழ்த் தென்பாண்டி நாட்டின் அரசனாக இராசசிம்மனுக்கு முடிசூட்ட வேண்டும். மணவினை மங்கலம் முடிக்க வேண்டும்."

இராசசிம்மனோ என் திட்டங்களையும், தன் அருமந்த அன்னையின் கனவுகளையும் காற்றில் பறக்கவிட்டுக் கடலைக் கடந்து போய் விட்டான். நான் சேந்தனிடம் கூறியனுப்பியிருக்கும் திட்டப்படி குழல்மொழியும், அவனும், இளவரசனைத் தேடிக் கொண்டுவரப் புறப்பட்டிருப்பார்கள். தளபதி வல்லாளதேவன் கோட்டாற்றிலுள்ள தென்திசைப் பெரும் படையைப் போருக்குத் தயார் செய்துகொண்டிருப்பான். எப்படியிருந்தாலும் நமக்குப் பிறருடைய 'உதவ வேண்டும். இராசசிம்மன் மனம் வைத்தால் ஈழ நாட்டுக் காசிப மன்னரிடமிருந்து கூடப் படை உதவி பெற்றுக் கொண்டு வரமுடியும்.


பார்க்கலாம்! எப்படி எப்படி எது எது நடக்கிறதோ? இப்போது செய்ய வேண்டிய முதல் வேலை வந்து கொண்டிருக்கிற போரை உடனடியாக வரவிடாமல் தடுப்பது."

மகாமண்டலேசுவரருடைய நினைவுகள் ஒரே வட்டத்துக்குள் சுற்றிச் சுற்றி வந்தன. அவர் மனத்தில் தென்பாண்டி நாட்டின்மேல் படையெடுக்கத் துடித்துக் கொண்டிருந்தவர்கள் ஒவ்வொருவராக மானசிகத் தோற்றத்தில் தோன்றிக் குழப்பிக் கொண்டிருந்தனர். கோப்பரகேசரி பராந்தகசோழன், கொடும்பாளூரான், இளைப் பழுவூர்க் கண்டன் அமுதன், அரசூருடையான் சென்னிப் பேரரையன்,—இந்த நான்கு எதிரிகள் தாம் படையெடுப்பு ஏற்பாட்டில் ஒருமுகமாக முனைந்திருப்பதாகக் கரவந்தபுரத்திலிருந்து வந்த செய்தி கூறியது. ஆனால் மகா மண்டலேசுவரருக்கு எட்டியிருந்த வேறு சில செய்திகளால் இதில் பரதூருடையான் என்னும் மற்றோர் பெருவீரனும் சம்பந்தப்பட்டிருப்பதாகத் தெரிந்தது. படைகளிலும், போர்ப் பழக்கத்திலும், வல்லவர்களான இந்த ஐந்து பேரும் ஒன்றுகூடிய கூட்டணியை முறியடிப்பது எளிமையானதல்ல வென்று அவரும் உணர்ந்தார். ஆகையால் தான் அந்தப் போர் விரைவில் நெருங்கி வந்துவிடாதபடி எப்படித் தடுப்பதென்ற சிந்தனையில் அவர் ஆழ்ந்து மூழ்க நேர்ந்தது. எதிரிகள் எவ்வாறு நேரடியாகப் போருக்கு வந்து

மெட்டல் பாக்ஸ் கம்பெனி வெள்ளி விழா



உயர்தரமான டப்பாக்களும் 'பாக்கிங்' சாமான்களும் தயாரிக்கும் மெட்டல்பாக்ஸ்கம்பெனியின் வெள்ளி விழா சமீபத்தில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. விச்வான தேநீர் விருந்துபசாரத்துக்குப் பின் இக் கம்பெனியின் தலைவர் திரு எச். ஜீ. சின்வெல் ஜோன்ஸ், ஓ. பி. இ. இக் கம்பெனியின் நடவடிக்கைகளைப் பற்றிச் சுருக்கமாக விளக்கினார். அச்சமயம் ஸ்ரீமதி ஜோன்ஸ் வெள்ளிவிழா கேக்கைப் பகிர்ந்து கொடுப்பதையும், கம்பெனியார் தயாரிக்கும் பொருள்களின் படத்தைத் தலைவர் பார்வையிடுவதையும் இப் படங்களில் காணலாம்.



வட ஆர்க்காடு ஜில்லா தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் துவக்க விழா நவம்பர் 30-ந் தேதி தினமணி துணை ஆசிரியர் ஸ்ரீ ஏ. ஜி. வேங்கடாச்சாரியார் அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. வட ஆர்க்காடு ஜில்லா கலெக்டர் திரு பாஸ்கரத் தொண்டைமான் விழாவினைத் துவக்கி வைத்தார்; கலைமகள் ஆசிரியர் திரு கி. வா. ஜகந்நாதன் சங்கத்துக்கு ஆசியுரை வழங்கினார்.

விடாமல் கலவரங்களையும், குழப்பங்களையும் ஏற்படுத்திச் சூழ்ச்சி செய்திருக்கிறார்களோ, அப்படி நாமும் ஏதாவது செய்தால் என்னவென்று அவருக்குத் தோன்றியது.

சிந்தித்துக் கொண்டே இருந்தவர் திடீரென்று ஒரு முடிவுக்கு வந்தவர் போல் அரண்மனை மெய்க் காவலர் படைத் தலைவன் சீவல்லபமாறனை அழைத்து வருமாறு ஓர் சேவகனை அனுப்பினார். அவரால் அனுப்பப்பட்ட சேவகன் சீவல்லபமாறனைக் கூப்பிட்டுக் கொண்டு வருவதற்கு அவசரமாகச் சென்றான்.

மகாமண்டலேசுவரர் குறுக்கும், நெடுக்குமாக உலாவுவது போல் நடந்தார். 'முள்ளை முள்ளால்தான் எடுக்க வேண்டும். வேறு வழி இல்லை'—வாய்க்குள்ளேயே இந்தச் சொற்களை மெல்லச் சொல்லிக் கொண்டார். கைகளைப் பின்னால் கட்டிக் கொண்டு அளவு பிசகாமல் காலடி பெயர்த்து வைத்து அவர் நடந்த நிமிர்வான நடை உள்ளத்துச் சிந்தனையின் தெளிவைக் காட்டியது.

சீவல்லபமாறன் வந்து அடக்க ஒடுக்கமாக வணங்கிவிட்டு நின்றான். மகாமண்டலேசுவரர் அவனை வரவேற்றார்: "வா அப்பா! உன்னை வரவழைத்த காரியம் மிக அவசரம், அதற்கு நீ தயாராக இருப்பாய் என்றே நினைக்கிறேன்" என்று கூறினார்.

"மகாமண்டலேசுவரரின் கட்டளை எதுவாக இருந்தாலும் அதற்கு அடியேன் தயாராக இருந்துதான் ஆக வேண்டும்."

"கட்டளை இருக்கட்டும். அதற்கு முன்பு வேறொரு எச்சரிக்கை. நீயோ மெய்க்காவற்படைத் தலைவன். மெய்க் காவலனுக்கு மெய்யைக் காக்கத் தெரிந்திருக்க வேண்டும். இப்போது நான் கூறப் போகும் மெய் உன்னையும், என்னையும், தவிர்த்துப் புறம்போகக் கூடாத மெய். ஒரு பெரிய காரியத்தைச் சாதிக்கப் போகிற மெய்."

"புறம்போகக் கூடாதென்பது தங்கள் விருப்பமாயின் அப்படியே மனத்தில் பாதுகாத்துக் கொள்ளுவேன்."

"நல்லது! ஏற்பாட்டைச் சொல்லட்டுமா?"

"சொல்லுங்கள்!"

"பொய்களை உண்மைகள் போல் சொல்லத் தெரிந்தவர்களாகவும், எங்கும், எந்த விதத்திலும் வேடமிட்டு நடிக்கத் தெரிந்தவர்களாகவும், உயிருக்கு அஞ்சாதவர்களாகவும், ஓர் ஐம்பது வீரர்கள் இப்போதே உன்னிடமிருந்து எனக்குத் தேவை!"

அவரையும், அவருடைய வார்த்தைகளையும் விளங்கிக் கொள்ள முடியாமல் திணறிப் போய் மருண்டு பார்த்துவிட்டுக் கேட்டான் அவன்:

"ஐம்பது வீரர்களா வேண்டும்?"

"ஆம்! எண்ணி ஐம்பது பேர்கள் வேண்டும் எனக்கு."

"அரண்மனை மெய்க் காவற் படையினரில் இருந்துதான் ஐம்பது பேர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். வேறு ஆட்கள் இல்லை."

"செய்! ஆனால் அப்படித் தேர்ந்தெடுக்கப்படுகிறவர்கள் நான் கூறிய தகுதிகளுக்குப் பொருந்தியிருக்க வேண்டியது மிகவும் அவசியம்."

சீவல்லபமாறன் அதற்கு ஒப்புக் கொண்டு போனான். மகாமண்டலேசுவரர் எதை எண்ணியோ சிரித்துக் கொண்டார். அந்தச்சமயத்தில் வண்ணமகள் புவனமோகினி அந்தப் பக்கமாக வந்து சேர்ந்தாள்.

"சுவாமீ! தளபதி வல்லாளதேவனின் தங்கை பகவதியைக் காணவில்லை. இன்று காலை மகாராணியார் பார்த்து அழைத்து வரச் சொன்னார்கள். போய்ப் பார்த்தேன். இல்லை, அரண்மனையில் எங்குமே தளபதியின் தங்கையைக்

காணாததால் எங்களுக்கு ஒரே கவலையாக இருக்கிறது. செய்தியை அறிந்து மகாராணியாரும் மனக் கலவரமடைந்தார்கள். தங்களிடம் தெரிவிக்கச் சொன்னார்கள்.

"அதங்கோட்டாசிரியர் மகள் விலாசினியைக் கேட்டால் தெரியுமே? அந்தப் பெண்கள் இருவரையும் எப்போதும் சேர்த்தே காண்கிறேன் நான்"-வியப்பை மறைத்துக் கொண்டு பதில் கூறினார் மகா மண்டலேசுவரர்.

"விலாசினி இங்கு இல்லை. இன்று காலை ஆசிரியரும், பவழக்கனிவாயரும் ஊருக்குப் போகும்போது அந்தப் பெண்ணும் போய்விட்டாள்" என்று மீண்டும் பரபரப்பான குரலில் முறையிட்டாள் வண்ண மகள்.

"அந்தப் பெண் காணாமல் போய் விட்டாளே என்று மகாராணியோ நீங்களோ, யாருமே கவலைப்பட வேண்



டாம். அவள் தைரியசாலி. ஏமாறுகிறவள் இல்லை. ஏமாற்றும் ஆற்றலுள்ளவள். காரியமாகத்தான் அவள் காணாமல் போயிருப்பாள்."

பெரிதாகக் கவலைப்படும்படி எதுவும் நடந்து விடாததுமாதிரி அலட்சியமாகப் பேசினார் அவர். மகா மண்டலேசுவரர் அந்தப் பெண் காணாமற் போனது பற்றி அக்கறையில்லாமல் பேசுவது ஏனென்று வண்ணமகளின் சிற்றறிவுக்கு எட்டவில்லை. அவள் திரும்பிச் சென்றாள்.

"ஆண்களும், பெண்களும், சிறியவர்களும் பெரியவர்களுமாகத் தெரிந்தும், தெரியாமலும் என்ன என்னவோ செய்துகொண்டுதான் இருக்கிறார்கள் இந்த அரண்மனையில். காணாமற் போகிறார்கள்; வருகிறார்கள். என்னைப்போல் பொறுப்பும், பதவியும் உள்ளவனுக்குத்தான் மாபெரும் அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த காரியங்கள் இருப்பதாக நான் நினைத்துப் பெருமைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். கூர்ந்து நோக்கினால் வேறு சிலரும் இந்தப் பெருமைக்குப் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்றல்லவா தெரிய வருகிறது!" வேடிக்கையாக இவ்வாறு எண்ணி நகைத்துக் கொண்டார் அவர்.

அப்போது சீவல்லபமாறன் திரும்ப வந்து, "மகாமண்டலேசுவரரின் திருவுள்ளப்படி திறமையான வீரர்களைத் தயார் செய்துவிட்டேன். அவர்கள் எல்லோரும் காவற்படை மாளிகையில் தங்கள் கட்டளையை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள். இனி மேலே செய்ய வேண்டியதென்ன?"—என்றான். அவர் புன்னகை பூத்தார்.

"மேலே செய்ய வேண்டியதா?....... இதோ இப்படி என் அருகில் வா... சொல்கிறேன்."

சீவல்லபன் மகாமண்டலேசுவரருக்கு அருகில் சென்றான்.


"உன் வலது உள்ளங்கையை நீட்டு." அவன் நீட்டினான். குபீரென்று ஒரு நீளமான கருவேல முள்ளை எடுத்து அவனது சிவந்த உள்ளங்கையில் பதியும்படி குத்தினார் அவர். அவன் வலி பொறுக்க முடியாமல் கையைப் பின்னுக்கு இழுத்துக்கொண்டு அவருடைய செயலின் பொருள் புரியாமல் முகத்தைச் சுளித்துக் கொண்டான்.

"வேறொரு கருவியின் துணையின்றி இதை எப்படி எடுப்பாய்?" ஒன்றுமறியாத பச்சைக் குழந்தையை வினவுவது போல் வினவினார்.


"......"—அவன் பதில் கூறவில்லை. "இதோ இப்படி எடுக்க வேண்டும்" என்று மற்றொரு கூரிய முள்ளால் அதைக் கிளறி வெளியே எடுத்துவிட்டுச் சிரித்தார் அவர். குன்றிமணி பழுத்ததுபோல் ஒரு துளி குருதி உருண்டு எழுந்தது அவன் கையில்.

மகாமண்டலேசுவரரின் அதிசயிக்கத்தக்க இந்தச் செயல் மெய்க்காவலர் படைத் தலைவனை சீவல்லபமாறனைத் திகைக்க வைத்தது. குழம்பிய உள்ளத்துடன் அவன் அவரைப் பணிவோடு நிமிர்ந்து பார்த்தான். அவர் என்ன சொல்லப் போகிறார் என்று அறியும் ஆவல் அவன் முகத்தில் நிறைந்திருந்தது.

"சீவல்லபமாறா! நீ தயார் செய்திருக்கும் வீரர்கள் இதுபோன்றதொரு வேலையைத்தான் செய்ய வேண்டும். உனக்கு விளங்கியிருக்காது. விளக்கமாகச் சொல்கிறேன். கேள்!" என்று ஆரம்பித்தார் அவர். (தொடரும்)



தசை
வலியா?
நோபெயின்
வலியை வேகமாக
நிவர்த்திக்கிறது
NOPAIN
சுகாதாரமான சீல்வைத்த
டியூபுகளில்
ஒரு கல்கத்தா கெமிகல் தயாரிப்பு
நோபின் புதிய ரிஜிஸ்டர்டு டிரேட்மார்க் விரைவில் அறிமுகப்படுத்தப்படும்
தென்னிந்திய ஆபீஸ்: 5/149, பிராட்வே, சென்னை - 1




நரஸுஸ் காபி
அருந்தி அதன்
பிரத்யேகமான
ருசியை
அனுபவியுங்கள்
நரஸுஸ்
மான்யுபாக்சரிங்
கோ. பிரைவேட் லிட்.
சேலம் & சென்னை



எப்போதும்
கவனத்திலிருக்கட்டும்-
OVALTINE
ஓவல்டின்
மிதமிஞ்சிய உடல் சக்திக்கும், குடும்ப ஆரோக்கியத்துக்கும், புத்துணர்ச்சியூட்டும் ஆழ்ந்த நித்திரைக்கும் இணையற்றது — ருசி மிகுந்த சத்துள்ள பானம் 'ஓவல்டின்!' உலகத்திலேயே எல்லோரும் விரும்பிப் பருகும் உணவுப் பானம் இதுதான்.
OVALTINE
NET WEIGHT

525 T



அன்பு எங்கே?

இந்த ஒரு கேள்விக்குப் பதில் கிடைக்க வேண்டுமானால் திரைக் கதையைத் தெரிந்து கொள்ள வேண்டும். திரைக் கதையைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் கீழே காணும் கேள்விகளைப் படிக்க வேண்டும்.

பொழுதையும், பொருளையும் சீட்டாட்டத்தில் செலவிட்ட பங்கு மார்க்கெட் வியாபாரி மாசிலாமணி முதலியார் திருந்தினாரா?

அவர் மூத்த மகன் ராமு தன் மனைவி அமுதாவுக்கு வாழ்வளித்தானா?

மது மங்கையர் மோகத்தில் மதிமயங்கிக் கிடந்த சோமு (ராமுவின் தம்பி) திருந்திய வாழ்வுக்குத் திரும்பினானா?

கைப் பிடித்த கணவன் நாகரிகமாயில்லை என்ற காரணத்தால் அவனோடு வாழ மறுத்துப் பிறந்தகத்திலேயே இருந்த காமு மீண்டும் கணவனை யடைந்தாளா?

போலிச் சாமியாரை நம்பி மோசம்போய்க் கொண்டிருந்த அலமேலு (மாசிலாமணியின் மனைவி) விஷயம் தெரிந்து கொண்டாளா?

ராமுவின் மனைவி அமுதா தன் அன்னைக்குக் கடைசி நேரத்தில் அளித்த வாக்கை நிறைவேற்றினாளா?

காந்தன்

ஒன்றுக்கொன்று சம்பந்தம் இல்லாத மேற்படிக் கேள்விகளுக்கு விடை காண வெள்ளித் திரையைப் பார்க்க வேண்டும் என்பதில்லை. நிறையத் தமிழ்ப் படங்கள் பார்த்த அநுபவம் இருந்தால் போதும், சுலபமாக ஊகித்துச் சொல்லி விடலாம். இது வரையில் வெளிவந்த எந்தத் தமிழ்ப் படத்திலும், அடுத்து என்ன நிகழப் போகிறது என்ற ஆவலைத் தூண்டிவிடும் கதையை நான் கண்டதேயில்லை. திரைக் கதைப் போக்கில் புது மாதிரியான திருப்பங்களைப் புகுத்த முயற்சி எடுக்காத வரையில் மேற்படி ஆவலை எதிர்பார்த்துப் பயன் இல்லை.

நம் தமிழ்ப் படங்களில் பொதுவாக யாரும் ஆவலோடு எதிர்பார்க்கும் அம்சம், படம் எப்பொழுது முடியும் என்பதுதான். மற்றப்படி 'ஸஸ்பென்ஸ்' என்பது நம் பட உலகில் காணக் கிடைக்காததோர் அம்சம்!

ஜூபிடர் பிலிம்ஸாரின் "அன்பு எங்கே?" என்ற படத்தில், விசேஷமான கதையம்சம் எதுவும் இல்லையென்றாலும், படம் ஆரம்பம் முதல் கடைசி வரையில் ஒழுங்கான கதைப் போக்கைக்

ண்டிருக்கிறது. கதை கன்னா பின்னா வென்று கண்ட இடங்களுக்கு ஓடி, நம்மை அநாவசியமாக அலைக்கழிக்காமலும் சுவை குன்றாமலும் செல்லுகிறது.

அமுதாவாக நடிக்கும் பண்டரிபாய் சாந்தமும், அன்பும் தவழும் முகத்துடன் அழகாகப் பேசி, பாவத்துடன் நடிக்கிறார்.

எஸ். எஸ். ராஜேந்திரன் இந்தப் படத்தில் பூரண வெற்றி பெற்று விட்டார். ''தை பிறந்தால் வழிபிறக்கும்'', ''பிள்ளைக்கனியமுது'', ''தேடிவந்த செல்வம்'' முதலிய படங்களில் அவர் தேடியும் கிடைக்காத வெற்றி இந்தப் படத்தில் கிடைத்து விட்டது; வழக்கமான அவரது ஆவேசச் சொற்பொழிவு இல்லை; ஆனால் இயல்பான நல்ல நடிப்பு இருக்கிறது. என்னுடன் படம் பார்த்தவர்கள் யாவரும் அவர் நடிப்பையும் சமயோசிதமான வேடிக்கைப் பேச்சையும் மிக மிக ரசித்தார்கள்.

காமுவின் கணவனாக வரும் டி. ஆர். ராமச்சந்திரன் படத்தின் ஹாஸ்யப் பகுதிக்கு உறுதுணையாயிருக்கிறார். நாடக ஒத்திகைக் காட்சியில் அவர் நடிப்பு எல்லோரையும் சிரிக்க வைக்கிறது. அவர் சம்பாஷணையை உபயோகிக்கும் வேடிக்கையான முறையில் பிரமாதமான ஹாஸ்யம் அமைந்து விடுகிறது.

மைனாவதி காமுவாக வருகிறார். அவருக்குப் பழகிப் போன பாத்திரம் அது. ஆகையினால் வெற்றி பெறக் கேட்பானேன்?

எஸ். வி. ரங்காராவ் இந்தப் படத்திலேயே களைகட்டும் பாகத்தை ஏற்றிருக்கிறார். பங்கு மார்க்கெட் வியாபாரிக்கேற்ற தோற்றம், தந்தையாக வருவதற்குத் தகுந்த தன்மை யாவும் அவரிடம் நன்றாக அமைந்திருக்கின்றன. இயல்பாகப் பேசி நன்றாக நடித்திருக்கிறார்.

முதலில் வரும் சூர்யகலாவின் ''கிளப்'' டான்ஸ் பாட்டும் நடனமும் அருவருப்பாயிருக்கின்றன. இந்தக் கேலிக் கூத்துக்களையெல்லாம் என்னத்துக்காகப் படத்தில் சேர்த்துத் தொலைக்கிறார்கள் என்று நான் வேதனைப் பட்டேன். சந்தோஷப் பட்டுச் சிரிக்கவும், அனுபவித்து ரசிக்கவும் சில காட்சிகள் இருந்தால், இப்படி வேதனைப் படவும் ஒரு சில காட்சிகள் வேண்டுமல்லவா? ரோஜாப்பூ வேண்டும் என்றால் முட்கள் தைப்பதைப் பொறுத்துக் கொள்ளத்தானே வேண்டும்?

இந்தப் படத்தில் முக்கிய பாகம் ஏற்று சோபிக்காத பாத்திரம் உண்டென்றால் அது ராமுவாக வரும் பாலாஜிதான். நடன நங்கை மாலாவுடன் நடனமாடியதைத் தவிர அவர் செய்திருக்கும் காரியம் அமுதாவிடம் அடிக்கடி எரிந்து விழுந்ததுதான். அவர் நடிப்பிலும் பேச்சிலும் மனத்தில் பதியும்படியாக எதுவும் இல்லை. மாலாவும் ராமுவும் நடனம் ஆடிய பிருந்தாவனத் தோட்டத்தின் அழகிய சூழ்நிலை மிகவும் அழகாயிருக்கிறது.

முரசொலி மாறன் எம். ஏ., மிகவும் அழகாக வசனம் எழுதியிருக்கிறார்.

இந்தப் படத்தின் பாடல்களை நால்வர் இயற்றியிருக்கிறார்கள்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் இயற்றிய ''ஆரு ஆயன்னு...'' என்று தொடங்கும் பள்ளிக்கூடப் பாட்டு, ''அன்பாய்ப் பழகும், கொம்பை அசைக்கும், அம்மான்னு கத்தும் அது என்ன...?'' என்று கேள்வியும் பதிலுமாக நன்றாயிருக்கிறது.

அடுத்தது விந்தன் இயற்றியிருக்கும் ''சொல்லு நீ ராஜா, சொல்லு நீ ராஜா'' என்ற பாட்டு.

'' இலவு காத்த கிளியைப் போல
எனது கதையும் ஆவதா?
குலவி மகிழ நினைத்த தெல்லாம்
குலைந்து பொன்னா போவதா?......''

என்று வரும் அநுபல்லவியும், சரணமும் கருத்து அழகும், சொல்லழகும் பெற்றுச் செவியில் சுவையுடன் விழுகிறது.

கண்ணதாசன் இயற்றியிருக்கும் ''எத்தனை கோடி பணமிருந்தாலும், நிம்மதி வேண்டும் வீட்டிலே......'' என்னும் பாட்டு மிகவும் நன்றாயிருக்கிறது. தேவிகாவுக்காக இந்தப் பாட்டைச் சுசீலா இனிய குரலில் பாடியிருக்கிறார்.

எஸ். எஸ். ராஜேந்திரனுக்கு நடனப் பாட்டில் டி. எம். சௌந்தரராஜன் குரல் கொடுத்திருக்கிறார். அது அவ்வளவு பொருத்தமாயில்லை. பேச்சுக் குரலை ஒட்டியதுபோலத் தானே பாட்டும் இருக்க வேண்டும்? வேறு யாருடைய குரலைப்போலவோ கேட்கிறது.

வேலைக்காரி பார்வதியாக வரும் தேவிகாவும் நன்றாகவே நடித்திருக்கிறார்.

இந்தப் படத்தை என்னுடன் பார்த்த ஒருவர், ''கிராமத்து ஜனங்களும் நகர்ப்புறத்தில் வசிக்கும் ஏழை மக்களும் பார்த்து ரசிக்கும்படியாக இந்தப் படத்தில் ஒன்றும் இல்லை. நாகரிக மக்கள் மட்டும் ரசிக்கும்படியான சமூக வாழ்வையே பெரும்பாலும் சித்திரிக்கும் படத்தை அவர்கள் ரசிக்கமாட்டார்கள்!'' என்றார்.

எனக்கு என்னவோ அவர் அபிப்பிராயம் ஒப்புக்கொள்ளக் கூடியதாயில்லை. நாட்டுப்புற மக்கள் என்று பிரித்துக் கொண்டு அவர்களின் சுவைக்கேற்பப் படம் தயாரிப்பது நியாயமும் அல்ல. இரண்டு மூன்று இடங்களில் வயல் வரப்புக்களைக் காட்டிவிட்டால் கிராமத்து மக்கள் அதைப் பார்த்துத் திருப்தி அடைந்து விடுகிறார்கள் என்று எதிர்பார்ப்பது முற்றிலும் தவறாகும்.

''மாங்கல்ய பாக்கியம்'' என்று ஒரு படம் சமீபத்தில் வந்தது. அந்தப் படத்தின் இன்ன சம்பவத்தை இன்ன இடத்தில்தான் நுழைப்பது என்ற விவஸ்தை யில்லாமல் மனம் போனபடி என்னத்தையெல்லாமோ புகுத்திக் குட்டை குழப்பியிருக்கிறார்கள். கிராம மக்கள், நகர்ப்புறத்து மக்கள் எல்லோரையும் திருப்திப்படுத்துவதாக நினைத்துக் கொண்டு படம் தயாரிக்கப் போகக் கடைசியில் எல்லோரையும் அதிருப்திப் படுத்தியிருக்கிறார்கள்.

''அன்பு எங்கே?'' பார்க்கக்கூடிய படம்தான். பழமையும் புதுமையும் கலந்த படம்.



ஒன்றல்ல — இரண்டு !

சிங்கப்பூருக்கும் ஜாகர்தாவுக்கும்

வாரம் இரு முறை சர்வீஸ் !

இப்பொழுது சிங்கப்பூருக்கும் ஜாகர்தாவுக்கும் வாரம் இருமுறை சர்வீஸ் இருக்கிறது. எமது ஸூப்பர் கான்ஸ்டலேஷன் விமானங்களில் சுகமான டூரிஸ்ட் வகுப்பிலோ அல்லது சொகுசான வசதிகளுடன் கூடிய முதல் வகுப்பிலோ பிரயாணம் செய்யுங்கள்.

பிரதி சனிக்கிழமை பம்பாய் . மதராஸ் . சிங்கப்பூர் . ஜாகர்தா

பிரதி திங்கட்கிழமை பம்பாய் . மதராஸ் . சிங்கப்பூர் . ஜாகர்தா . ஸிட்னி

ஏயர்-இந்தியா இன்டர்நேஷனல்



தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ் வில்லைகளை

உட்கொண்டால், உங்கள் இருமல்
உடனேயே அகலும்.

பெப்ஸ் வில்லை ஒன்றை சுவைத்தால் வலியைக் குறைக்கவும், தொண்டைப்புண் பிராங்கைடிஸ், இருமல் அல்லது ஜலதோஷம் இவைகளுக்குக் காரணமான கிருமிகளைக் கொல்லவும் செய்யும். அதன் குணமளிக்கும் ஆவியை அனுபவியுங்கள். பெப்ஸ் உடனே நிவாரணம் அளித்து, விரைவில் குணமூட்டுகிறது. அபாயகரமான மருந்துகள் இதில் சேரவில்லை. குழந்தைகளுக்கும் கூட அபாயமின்றி கொடுக்கலாம்.



பிராங்கைடிஸ்,
தொண்டைப்புண்,
மண்டைநீர்,
அடைப்பு,
ஜலதோஷம்
மற்றும்
இருமலுக்கு
உடனேயே
நிவாரண
மளிக்கிறது.

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும்
கிடைக்கும்.

சி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY 55-TAM

சோல் ஏஜண்டுகள் : தாதா அண்டு கம்பெனி
86, லைனியப்ப நாயக் தெரு, சென்னை - 8



இன்றைய
மிகவும்
நம்பகமான
பேனாக்கள்

பலவித ரகங்களிலும் கவர்ச்சியான
தோற்றத்திலும் எங்கும் விற்கப்படும்

Sole Distributors :
PENMEN'S INDUSTRIAL SERVICES
Kandivli, Bombay (S. D.)



நீளமான
செழிப்பான
கூந்தல்

ரோமா
கூந்தல் வளர்க்கும் டானிக்

வள்ளுவர் வாசகம்

ராஜாஜி

63

**பொய்ம்மையும் வாய்மை
இடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கும்
எனின்.**

சற்றும் குற்றமில்லாத நன்மையை விளைக்குமானால் பொய்யான சொல்லும் வாய்மைக்குச் சமானமாகும். "புரை தீர்ந்த" என்றார். தீர ஆராயாமல், நன்மைதான் பயக்கும் என்று பேசப் போவாருக்கு இது எச்சரிக்கை.

அநேகமாகப் பொய்யெல்லாம் தீங்கையே உண்டாக்கும். சுய நலத்துக்கு உகந்ததாயிருக்கலாம். ஆனால் முனிவர் சொல்லுகிறபடி வாய்மைக்குச் சமானமாக வேண்டுமானால் யாருக்கும் சற்றேனும் தீங்கு இழைக்காததும் நன்மை தருவதாகவும் இருக்க வேண்டும். தீமை கொஞ்சமும் இருக்கலாகாது. நன்மையும் பயக்க வேண்டும். இந்த இரண்டு லக்ஷணங்களும் கொண்ட பொய்ச் சொல்லை வாய்மைக்குச் சமமாக வைக்கலாம். அது அறம் வழுவிய செயலாகாது என்று கருதலாம்.

ஒரு நோயாளியின் நிலையைச் சிராக்க வைத்தியன் உண்மையென்று தானும் நம்பாத ஒரு சொல்லைச் சில சமயம் சொல்லுகிறான். அதனால் நன்மை உண்டாகும் என்று கருதிச் சொல்லுகிறான். யாருக்கும் அது தீமை உண்டாக்காது. அது 'வாய்மை இடத்த' தாகும் என்பார் முனிவர்.

மக்கள் சில சமயங்களில் தங்களுடைய நன்மைக்காகப் பொய் சொல்லலாம் என்பதல்ல இந்தக் குறளின் கருத்து. நம்முடைய சிற்றறிவுக்கு உண்மையென்று புலப்படுவதெல்லாம் தருமமல்ல. இன்னா செய்யாமையே தருமத்துக்குப் பிரமாணம் என்பது இந்தக் குறளின் கருத்து. ஆயினும் தம்முடைய அனுபவத்தை வைத்து, "யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத் தொன்றும் வாய்மையின் நல்ல பிற" என்று முனிவர் சொல்லுவதை மறந்துவிடலாகாது.

* * *

**எல்லா விளக்கும்
விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே
விளக்கு.**

சான்றோர் வேண்டுகிற விளக்கு எண்ணெயும் திரியும் கொண்ட விளக்கு அல்ல. உள்ளத்தில் இருளைப் போக்கி விளக்கம் தருகிற பொய்யாமையே விளக்கு. உயிர் வாழ்க்கை என்னும் பாதையில் பாவம் நீக்கி அறவழியில் நடப்பதற்கு வேண்டிய விளக்கு பொய்யாமையே. மனமும் மொழியும் பொய்யாதிருப்பின் இருளை நீக்கும் ஒளி உண்டாகும். அதைத்தான் சான்றோர் விரும்புவார்கள்.

எவ்வுயிருக்கும் இன்னா செய்யலாகாது என்கிற தருமத்தை முற்றிலும் காப்பது கடினம். பொய்யை ஒழித்து, உண்மையே பேசுவது இன்னா செய்யாமையை விடச் சுலபமாகும். ஆனபடியால் 'புரை தீர்ந்த நன்மை பயக்கும் சொல்'லைப் பேசு என்பது கடினமான விதி.

பொய் பேசுவதற்கு இடம் தந்திருக்கிறார் என்று வைத்துக் கொண்டு குறளைப் பற்றிக் குறை கூறலாகாது. முனிவர் விதித்திருக்கும் நெறி கடினமானது. பிறருக்கு இன்னா தருவதாயினும் உண்மையைப் பேசிவிட்டால் கடமை தீர்ந்தது என்றும், அதுவே தருமம் என்றும் வைத்துக் கொள்வது எளிதாயினும் அது போதாது.

படித்துப் பாருங்கள்

The Languages of India

இன்று பாரத நாட்டில் எங்கு பார்த்தாலும் மக்கள் மொழிப் பிரச்னையைப் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார்கள். தாய் மொழிப் பற்றுள்ளவர்களோ, "இந்திக்கு என்ன அவ்வளவு உயரிய இடம்: நேற்று வந்த மொழி அது!" என்று கடிந்து பேசுகிறார்கள். மொத்தத்தில்,நாட்டில் எங்கும் இந்தி ஆட்சி மொழியாவதில் ஒரு அருவருப்பு நிலவுகிறது. இதற்குக் காரணம் விளக்கும் வகையில் இந்தப் புத்தகம் வெளியாகி யிருக்கிறது.

பாரத நாட்டில் எத்தனை முக்கியமான மொழிகள் இருக்கின்றன, அவற்றின் வரலாறு என்ன, இலக்கியச் செல்வம் எவ்வளவு என்பனவற்றை யெல்லாம் விளக்கும் வகையில் இந்நூல் அமைந்திருக்கிறது. அந்தந்த மொழிகளில் தகுந்த பாண்டித்யமும், விருப்பு வெறுப்பில்லாத மனோபாவமும் கொண்ட பெரியோர்களே, தங்கள் தங்கள் தாய்மொழிகளைப் பற்றி எழுதியிருப்பது நடுவு நிலைமையில் நின்று மொழிப் பிரச்னையை ஆராய விரும்புகிறவர்களுக்குப் பெருதவியாயிருக்கும்.

பாரத நாட்டில் மூன்று மொழி இனங்கள் இருக்கின்றன. ஆரிய இனம், திராவிட இனம், சீன—திபேத் மொழி இனம். முதல் இரண்டு இனங்களிலும் நல்லவளம் பெற்ற மொழிகள் இருக்கின்றன. முதலினத்தில் வங்காளி, குஜராத்தி, மராத்தி முதலிய மொழிகள் தமக்கே உரிய இலக்கியச் செல்வம் பெற்றவை யாகும். இவை, ஹிந்தியை விட முன் தோன்றிய மொழிகளாகும். ,இவைகளுக்குத் தனித் தனியே எழுத்துக்களும் இருக்கின்றன. வங்க மொழியைப் பற்றி எழுதும் அஜித்குமாரபல* என்பவர் தமது முதல் வாக்கியத்தையே, "வங்காளி மொழி ஆயிர வருஷம் முதுமை பெற்றது" என்று ஆரம்பிக்கிறார். ஒவ்வொரு மொழியின் வளர்ச்சியும் வரலாறும் படிக்க ரஸமாயிருக்கின்றன. ஒரியா மொழிக்கு லிபி தமிழ்நாட்டைச் சேர்ந்த கங்க மன்னர்கள் கொடுத்திருக்க வேண்டும் என்று ஒரியா மொழியைப் பற்றி எழுதிய ஆசிரியர் கூறும்போது மெய்சிலிர்க்கிறது. பஞ்சாபி மொழியோ அரபி லிபியிலும் தேவநாகரி லிபியிலும், குர்முகி லிபியிலும் எழுதப்படும் மொழியாகும். பஞ்சாபிமொழியில் பல இனிய காவியங்கள் இருக்கின்றன என்று அந்தமொழியைப்பற்றி எழுதிய ஆசிரியர் கூறுகிறார்.

தமிழ் மொழியைப்பற்றித் திரு ஏ. சுப்பையா அவர்களும், திரு பெ. நா. அப்புசுவாமி அவர்களும் எழுதியிருக்கிறார்கள்.

தொல்காப்பியத்துக்கும் முற்பட்ட காலத்திலிருந்து தமிழ் கன்னித் தமிழாக இருந்து வருகிறது என்று பெ. நா. அப்புசுவாமி அய்யர் எழுதியுள்ள கட்டுரை, தமிழ் தெரியாத மக்களுக்குத் தமிழின் தொன்மையையும் தன்மையையும் ஓரளவு புலப்படுத்தும்.

பாரதியார், "செப்புமொழி பதினெட்டுடையாளெனின் சிந்தனை ஒன்றுடையாள்" என்றார். அது எவ்வளவு உண்மை என்பது இந்நூல் மிகுந் தெளிவாக்குகிறது. எல்லா மொழிகளிலும் ராமாயணம், பாரதம் பற்றிய சிறிய காவியங்களும் பெரும் காப்பியங்களும் இருக்கின்றன.

ராஜாஜி அவர்கள் ஆங்கிலத்தைப் புறக்கணித்தால், மத்திய ஆட்சி மொழி என்னும் பதவியிலிருந்து அப்புறப்படுத்தினால் பாரத தேசம் ஒரு பெருந் தேசமாக இராது; சின்னஞ் சிறு தீவுகள், தனித்தனி திட்டுகள் கொண்ட நாடாகிப் போகும் என்று எச்சரிக்கை செய்திருக்கிறார்.

இப்படிப் பாரத நாட்டிலுள்ள பலப்பல மொழிகளின் வளத்தையும் லிபியையும் பற்றி வெகு தெளிவாக இருந்த இடத்திலிருந்து அறிந்து கொள்ள உதவுகிறது இந்நூல்.

ஆசிரியர்கள் : வி. கே. நரசிம்மன், ஏ. ஜி. வெங்கடாச்சாரி, வி. கே. என். சாரி.

கிடைக்குமிடம் : Our India Directories & Publications (P) Ltd. 99, Srinivasa Iyengar Road, Madras - 18. விலை: ரூ. 5.

வள்ளுவர் வாழ்ந்த தமிழகம்

வள்ளுவர் காலத்துத் தமிழ் மக்களின் வாழ்க்கை, பண்பாடு, நெறிமுறைகள் எவ்வாறு இருந்தன என்பதைச் சுமார் 200 குறள் வெண்பாக்களிலிருந்து மேற்கோள் காட்டி விளக்கி வைக்கும் கட்டுரைக் கோவை இந்நூல். சிறிய அளவில் இதை ஒரு ஆராய்ச்சி நூல் எனலாம். புறச் சான்றுகளைத் தள்ளிக் குறளிலிருந்தே தமிழகத்தின் மாண்பினை எடுத்துக் கூறுகிறது. இவ்வாராய்ச்சியின் மூலம் சில உண்மைகளை விரித்துரைக்கிறார் ஆசிரியர். உதாரணமாக, வள்ளுவர் காலமே கி. பி. ஏழாவது அல்லது எட்டாவது நூற்றாண்டுதான்; சங்க காலத்துக்கு வெகு காலம் பின்பு தோன்றியவர் வள்ளுவர்; குறளும் சங்க கால இலக்கியங்களான பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினென் கீழ் கணக்கு முதலியவற்றுக்குப் பின்னும் தோன்றியது; வள்ளுவர் கருத்துக்கும் வட நூல்களின் கருத்துக்களுக்கும் வேற்றுமையில்லையாதலால் வள்ளுவரைக் கருவியாகக் கொண்டு வடமொழியுடன் போர் தொடுக்க முடியாது. வேறு இனத்தாருடன் சண்டையும் போடமுடியாது; மாமிசத்தையும் மதுவையும் வள்ளுவர் கண்டித்திருந்தாலும் தமிழர் அந்தக் காலத்திய மது மாமிசத்தை விரும்பி உட்கொண்டனர்; புராணக் கொள்கைகளையும் கருத்துக்களையும் வள்ளுவர் மறுக்கவில்லை; வினைப்பயனில் மக்கள் நம்பிக்கை கொண்டிருந்தனர்; இப்படிப் பல சர்ச்சைக்கு இடமளிக்கும் விஷயங்கள் மேற்கோளுடன் தரப்பட்டுள்ளன.

ஆசிரியர் சாமி சிதம்பரனார் விருவிருப்பான கட்டுரைகள் புரட்சிப் பத்திரிகைகளில் எழுதி அனுபவப்பட்டவராதலால் நடையில் எளிமையும் வேகமும் இருக்கின்றன.

கிடைக்குமிடம்: நியு செஞ்சுரி புக் ஹௌஸ்: 199, மவுண்ட் ரோடு. விலை: ரூ. 2—50.

பம்பாயில் நாடக விழா






பம்பாய்த் தமிழ்ச் சங்கக் கட்டட நிதிக்காக, டிசம்பர் மாதம் 2-ம் தேதி பம்பாய்—நாதப் பார்லி ஜிம்கானா மைதானத்தில் அமைக்கப்பட்டிருந்த திறந்தவெளி அரங்கில் 'தமிழ் நாடக விழா' நடந்தது. உத்தரப்பிரதேச முன்னாள் கவர்னர் ஸ்ரீ கே. எம். முன்ஷி அவர்கள் விழாவைத் துவக்கி வைத்தார்.

கலைஞர் ஸ்ரீ எஸ். வி. சகஸ்ரநாமத்தின் சேவா ஸ்டேஜ் குழுவினர் 2-ம் தேதி முதல் 7-ம் தேதிவரை முறையே 'மன்னியும் மங்களம்' 'நாலுவேலி நிலம்' 'தேரோட்டி மகன்' ஆகிய நாடகங்கள் ஒவ்வொன்றையும் இருமுறை நடத்தினார்கள்.

1. சங்கத்தினரால் பொன்னாடை போர்த்தப்பட்ட கலைஞர் திரு சகஸ்ரநாமத்தின் பதிலுரை. 2-6. ரசிகர்களில் ஒரு பகுதி. 3. 'நாலுவேலி நில'த்தின் ஆசிரியர் திரு ஜானகிராமன் அவர்களைக் கௌரவித்தனர். 4. ஸ்ரீ கே. எம். முன்ஷி நாடக விழாவைத் துவக்கிவைக்கிறார். 5. பம்பாய் மேயர் ஸ்ரீ மிராஜ்கர் கலைஞர் திரு சகஸ்ரநாமத்துக்கு வெள்ளிப் பேழையைப் பரிசாக வழங்குகிறார். 7. ரசிகர்களுக்கும் நடிகர்களுக்கும் சங்க உப தலைவர் ஸ்ரீ அண்ணாசாமி நன்றி கூறுகிறார்.












பைக்ஸ் மலையுச்சியின் மிகக் குறுகலான வளைவுகளில்



இந்த டயர் அபாயமின்றிச் செல்லக்கூடியதென நிரூபித்துள்ளது

புழுதியும் கரடுமுரடான சரல் கற்களும் நிரம்பிய மிகக் குறுகிய வளைவுகளுள்ள பைக்ஸ் மலை உச்சி மீது ஏறும் மோட்டார் பந்தயத்தில் தொடர்ந்து 29 தடவைகள் அனாயாசமாக வெற்றிபெற்ற கார்களில் பயர்ஸ்டோன் டயர்கள் பொருத்தப்பட்டிருந்தன. இந்த டயர்களை உற்பத்தி செய்வதில் கையாளும் அதே தொழில நுட்பமும், உயர்தர கண்காணிப்புமே, உங்கள் காரில் பொருத்தப்பட்டுள்ள பயர்ஸ்டோன் டயர்களின் அதிகப்படியான பாதுகாப்பு மற்றும் நம்பகத் தன்மைக்கு உத்திரவாதம் அளிக்கின்றன

Firestone

பயர்ஸ்டோன்

நியூ டீலெக்ஸ் சாம்பியன் • டியூப்லெஸ் அல்லது டியூபுள்ளது

மன நிம்மதியுடன் பிரயாணம் செய்வதற்கென்றே தயாரித்த டயர்

[சரித்திரப் பிரசித்திபெற்ற எந்தப் புது இடத்துக்குச் சென்றாலும் இப்போதெல்லாம் அதைச் சுற்றிக்காட்ட ''டூரிஸ்டு கைட்'' என்ற வழிகாட்டிகள் காத்துக் கொண்டிருக்கின்றனர். அவர்கள் சொல்லும் கதைகள் கேட்க ருசிகரமாக இருக்கும். சாதாரண இடங்களே இப்படி என்றால் சர்வதேச ஸ்தாபனமாகிய ஐ. நா. சபையில் இத்தகைய வழிகாட்டிகள் இருக்கத்தானே வேண்டும்? 65 பேர்கள் இருக்கின்றனர். 19 பாஷைகள் பேசுகின்றனர். இவை போன்ற ருசிகரமான பல விவரங்களை விளக்குகிறார் இக்கட்டுரை ஆசிரியர் திரு பி. ஜி. கிருஷ்ணய்யா. நியூயார்க் நகரத்தில் ஐ. நா. கட்டடத்திலேயே ''கிருஷ்ணய்யாவின் செய்தி ஸ்தாபனம்'' என்ற பெயரில் வெகு திறமையுடன் பணியாற்றி வருகிறார்.

—ஆசிரியர்]

ஐ. நா. சபை அணங்குகள்

பி. ஜி. கிருஷ்ணய்யா

உலகத்தின் பல்வேறு பாகங்களிலிருந்து அமெரிக்கா செல்லும் பிரயாணிகளுக்கு நியூயார்க் நகரத்திலுள்ள ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தலைமைக் காரியாலயம் இப்போதெல்லாம் ஒரு விசேஷ யாத்திரை ஸ்தலமாக ஆகிவிட்டது. அவசியமாகப் பார்க்க வேண்டிய இடங்கள் என்று ஒவ்வொரு நாட்டிலும் உண்டல்லவா? நியூயார்க்கில் அப்படிப்பட்ட இடங்களில் இது ஒன்று.

ஒவ்வொரு நாளும் வெளிநாட்டினர் ஆயிரக்கணக்கில் நியூயார்க் நகரத்துக்கு வந்த வண்ணம் இருக்கிறார்கள். அவர்கள் எல்லோரும் மழையென்றும், பனி யென்றும் பார்ப்பதில்லை. காலை முதல் இரவு வரையில் இத் தலைமை ஸ்தாபனத்தையும் அதைச் சுற்றியுள்ள இடங்களையும், பூங்காவையும் பார்த்துப் பார்த்துக் களிக்கின்றனர். காமிராக்களின் 'கிளிக்' 'கிளிக்' என்னும் ஓசை ஓயாது கேட்டுக் கொண்டே யிருக்கும். பிரும்மாண்டமான பொது மண்டபத்துக்குள் சென்று பலர் ஐ. நா. படமுள்ள பொம்மைக் கார்டுகள் வாங்கித் தங்கள் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் ஞாபகார்த்தமாக அனுப்பி வைப்பார்கள். பலர் ஐ. நா. பிரசுரங்களில் எதையாவது வாங்கி அனுப்புவார்கள். உட்புறங்களைச் சுற்றிப் பார்க்கப் பலர் டிக்கெட்டு வாங்கி உள்ளே செல்லுவார்கள். கட்டட உட்புற அழகைக் காண வேண்டுமென்ற ஆவல் ஒருபுறமிருக்க, இந்த ஸ்தாபனம் சிக்கலான பல நடவடிக்கைகளை எவ்வாறு செயல்படுத்துவதென்பதை அறிந்துகொள்ளப் பலருக்கு ஆவல்.

சாதாரணமாக, தினசரி 3500 யாத்திரிகர்கள் இந்த இடத்தைக் காண வருகின்றனர் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. மார்ச், ஜூன் மாதங்களில் இவர்கள் எண்ணிக்கை 6000 வரையில் உயருகிறது. சென்ற 1957-ம் ஆண்டில் 860,551 பேர்கள் இக் கட்டடத்தைக் காண வந்தனர். இந்த வருஷ முடிவுக்குள் பத்து லட்சம் எண்ணிக்கையைக் கடந்து 'டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வருபவர்களுள் மாணவர்கள், வியாபார முதலாளிகள், வீட்டுப் பெண்மணிகள், படை வீரர்கள், பாதிரிமார்கள், தொழிலாளிகள், விவசாயிகள், ஓவியக் கலைஞர்கள், மாதுமிகள், உல்லாச புருஷர்கள், ஆசிரியர்கள், தொழிலதிபர்கள் மற்றும் ஆயிரக்கணக்கான வர்த்தக ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் இப்படிப் பலதரப்பட்டவர்கள் இருக்கின்றனர். 1952 அக்டோபர் மாதத்தில் யாத்திரிகர்களுக்கென்று தனியாக ஏற்பாடுகள் செய்யப்பட்டதிலிருந்து 40 லட்சம் மக்கள் தலைமைக் காரியாலயத்தையும் அதன் சுற்றுப்புறத்தையும் கண்டு களித்தனர். 1959 இறுதிக்குள் இந்த எண்ணிக்கை 50 லட்சத்துக்குத் தாண்டிவிடும் என்றே எண்ண வேண்டியிருக்கிறது.

இப்படி வருபவர்களை வரவேற்று எல்லா இடங்களையும் சுற்றிக்காட்ட இருபத்திரண்டு நாடுகளிலிருந்து வெகு கவனத்துடன் பொறுக்கப்பட்ட அறுபத்தைந்து அழகிய பெண்மணிகள் தனியாக அமர்த்தப்பட்டிருக்கின்றனர்.

இவ் வழிகாட்டிகள் எல்லோரையும் சேர்த்துக் கவனித்தால் அவர்கள் 19 பல்வேறு பாஷைகளைப் பேசும் திறமையுடையவர்கள். பாவனையில் எளிமையும், பேச்சில் கனிவும், தோற்றத்தில் பண்பும் உள்ளவர்கள். இவர்கள் கோஷ்டியில் ஒருத்தி தாய்லாந்து இளவரசி விவான் வேரரிவான். தாய்லாந்து இளவரசர் வான் வைத்தியக் கோன் ஐ. நா. பொதுச் சபையின் தலைவராக இருந்த காலத்தில் இப் பெண்மணி இங்கே 'கைடா'க வேலை பார்த்தாள். மற்றொருத்தி திரு அட்லாய் ஸ்டீவன்ஸனின் உறவினள் குமாரி ஹெலன். இவ் விடத்துக்கு விஜயம் செய்பவர்களைச் சிறுசிறு கூட்டங்களாகப் பிரித்து ஒவ்வொன்றையும் ஒருத்தி அழைத்துச் சென்று ஆலோசனை மண்டபங்கள், நடைபாதைகள், அறைகள் முதலியவற்றைக் காண்பித்தபடியே இந்த ஸ்தாபனத்தின் தன்மை, அமைப்பு, செயலாற்றும் முறை, வரவு செலவு நிதி நிர்வாகம், அங்கத்தினர்களான நாடுகள் சந்தா செலுத்தும் முறை முதலியவற்றைப் பற்றிப் பேசிக் கொண்டே செல்லுவாள்.

இத்துடன் இணைந்துள்ள இதர ஸ்தாபனங்கள், தனிப்பட்ட துறைகளில் செயல்புரியும் ஸ்தாபனங்கள், ஐ. நா. வுக்கும் அமெரிக்க ஐக்கிய நாடுகளுக்குமுள்ள சம்பந்தம், ஐ. நா. கட்டடம் எழுப்பப்பட்ட இடம் சர்வதேசப் பொதுவானது, முதலிய விஷயங்களைப் பற்றியெல்லாம் அவர்கள் விவரித்துச் சொல்லுகிறார்கள். கட்டடத்து உட்புறத்தை அலங்கரிக்கும் கலைப் பொருள்களைப் பற்றியும், கட்டடத்தின் வரலாறு, அதில் பணி புரியும் அதிகாரிகள், அவர்கள் பேசும் பாஷைகள், நடவடிக்கைகளின்போது பேசப்படும் பாஷைகள், அவற்றின் மொழிபெயர்ப்பு முறைகள், சமாதானம், மத்தியஸ்தம், நிர்வாகம், 'வீட்டோ' அதிகாரப் பிரயோகம், உலக சமாதானத் தீர்மானங்கள், தர்மகர்த்தா



ஐ. நா. சபை வழிகாட்டியாக இருக்கும் ஒரு இந்தியப் பெண்மணி யாத்திரிகர்களுக்கு ஐ. நா. வைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறாள். சில ஆசிய நாட்டுப் பெண்கள் மட்டுமே தங்கள் தேசத்து உடை அணிந்து கொள்ள அனுமதிக்கப் படுகின்றனர். ஐ. நா. 'யூனிபாரம்' அணிந்த இதர தேசத்துப் பெண்மணிகளையும் படத்தில் காணலாம்.

முறை, அவற்றின் லட்சியம், ஐ.நா. போலீஸ் படை அமைப்பு, அகதிகள் பிரச்சினை இப்படிப் பட்ட பொது விஷயங்களைப் பற்றியும் அவர்கள் விளக்கி வைக்கின்றனர். காரியாலயத்தைச் சேர்ந்த சுமார் மூவாயிரம் ஊழியர்களும் சர்வ தேசப் பொதுச் சிப்பந்திகள் என்பதும் இந்த ஸ்தாபனத்தின் நடைமுறை விரிவானதென்பதும் நன்கு விளக்கி வைக்கப்படுகின்றன.

பேசிக்கொண்டே செல்லுகையில் 'கைடு'களுக்கும் பிரயாணிகளுக்குமிடையே அளவளாவச் சந்தர்ப்பம் பெருகுகிறது. அவர்கள் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் வழிகாட்டிகள் பதிலளிக்கிறார்கள். பள்ளி மாணவிகள் கேட்கும் கேள்விகளாக இருந்தாலும் சரி, கலாசாலைப் பேராசிரியர் கேள்விகளாயினும் சரி, எல்லாவற்றுக்கும் முகங்கோணாது தயங்காது விடையளிக்கும் தகுதியுள்ளவர்கள்.

'வழிகாட்டி'கள் தேர்ந்தெடுக்கப்படுவதில் விசேஷ கவனம் செலுத்தப்படுகிறது. பதவி ஏற்க விரும்பும் பெண்மணிகள் இதற்கென்று ஏற்பட்ட ஐ. நா. அதிகாரியை முதன் முதலாகப் பேட்டி கண்டாக வேண்டும். இருபது வயதுக்குட்படாமலும் முப்பது வயதுக்கு மேற்படாமலுமிருப்பது முக்கியம். கல்லூரிப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். இல்லாவிடில் அதற்குச் சமமான கல்வியறிவு வேண்டும். ஆங்கிலம் சரளமாகப் பேச வேண்டும். அத்துடன் இதர பாஷைகள் பேசத் தெரிந்திருக்க வேண்டும். நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டும். ஐ. நா. வைத்தியப் பரிசோதனையில் தேற வேண்டுமானால் இது மிகவும் முக்கியம்.

கேட்போரின் மனத்தைக் கவரும்படியாகப் பேசும் திறமை வேண்டும். அவர்களின் அறிவு வளர்ச்சிக்கேற்றபடி சம்பாஷிக்கத் தெரிய வேண்டும். தங்களிடம் ஒப்படைக்கப் பட்டவர்களை நடுவாந்தரத்தில் விட்டு விடாமல் இக்கட்டான நிலைமைகளையும் சாமர்த்தியமாகச் சமாளிக்கத் தெரிய வேண்டும். குரலில் இனிமை வேண்டும். தோற்றமும் கவர்ச்சிகரமாக இருத்தல் அவசியம்.

தேர்ந்தெடுக்கப்பட்ட பின்னர் ஒவ்வொரு வழிகாட்டிக்கும் மூன்று வாரம் தீவிரமான பயிற்சி அளிக்கப்படுகிறது. ஐ. நா. வின் அமைப்பு, லட்சியங்கள், செயல்முறை முதலிய பல விஷயங்கள் அவர்களுக்கும் போதிக்கப் படுகின்றன. அவர்களைக் கேட்கும் பல கேள்விகளுக்கும் புள்ளி விவரங்கள், உதாரணங்கள், மேற்கோள்கள் மூலம் அவர்கள் பதில் சொல்ல வேண்டுமல்லவா? இந்தச் சர்வ தேச ஸ்தாபனத்தில் தங்கள் அந்தஸ்து என்ன என்பதைத் தெரிந்து கொண்டு, அந்நிய நாட்டுப் பிரயாணிகள் அரசியல் வேறுபாட்டால் எக்கச்சக்கமான கேள்விகள் கேட்டால், அவற்றை நாசுக்காகக் கையாளவும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இப்படிப் பல வாரங்கள் பரிசை செய்யப் பட்ட பின்னரே உத்தியோக ஒப்பந்தம் செய்து கொள்ளப்படுகிறது. ஒப்பந்த காலம் சாதாரணமாக ஒரு வருஷத்துக்குக் குறையாது. இரண்டு வருஷங்களுக்கு மேற்படாது.

இப்போதுள்ள 65 வழிகாட்டிகளில் ஏறக்குறைய பாதிப் பேர்கள் அமெரிக்கர்கள். மனுதாரர்கள் பேட்டிக்கு நியூயார்க் நகரத்தில் நேரிடையாக ஆஜராக வேண்டுமாதலால் விண்ணப்பங்கள் நகர வட்டாரத்திலிருந்தேதான் வருகின்றன. அங்கேதான் படிப்புக்காகவோ, ஜீவனத்துக்காகவோ, கணவன்மார்கள் வேலை செய்வதால், தாற்காலிகமாகவே பலர் இருக்கின்றனர். அவர்களுக்கெல்லாம் இந்த மாதிரி வேலை தாற்காலிகமான வருமானத்துக்கும் பொழுது போக்குக்கும், ஏற்றதாக அமைந்துள்ளன. பதவியும், குறுகிய கால வரம்புக்குட்பட்டிருப்பதால் ஐ. நா. ஸ்தாபனமும் இந்தப் பதவிக்குத் தொலை தூரத்திலிருந்து பலர் விண்ணப்பம் செய்து கொள்வதை வரவேற்பதில்லை.

தாற்காலிகப் பதவியாகையால் வழிகாட்டிகள் வேகமாக மாறிக் கொண்டே இருக்கின்றனர். ஒப்பந்த காலம் முடிவுற்றுச் சிலர் விலகிக் கொள்வர். அதிக சம்பளமுள்ள நிரந்தரமான வேறு வேலை கிடைத்துச் சிலர் போய்விடுவார்கள். தங்கள் கணவர்கள் மாற்றலாகிப் போய் விட்டால் அவர்களுடன் போய் விடுபவர்கள் சிலர். மற்றும் சிலர் தாங்களே கல்யாணம் செய்து கொண்டு பதவி துறந்து விடுவார்கள். இத்தகைய காரணங்களினால் ஐ. நா. தலைமைக் காரியாலய நடைபாதையில் சதா புதுப்புது முகங்கள் மிருதுவான குரல்களில் உற்சாகத்துடன் வெளியூர்க்காரர்களுக்கு ஐ. நா. வைப் பற்றி விளக்கிக் கொண்டிருப்பதைத் தினசரி காணலாம்.


வாழ்க்கையில் நீங்கள் பெறுவதென்ன?
விளங்கும் வீரியமா
அல்லது
வாழ்க்கையின் சந்தோஷத்தை கவலை, தெம்பின்மை, சிரமம் முதலியவை கெடுக்காமல் காத்துக்கொள்ளுங்கள். வாழ்க்கையில் உண்மை வெற்றி தெம்பினுல்தான் ஏற்படும்—ஸனடோஜன் புதுபலம் அளித்து, உடல்வலிமை மனசக்தி அதிகரிக்கச் செய்கிறது. 25.000 த்துக்கு மேற்பட்ட வைத்தியர்கள் அதன் அபூர்வ சக்தியளிக்கும் குணத்திற்கு அத்தாட்சி அளிக்கிறுர்கள்.
ஸனடோஜன்
-மிக்க உயர்ந்த பால் டானிக்

கோத்ரெஜின்

நங்கூரம் ⚓ மார்க்

புதிய தயாரிப்பு

நவ்-தால்

நவீன பித்தளை பாட்லாக்

60 ஆண்டுகளாக பலவித ரகமான சிறந்த பூட்டுகள் தயாரித்த முதிர்ந்த அனுபவத்தைக்கொண்டு, கோத்ரெஜ் நவ்-தால் பாட்லாக் தயாரிக்கப்பட்டது. அது உறுதியாகவும், பார்ப்பதற்கு அழகாகவும் இருக்கும். சிறந்த முறையில் அதில் அமைக்கப்பட்டுள்ள இயந்திர நுணுக்கங்கள், இதர சாவிகள் திறப்பதற்கு இடம் கொடுப்பதில்லை— நவ்-தால் பாட்லாக்கை அதற்கென்றே தயாரிக்கப்பட்ட சாவிதான் திறக்கும்.

- ★ பித்தளை லீவர்களும் கவசமும்
- ★ உறுதியான தயாரிப்பு
- ★ ஆணியால் இறுக்கப்படாதது கச்சிதமாக மெஷினால் இணைக்கப் பட்ட உறுதியான ஜாயிண்ட்டுகள்
- ★ துருவைத் தடுக்கும் காட்மியம் கோட்டிங் கொடுக்கப்பட்ட வளையம்



7 லீவர்கள்
சைஸ் : 2¼"
ரு. 8.50 ந. பை. தான்

கோத்ரெஜ் ஷோரூம்களிலும், ஸ்டாக்கிஸ்ட்களிடமும், இரும்பு சாமான் கடைகளிலும் கிடைக்கும் . . .



பாதுகாப்பு இஞ்சினீரிங்கில் முதன்மையானவர்கள்

இந்தியாவில் எண்ணெய் வயல்கள்


டாக்டர் எம். எஸ். கிருஷ்ணன்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

பூமிய நூல் அமைப்பின் போக்கு முதலியவை பற்றி மேற்பரப்பிலிருந்து ஆராய்ந்து தெரிந்து கொள்ளக் கூடிய பிராந்தியங்களில் கிணறுகள் தோண்டுவதற்கு ஏற்ற எண்ணெய் வயல்களுள்ள இடங்களை நிர்ணயம் செய்வது ஓரளவுக்குச் சுலபமாக இருக்கலாம். ஆனால் பூமி மட்டத்துக்குக் கீழே நில அமைப்பில் ஏற்றத் தாழ்வுகள், வளைவுகள், மேடு பள்ளங்கள் இருக்கவும் கூடும். இவற்றின் விளைவாக எதிர்பாராத இடுக்குகளும் தேக்கங்களும் கூட இருக்கக் கூடும். இவை மேல் மட்டத்திலிருந்து பார்த்தால் தெரியாது. அப்படிப்பட்ட மறைமுகமான இடங்களை இக் காலத்தில் நவீன முறைகளைக்கொண்டு கண்டு பிடிக்கிறார்கள். இம் முறைக்கு "பூகர்ப்ப-பூமி இயல்" (Geophysical) முறை என்று பொதுவாகப் பெயர். இப்போதெல்லாம் இம் முறையைக் கையாண்டுதான் பூமி முகடு சம்பந்தமாகக் கிடைத்துள்ள நமது அறிவைப் பெருக்கிக் கொள்வதுடன் எண்ணெய்க் கிணறுகள் உள்ள இடங்களை அதிக நிர்ணயத்துடன் கண்டு பிடிக்கிறோம்.

காந்தக் கருவியினால் ஆராய்தல்

பூமி அமைப்பியல் சம்பந்தமாக அதிகமாகத் தெரியாத இடங்களிலும், கங்கைச் சமவெளி போன்று வண்டல் அதிகமாகப் படிந்து கிடக்கும் பிரதேசங்களிலும் முதன் முதலாகச் செய்ய வேண்டிய காரியம் காந்த சக்தியின் உதவியால் விமான மூலம் அந்தப் பிராந்தியம் முழுவதையும் ஆராய வேண்டும். ஆராய்வதற்குத் தயார் செய்யப்பட்ட ஒரு சிறிய விமானத்தில் இந்தக் காரியங்களுக்குப் பிரத்தியேகமாக ஏற்பட்ட காந்தக் கருவி தொங்கவிடப் பட்டிருக்கும். குறிப்பிட்ட பிராந்தியத்துக்கு மேலே விமானம் பறந்து செல்லும். செல்லும் பாதை ஏற்கனவே நிர்ணயித்துக் கொண்ட ஒரு திசையில் முன்னுக்கும் பின்னுக்குமாகக் கோலம் போட்டது போல் அமைந்திருக்கும். இப்படி விமானம் பறப்பதால் அதனுள் பொருத்தப்பட்டிருக்கும் கட்டம் போட்ட காகிதத்தில் காந்த சக்தியின் இயக்கத்தால் காணப்படும் வளைவுகளை அந்தக் கருவி தானாகவே பதிவு செய்து கொண்டு விடும்.



மேலே இருப்பது எண்ணெய்க் கோபுரம். அதிலிருந்து பூமிக்குக் கீழே துளையிட்டுச் செல்லும் யந்திரக் குழல் உளி.

இவ்விதம் பதிவு செய்யப்பட்ட காகிதத்தில் காணப்படும் கோடுகளின் போக்குகளை யொட்டி எந்தெந்த இடங்களில் காந்தப் பிரதேசங்கள் ஒழுங்குமுறை தவறிக் காணப்படுகின்றனவோ, அந்தப் பிரதேசங்களை மேலும் ஆழ்ந்து ஆராய்ச்சி செய்ய வேண்டிய இடங்கள் என்று ஒதுக்கப்படும்.

இந்த ஒழுங்கீனங்கள், பூமிக்கடியில் வண்டல் படிவங்களுக்குக் கீழ் இருக்கும் ஆதாரப் பாறைகள் அல்லது அடித்தளங்கள் எத்தன்மையதா யிருக்கின்றன என்பதைக் காந்த சக்தியின் குணங்கள் காட்டுவதிலிருந்து உண்டானவை. அடித்தளத்தில் காணப்படும் ஒழுங்கீனங்கள் அதற்குமேல் படிந்திருக்கும் வண்டல் படிவத்துக்கும் பரவுகின்றன. இதன் விளைவாக வண்டல் படிவத்தில் எண்ணெய் தங்குவதற்கு ஏற்றதான மடிப்புதல்கள் தோன்றுகின்றன. காந்த சக்தியின் உதவியால் எந்தெந்த இடங்கள் சாதகமான பலனளிக்கலாம் என்று கருதப்படுகின்றனவோ, அந்தப் பிரதேசங்கள் இன்னும் விரிவான பரிசோதனைக்கு ஏற்றவை என்று ஒதுக்கப்படுகின்றன.

ஆகர்ஷணமானி


காந்தப் படங்களில் காட்டப்பட்ட பிரதேசத்தை விரிவாக ஆராய்வதற்கு ஆகர்ஷண சக்தியையும் பூகம்பக் குறிகளையும் பிரதானமாகக் கொண்ட ஆராய்ச்சி முறைகள் கையாளப் படுகின்றன. இதற்கான கருவிகளெல்லாம் நுட்பம் மிகுந்தவை. 'ஆகர்ஷணமானி' (Gravity Meter) என்று ஒரு வகைக் கருவிக்குப் பெயர். இந்தக் கருவியின் மூலம் ஆராய்ச்சிக்கு ஒதுக்கப்பட்ட பிரதேசத்தை 'ஆகர்ஷணப்படமா'க வரையப்படுகிறது. இந்தப் படத்தில் காணும் ஒழுங்கீனங்களிலிருந்து அந்தந்தப் பிரதேசங்கள் மேலும் விரிவான ஆராய்ச்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றன.

செயற்கைப் பூகம்பங்கள்

பூகம்ப முறை ஆராய்ச்சிகள் இந்தக் குறுகிய இடங்களில் நடைபெறும். இம் முறைப்படி ஆங்காங்கே பூமியில் துளைகள் போட்டு அவற்றில் வெடி மருந்தை இட்டு நிரப்புவார்கள். அந்தந்தப் பிரதேச இயல்புகளுக்கேற்ப சிலபவுண்டுகள் அளவுள்ள கொஞ்சம் வெடி மருந்திலிருந்து ஒன்று அல்லது இரண்டு டன் எடையுள்ள அளவு வரை

நிரப்பப்படும். இம் மருந்து வெடித்தால் பூகம்பம் ஏற்படும்போது உண்டாகும் அதிர்ச்சிபோல் அந்த இடங்களில் ஏற்படும். இவற்றைச் செயற்கைப் பூகம்பங்கள் என்றே கூறலாம். இந்த அதிர்ச்சியின் அலைகள் பூமியின் கீழுள்ள படிவங்களில் எவ்வாறு பரவுகின்றன, எங்கெங்கே எதிர்ப்புகள் தோன்றுகின்றன என்பவை யெல்லாம் நுட்பமான கருவிகளைக் கொண்டு ஆராயப்படுகின்றன. அதிர்ச்சி அலைகள் செல்லும் பாதைகள், போகும் தூரம், எவ்வளவு ஆழத்தில் இதர வண்டல் படிவங்களிலிருந்து இவை எதிர்க்கப்பட்டு எவ்வாறு திசை மாறுகின்றன என்பன வெல்லாம் இந்தக் கருவிகள் மூலம் கண்டு பிடிக்கப்பட்டு, கணக்கிடப்படுகின்றன. இக் குறிப்புகள் எல்லாமே இக்கருவிகளாலேயே பதிவு செய்யப்படுகின்றன. இக்காலத்தில் கையாளப்படும் முறைகள் எல்லாவற்றையும் விட "செயற்கை அதிர்ச்சி" முறையே அதிகமான பலனைக் கொடுக்கிறது. ஏனெனில் இம் முறையின் மூலம் பூமிக்கடியில் எத்தனை வரிசைகள் உள்ளன, எந்தெந்த ஆழத்தில் எந்தெந்த வரிசைகள் இருக்கின்றன, அவற்றின் தன்மை, அமைப்பு, அழுத்தம் முதலிய பல விஷயங்கள் அறியப்படுகின்றன. இப்படிக் காந்த சக்தி, ஆகர்ஷண சக்தி, செயற்கை அதிர்ச்சி முதலியவற்றை ஆதாரமாகக் கொண்டு தனித் தனியாக வரையப்பட்ட வெவ்வேறு படங்களிலிருந்து சேகரித்த விவரங்கள் அனைத்தும் ஒன்றுகூட்டிப் பரிசோதிக்கப்படுகின்றன.

செயற்கைப் பூகம்ப முறையில் ஆராய்ச்சி நடக்கும் விதம்




இவ்விவரங்கள் என்ன தெரிவிக்கின்றன என்பதை நிர்ணயித்துக் கொள்ளப் பூகர்ப்ப இயல் நிபுணர்களிடம் கலந்தாலோசித்து, பூமியின் கீழ் மட்டத்திலிருந்து எவ்வளவு ஆழத்தில் எந்த இடங்களில் தோண்டிப் பார்க்கலாம் என்பதை நிர்ணயிப்பார்கள். ஏற்கெனவே எண்ணெய் கிடைத்துக் கொண்டிருக்கும் பகுதிகளில் எந்த இடங்களில் மேலும் எண்ணெய்க் குளங்கள் இருக்கலாம் என்பதை இந்தப் படங்களிலிருந்து ஊகித்துச் சொல்ல முடியும். முன்பின் தெரியாத புதுப் பிரதேசங்களில் இப்படங்களினால் கிடைக்கும் விவரங்களைக் கொண்டு எந்த இடங்களில் தோண்டினால் எண்ணெய் கிடைக்கும் என்பதைச் சொல்ல முடியாது. தோண்டிப் பார்த்துத்தான் தெரிந்துகொள்ள வேண்டும். வங்காளத் துறைமுகப் பிராந்தியத்திலும் காம்பே (Cambay)யிலும் இவ்வாறு தோண்டிப் பார்த்துத்தான் வேலை நடக்கிறது.

நவீன முறைகளின்படி பெட்ரோலியம் கிடைக்கும் இடங்களைத் தேடிக் கண்டுபிடிப்பதற்குப் பெருவாரியாகப் பணச்செலவு ஆகும். எனினும் குருட்டாம்போக்காகச் சிற்சில பிரதேசங்களில் எண்ணெய் கிடைக்கலாம் என்று முயற்சி செய்து பார்ப்பதில் ஏற்படும் செலவைக் காட்டிலும் குறைந்தே ஆகும் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும்; மேல் பரப்புகளிலிருந்து ஆகர்ஷணத்துவ, காந்த சக்தி இயக்க முறைகள்படி எண்ணெய் வாய்ப்புக்களுள்ள இடங்களைக் கண்டுபிடிப்பது, செயற்கை பூகம்ப முறைப்படி கண்டு பிடிப்பதை விடக் குறைந்த செலவில் முடியலாம். ஏனெனில், செயற்கை அதிர்ச்சிகளை உண்டாக்க ஆங்காங்கு பூமியில் ஆழமான துளைகள் போட்டு வெடிமருந்துகள் நிரப்பி வெடிக்கச் செய்ய வேண்டும். அவற்றினால் விளையும் அதிர்ச்சி வேகங்களையும் தன்மைகளையும் நுட்பமாய் அளவிடுவதற்கு விலை மதிப்புள்ள சாதனங்கள் வேண்டும். மேலும் இம் முறைகளைக் கையாளவும், அவற்றின் விளைவுகளைக் கணக்கிட்டு அறியவும் பயிற்சி பெற்ற, திறமை வாய்ந்த பூகர்ப்ப இயல் நிபுணர்களும் தேவைப்படும். கருவிகளைப் பழுதாகாமல் பார்த்துக் கொள்ளவும், அவற்றைச் செயல்படுத்தவும் அவை சரிவர விவரங்களைப் பதிவு செய்கின்றனவா என்பதைப் பார்த்துக் கொள்ளவும், பதிவு செய்யப்பட்ட விவரங்கள் என்ன தெரிவிக்கின்றன என்பதைத் தவறின்றி உணர்த்தவும், வியாக்கியானம் செய்யவும் நிபுணர்களின் உதவி தேவை. அவர்களுடைய வியாக்கியானத்தின் பேரில் தான் துளைகள் போட்டால் பலன் கிட்டுமா, கிட்டாதா என்பது பொறுத்திருக்கிறது.

பூமியைத் துளைத்தல்

இந்தப் பூர்வாங்க வேலைக்குப் பிறகுதான் குறிப்பிட்ட இடத்தில் துளைபோடும் வேலை மேற்கொள்ளப்படுகிறது. பூமிக்குக் கீழே 10,000 அடி ஆழம் வரையில் துருவிக் கொண்டு செல்லக்கூடிய நவீன துளைக் கருவி, அதன் உபகரணங்களுடன், சுமார் 50 லக்ஷம் ரூபாய்க்கு மேலும் விலையுள்ளது,

அதைச் செயல்படுத்துவதற்கே பயிற்சி பெற்ற 100 அல்லது 120 உயர்ந்த சிப்பந்திகள் வேண்டும். வேலை நடக்குமிடத்தில் 120 அடியிலிருந்து 150 அடி உயரமுள்ள ஒரு எஃகுக் கோபுரமே அமைக்க வேண்டும். இதை ஆங்கிலத்தில் ''டெரிக்'' என்று சொல்வார்கள்.



துளைக் கருவியும் சாதனங்களும் 200 டன் அல்லது அதற்கு மேலும் கனமுள்ளதாக இருக்கும். துளையிடும் வேலையும் சாதாரண வேலை அன்று. சுழல் முறைத் துளையாலும், செங்குத்தான நேர் முறைத் துளையாலும், திறமையுடன் நடத்தப்பட வேண்டிய காரியம். 10 000 அடி ஆழம் துளை இறக்குவதற்கு 10 லட்சம் ரூபாய்க்கு மேலும் செலவாகும். செலவு எவ்வளவு பிடிக்கும் என்பது பூமியின் கீழுள்ள அமைப்பின் போக்கு, பாறைகள், கடினப் பிரதேசம், அவற்றின் தன்மை, மற்ற இடங்களுக்கும் அதற்குமுள்ள போக்குவரத்து வசதிகள், எத்தனை துளைகள் போடப்படுகின்றன, துளைக் கருவிக்கு உபகரணங்கள் எவ்வளவு சுலபமாகக் கிடைக்கின்றன, வேலை செய்பவர்களின் திறமை, அனுபவம், எதிர்ப்படும் கஷ்டங்களின் தன்மை, இப்படிப் பல விஷயங்களைப் பொறுத்திருக்கிறது.

எண்ணெயுடன் வாயுவும் கலந்தேதான் எல்லா இடங்களிலும் காணப்படுகின்றன. எந்த விகிதத்தில் இவை கலந்திருக்கின்றன என்பது பிரதேசத்துக்குப் பிரதேசம் மாறுபட்டிருக்கக்கூடும். வாயுவின் அழுத்தும் சக்தி எவ்வளவு இருக்கிறது என்ற அம்சம்தான் சாதாரணமாகப் பாதாளத்திலுள்ள எண்ணெயைப் பம்பு செய்தோ, பம்பு செய்யாமலோ எவ்வளவு சுலபத்தில் மேல் மட்டத்துக்குக் கொண்டு வரலாம் என்பதை நிர்ணயிக்கிறது. வாயு அழுத்தம் அதிகமாயிருக்கும் இடங்களில் அதைக் கட்டுப்படுத்தவும் வேண்டியிருக்கும். அதன் மூலம் எண்ணெய் நீடித்த காலத்துக்குத் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருக்க வகை செய்யப்படுகிறது. இவ்விதம் கட்டுப்படுத்தாவிட்டால் வாயு வேகத்தால் பாதாளத்திலிருக்கும் எண்ணெய் துளைகள் வழியே மேல்மட்டத்துக்குத் தானாகவே பீச்சி அடிக்கும். இப்படிப் பூமிக்குமேல் வெகு உயரம் நீரூற்றுபோல் பீச்சும். இதற்கு எண்ணெய்ப் பீச்சிகள் என்று பெயர். மெக்ஸிகோவிலுள்ள எண்ணெய்க் குளங்களிலிருந்து ஒரு சமயம் எண்ணெயும் வாயுவும், பூமி மட்டத்துக்கு மேல் அறுநூறு அடி உயரம் வாரி அடித்து நாற்பத்தைந்து நாட்கள் எரிந்து கொண்டிருந்தன. அதற்குப் பின்னரே அந்த ஜுவாலையைக் கட்டுப்படுத்துவதற்கு முடிந்தது.

அழுத்தத்தைக் கட்டுப்படுத்துதல்

அம்மாதிரி இப்போதெல்லாம் நடப்பது இல்லை. ஏனெனில் எண்ணெய்க் குளங்களைத் தொட்டவுடனேயே வாயு அழுத்தத்தைப் பல்வேறு நவீன யந்திர சாதனங்களினால் கட்டுப்படுத்துகிறார்கள். இப்படிக் கட்டுப்படுத்துவதால் எண்ணெயைப் பம்பு செய்து மேலே கொண்டு வரவேண்டியதில்லை. தானாகவே மேல் மட்டத்துக்கு எழும்பிவரும். இப்படி வருஷக்கணக்காகத் தானாகவே எண்ணெய் எழும்பி வந்து கொண்டிருக்கும் கிணறுகள் இருக்கின்றன. உதாரணமாக, மெக்ஸிகோ ராஜ்யத்தில் பெட்ரோ டெல்லானோ என்னும் எண்ணெய்க் கிணறு 1919-ம் ஆண்டு பொங்கி வழிய ஆரம்பித்தது. இருபது நாட்கள் வரை வழிந்து கொண்டே இருந்தது. இப்படிக் கிடைத்த பெட்ரோலியம் 20 லட்சம் டிரம், அதாவது 315 ராத்தல் எடையுள்ள 42 அமெரிக்கக் காலன் கொண்ட ஒரு டிரம். இம்மாதிரி 20 லட்சம் டிரம் எண்ணெய் கிடைத்தது. அதன் பிறகுதான் பொங்கி வழிவதைக் கட்டுப்படுத்தினார்கள். 1919-ம் ஆண்டில் தானாகவே

வளர் பிறை

இரவு பதினொரு மணிக்கு விழுப்புரம் சந்திப்பில் வண்டி கடகடத்துக் கொண்டு நுழைந்தபோது, சின்னப் பயல் பாலு தூங்கி, என் கணவரும் மேல் தட்டில் ஏறிப் படுத்துக்கொண்டார். அப்போது எங்கள் பெட்டிக் கதவு திறந்துகொண்டு, கணவர் பின்தொடர, கையில் வெள்ளிக் கூஜாவுடன் ஏறினாள் அவள். "மதுரம்!" என்று கூவினேன். சிறிது திகைத்த பிறகு, 'அலமுவா...எப்படி வளர்ந்துவிட்டாய். அடேயப்பா!' என்றாள் மதுரம். உண்மையில் என் தோற்றம் மாறிவிட்டதோ என்று என் கணவரைக் கேட்டேன். 'அதே அசட்டுக் கோலந்தான்' என்றார் அவர். இரண்டு மணி நேரம் அளவளாவிய பிறகே, உறக்கம் எல்லோரது நயனங்களையும் ஆட்கொண்டது—என்னைத் தவிர.



கண்ணாடி ஜன்னலில் பிரதிபலித்த எனது உருவத்தைப் பார்த்தவண்ணமிருந்தேன். எனது தோற்ற மாறுதலை விளக்குவதற்குப் பதிலாக, மூன்று வருஷங்களுக்கு முன்பு நடந்த சில சம்பவங்களை அகக்கண்களுக்கு முன்பு படரவைத்தது அந்தக் கண்ணாடி...

* * *

அப்போது மூன்று மாதக் குழந்தையாயிருந்த பாலுவின் அழுகை அடுத்த வீட்டுக்காரியான மதுரத்துக்குப் பகையாக அமைந்தது. ஒரு நாள் அவள் தன் கணவரிடம் புகார் செய்த மொழிகள் என் காதுக்கு எட்டிவிட்டன. 'இரவெல்லாம் அழுது படுத்தினால் தூக்கம் வருமா? தாய்க்காரி ஒழுங்காகச் சாப்பிட்டுத் தெம்புடன் இருந்தால்தானே தாய்ப்பால் போதுமான அளவு கிடைக்கும்? தகுந்த போஷாக்கு இல்லாமல் அது அலறுகிறது...' அன்று முதல் எங்கள் நட்பு முறிந்தது.

அப்போதெல்லாம் என் கணவர்கூட எனக்குப் பரிந்து பேசாமல், எனது நடை உடை பாவனையெல்லாம் ஒரே போக்காக இருந்ததாகச் சலித்துக் கொள்வார். என் சமையல்கூட அப்படியேதானாம்!

ஒரு நாள் மதுரம் என்னை யணுகி, "மாற்றலாகிவிட்டது என் கணவருக்கு. அடுத்த மாதம் ஊரை விட்டுப் போகிறோம்" என்றதும், சற்றே மனமிளகி சகஜமாகப் பழகத் தொடங்கினேன். கிளம்பும் தினத்தன்று, சாமான்களை முன்கூட்டி ரயிலடிக்கு அனுப்பிவிட்டு விடைபெற வந்தாள் மதுரம். "ஒரு விஷயம், அலமு. எங்களிடம் சில தட்டுமுட்டு சாமான்கள் கிடக்கின்றன. எறிந்து விடவும் மனமில்லை; எடுத்துக் கொண்டு போகவும் முடியாது. உங்களிடம் கொடுத்துவிட்டுப் போகலாம் என்று..." என்று இழுத்தாள்.

உப்பு, புளி, வெங்காயம், அடுப்புக்கரி, மண்ணெண்ணெய்—எல்லாவற்றையும் சந்தோஷத்தோடு பெற்றுக்கொண்டேன். ஆனால், பேரிச்சை மர அடையாளமிட்ட டின் ஒன்றை அவள் எடுத்துக்கொடுத்ததும் வாங்க மறுத்துவிட்டேன்.

DL. 322 A-19 TM

"ஒரு கரண்டிதான் எடுத்திருக்கிறோம். மீதியை நீங்களே உபயோகித்துக் கொள்ளலாம். சுத்தமான புத்தம் புதிய தாவர எண்ணெய்களிலிருந்து தயாரிக்கிறார்கள். எவ்வளவு அடக்கமான டின் பாருங்கள். பரிசுத்தம் கெடாமலிருக்கும் டால்டா வனஸ்பதி?" என்றாள் மதுரம்.

"பொரிப்பதற்கும் சில பட்சணங்கள் தயாரிப்பதற்குமே சிலர் உபயோகிக்கிறார்களாம். நாங்கள் அதற்குக்கூட வனஸ்பதி உபயோகிப்பது கிடையாது எங்கள் வீட்டில் எல்லாவற்றிற்கும் எண்ணெய்தான்."
"ஆனால் 'டால்டா'வுக்கு ஈடாகுமா? அனேக கடைகளில் திறந்த டின்களில் எண்ணெய்களைத் தூசிபடிய விற்கிறார்கள். அதுவுமன்றி, நெய்யிலுள்ள வைட்டமின் ஏ எண்ணெயில் இல்லை என்பார் என் கணவர். நோய் நொடிகளை எதிர்த்து நிற்க உதவுமாம் வைட்டமின் ஏ."

"'டால்டா'வில் மட்டும் இருக்கிறதோ?"

"பேஷாக. நெய்யிலுள்ள அதே அளவு 'டால்டா'விலும் சேர்க்கப்படுகிறது. அதுமட்டுமல்ல. பற்களையும் எலும்புகளையும் வலிவாக்கும் வைட்டமின் டீ யும் 'டால்டா'வில் சேர்க்கப்படுகிறது."

"உடம்புக்கு ஒத்துக்கொள்ளாது என்று கேள்வி."

"வருஷக் கணக்காக நாங்கள் உபயோகித்து வருகிறோம். திடமாக இல்லையா நாங்கள்? நல்ல நெய் கிடைப்பதே குதிரைக் கொம்பு. கிடைத்தாலும் யானை விலை. அதோடு, போதுமான பால் கிடைக்காத இந்தக் காலத்தில், வெண்ணெய் நெய்யாக மாற்றுவதைவிட, பாலைப் பாலாகவே சாப்பிடுவது நல்லது. ஆகவே, எல்லா சமையலுக்கும் 'டால்டா' உபயோகிக்க எங்களால் முடிகிறது..."

"நினைத்தால் வேடிக்கையாக இருக்கிறது. விசேஷ நாட்களுக்கான வடை, ஹல்வா, லட்டு எல்லாமே 'டால்டா'வில் தயாரிப்பீர்கள் என்பதனால் உங்கள் அழைப்பை ஏற்றுக்கொள்ளாமல் இருந்துவிட்டேன்."

"விசேஷங்களுக்கு மட்டுமென்ன? சாம்பார், ரஸம், அப்பளம் முதலிய அன்றாட சமையலுக்குக்கூட 'டால்டா'தான் உபயோகிக்கிறோம்; எல்லாப் பண்டமும் ருசியாயிருக்கும், புஷ்டிதரும்!—என்ன அலமு, உங்களிடமே இருக்கட்டும்; இந்த பேரிச்சை மர அடையாளமிட்ட டின், என் ஞாபகமாக...!" வதனத்தில் புன்னகை மலர விடை பெற்றுக் கொண்டாள் மதுரம். என்ன அதிசயம்! எங்கள் வீட்டுச் சமையலையே மாற்றி, மங்காத குதூகலத்தை நிலைநிறுத்திவிட்டது அந்த மதுரப் புன்னகை!

அந்தப் புன்னகையை நான் மறக்கவில்லை, மூன்றாண்டுகள் ஆகியும். ஆனால் அவளோ...?

* * * *

நான் என்ன அப்படி அடையாளந்தெரியாமல் மாறியாபோய்விட்டேன்? "ஆம் அலமு. உண்மையில் நீ மாறித்தான் போயிருக்கிறாய். நானே அடிக்கடி பிரமிப்பதுண்டு...அலமு!...". திடுக்கிட்டேன். எல்லோரும் உறங்கிய பிறகு, அந்நள்ளிரவில் என் கணவர் என்னைப் பாராட்டியவாறு பின்புறமிருந்து அணுகிய காட்சியை ஜன்னலுக்கு வெளியே ஒளிர்ந்துகொண்டிருந்த பூரண சந்திரன் மட்டும் பார்த்துவிட்டான்!



ரசிகர்: உமக்கென்னய்யா, எப்பவும் கைமேலே காசு குலுங்கிண்டு இருக்கு!
கஞ்சிரா வித்வான்: எப்பவும் இல்லே ஸார்! வாசிக்கிறபோது மட்டுந்தான்!

வழிந்தது. 1935-ம் ஆண்டு வரையில் வழிந்து கொண்டிருந்தது. இந்த ஆண்டுகளில் மொத்தம் கிடைத்தது பன்னிரண்டரைக் கோடி டிரம் பெட்ரோலியம். இம்மாதிரித் தானாகவே பொங்கி வழியும் எண்ணெய்க் கிணறுகள் பல மெக்ஸிகோவிலும், கொலம்பியாவிலும், வெனிஜூலாவிலும், ருஷ்யாவிலும் இருக்கின்றன. அவ்வாறு சில காலம் தானாகவே பொங்கி வழிந்து பிறகு நின்று விட்டால் காற்றின் அழுத்தம் குறைந்துவிட்டதற்கு அறிகுறி. அப்போது பம்புகள் அமைத்து எண்ணெயை மேலுக்குக் கொண்டுவர வேண்டும்.

வாயு அழுத்தத்தை ஜாக்கிரதையுடன் கட்டுப்படுத்துவதன் மூலம் எண்ணெய்க்குளங்களின் ஆயுளைச் சிறிது காலத்துக்கு நீடிக்க முடியும். இதைத் தவிர குறைந்துபோன காற்று அழுத்தத்துக்குப் பதில் காற்றைஉட் செலுத்துவதன் மூலம் குளத்தின் அடிமட்டத்துக்கு வடிந்து விட்ட பெட்ரோலியத்தை மேலுக்குக் கொண்டுவர முடியும். எந்தவித முறையைக் கையாண்ட போதிலும் குளங்களில் தேங்கியுள்ள எண்ணெயில் 60 அல்லது 65 சதவிகிதம் எண்ணெய் மட்டுமே வெளிக் கொணரப்படுகிறது. எளிதில் ஆவியாகக் கூடிய இலேசான எண்ணெயாக இருந்தால், மேல் மட்டத்துக்குக் கொண்டுவரக் கூடியது 10 அல்லது 15 சத விகிதம் என்ற குறைந்த அளவில்தானிருக்கும்.

இந்தியாவில் எண்ணெய் வயல்கள்

இந்தியாவில் தற்போது பெட்ரோலியம் அளிக்கும் பிரதேசம் மேற்கு அஸ்ஸாம் ராஜ்யத்திலுள்ள டிக்பாய் (Digboi) என்னும் இடந்தான். சிறிதுகாலத்துக்கு அஸ்ஸாமில் பாதர்பூர் என்னுமிடத்தில் எண்ணெய் கிடைத்துக் கொண்டிருந்தது. ஆனால் அது பல வருஷங்களுக்கு முன்பு. டிக்பாய் எண்ணெய்த் தேக்கத்திலிருந்து இப்போது சுமார் நாலரை லட்சம் டன் பெட்ரோலியம் வருஷவாரி கிடைக்கிறது. 1953-ஆம் ஆண்டு டிக்பாயிலிருந்து 30 மைல் அருகாமையில் எண்ணெய் கிடைக்கக் கூடிய இதர பிரதேசங்கள் கண்டுபிடிக்கப் பட்டன. அதற்குப் பின் மேலும் இரண்டு பிரதேசங்கள் கண்டுபிடிக்கப்பட்டு, அங்கிருந்து எண்ணெயும் கிடைக்கும் என்ற உறுதிகூட ஏற்பட்டிருக்கிறது. நாஹோர்கடியா, ஹுக்ரிஜான், மோரான் என்ற மூன்று பிரதேசங்களில் ஆராய்ச்சி நடத்திய அஸ்ஸாம் ஆயில் கம்பெனியின் நடவடிக்கைகளிலிருந்து இங்கே எண்ணெய் கிடைக்கக் கூடிய இடங்கள் மேலும் கிடைக்க வாய்ப்புக்கள் காணப்படுவதாகத் தெரிகிறது. மேலே சொன்ன மூன்று இடங்களில் உள்ள எண்ணெய்க் குளங்களிலிருந்து வருஷத்துக்குச் சுமார் 25 அல்லது 30 லக்ஷம் டன் குரூட் பெட்ரோலியம் 20 வருஷங்களுக்கு அதிகமான காலத்துக்குத் தேவைப்படும் அளவுக்குக் கிடைக்கும் என்று இதுவரையில் நிரூபிக்கப் பட்ட விவரங்களிலிருந்து தெரிகிறது

வங்காளத்தில் கங்கை நதி டெல்டா பிரதேசத்தில் ஸ்டாண்டர்டு வாகுவம் ஆயில் கம்பெனி இந்திய சர்க்காரின் நிதி வசதியுடன் எண்ணெய்க்கான ஆராய்ச்சிகள் 1951-ம் ஆண்டிலிருந்து நடத்தி வருகிறது. இதுவரையிலும் நான்கு இடங்களில் 10,000 அடி ஆழத்துக்குத் துளைகள் துருவியிருக்கிறார்கள்; ஒன்றுகூடப் பலனளிக்கவில்லை. வேலை மட்டும் தொடர்ந்து நடக்கிறது. இந்திய அரசாங்கத்தின் பூகர்ப்ப இலாக்கா இரண்டு பிரதேசங்களை விஸ்தாரமாக ஆராய்ந்து படங்களும் எடுத்திருக்கின்றனர். ஒன்று பஞ்சாபிலுள்ள ஜ்வாலாமுகி என்னுமிடம்; மற்றொன்று குஜராத்தில் காம்பே என்னும் இடத்துக்குச் சமீபத்திலுள்ள ஒரு இடம். இந்த இடங்களில் துளைகள் போடும் வேலையை 1956-ஆம் ஆண்டில் நிறுவப் பட்ட இந்திய அரசாங்கத்தின் இயற்கை வாயு - எண்ணெய்க் கமிஷன் நடத்தி வருகிறது. ஜ்வாலாமுகி என்னுமிடத்தில் வாயுக்கள் அடைபட்டுக் கிடக்கும் பகுதியில் ஒரு துளையிலிருந்து வாயு வெளிவருவதாக இப்போது தெரிய வருகிறது. காம்பேக்கு அருகாமையிலுள்ள இடத்திலிருந்து எண்ணெய்க் குளமே கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இனி இந்த எண்ணெயைப் பரிசோதனை செய்து உற்பத்தி செய்வதற்கு ஏற்றதுதானா என்று பார்க்க வேண்டும். பஞ்சாப் சமவெளிப் பிரதேசத்திலும் துளைகள் போடும் வேலை மேற்கொள்ளப் பட்டிருக்கிறது. எண்ணெய், இயற்கை வாயுக் கமிஷன் இப்போது ஏறக்குறைய 100 ருஷ்ய நிபுணர்களையும் சுமார் 200 இந்திய தொழில் நுட்பத் தொழில் நிபுணர்களையும் உதவிக்காக எடுத்துக் கொண்டு பராமரித்து வருகிறது. இதைத் தவிர அந்த இலாக்காவைச் சேர்ந்த சிப்பந்திகள் இத்துறையில் வேலைசெய்து வருகிறார்கள்.

இந்தியாவில் நதிகள் பாய்ந்து வண்டல் படிந்துள்ள பிரதேசங்களில், மிகப் பழமையான கட்டமைப்பை விந்திய மலைக்குறிவு இந்த இரண்டு பிராந்தியங்களைத் தவிர, மற்றெல்லாமே எண்ணெய் கிடைக்கும் வாய்ப்புள்ளவைதான். இந்த இனத்தில் சேர்ந்தவை மேற்கு அஸ்ஸாம், பிரம்மபுத்ரா பள்ளத்தாக்கு, அஸ்ஸாம் பீடபூமியின் தெற்குப் பகுதிகள், மேற்கு வங்காளத்திலுள்ள கங்கை மூகத்துவா

ப் பிரதேசம்; பீஹார், உத்தரப் பிரதேசம், பஞ்சாப் பகுதிகளிலுள்ள சிந்து கங்கா சமவெளிப் பாகம்; இமாலயத் தொடரின் தென் பகுதியின் ஓரங்களிலுள்ள மலைச்சாரல் பிராந்தியம்; காம்பே வளைகுடாவுக்கு வடக்கேயுள்ள குஜராத் பிரதேசம்; கட்ச் பிராந்தியம்; கத்தியவார் துறைமுகம்; மஹாநதி, கோதாவரி, கிருஷ்ணா நதிகள் பாயும் சமவெளிப் பிராந்தியம்; தென் ஆர்க்காடு வரையிலும் ஒரு புறமும் ராமநாதபுரம் வரையிலும் மறுபுறமும் பார்த்து வியாபித்துள்ள தஞ்சைச் சமவெளி; திருவிதாங்கூர் கொச்சி ராஜ்யக் கடலோரம் மணற்பாறைகள் நிறைந்த பிராந்தியம்; இவை யாவற்றிலும் பெட்ரோலியம் கிடைக்கக் கூடிய பிரதேசங்களே.


இப்பகுதிகள் ஒவ்வொன்றும் விரிவாக ஆராயப்படுவதற்கும் அவற்றின் படங்கள் தயாரிக்கப் படவும் பல காலம் பிடிக்கும். செலவும் அபரிமிதமாக ஆகும். எண்ணெய்க் குளங்கள் கண்டுபிடிக்கப்பட்டால் கிடைக்கும் பலன் அமோகமானது என்றாலும் மிகுந்த ஜாக்கிரதையுடன்தான் செயலில் இறங்க வேண்டும். பொதுப் பணத்தைக் கொண்டு செலவு செய்யப்படும் எந்தக் காரியத்திலுமே கண்காணிப்பும் கட்டுப்பாடும் முக்கியம். அதிலும் நமது நாடு இத் துறையில் புதிதாகப் பிரவேசிக்கிறது. நுட்பம் மிகுந்த இந்தத் தொழிலிலும் அதனுடைய வர்த்தக வியாபார அம்சத்திலும் நாம் கற்றுக் கொள்ள வேண்டியவை பல இருக்கின்றன.


பிரும்மாண்டமான இமயமலை பூமிக்குமேல் இவ்வளவு பெரிதாக உயர்ந்து நிற்கிற தென்றால் பூமியில் ஏதோ ஒரு பூர்வகாலத்தில் எங்கோ ஒரு பாகத்தில் பிரமிக்கத் தக்க ஒரு அழுத்தம் உண்டாகித் தான் இருக்க வேண்டும்.

அதன் விளைவாகவே இமயமலை தோன்றியுள்ளது. ஈரான் இராக் தேசங்களின் பெயர் பெற்ற எண்ணெய்க் குளங்கள் இருக்கும் அவ்வளவு விஸ்தாரமான நிலப்பரப்பு இந்தியாவிலும் இந்த அழுத்தத்தினால் பாதிக்கப் பட்டுத்தானிருக்கிறது. இமாலயப் பிரதேசத்திலுள்ள பிராந்தியங்களில் பெரும் பான்மை பிரதேசங்கள் இம்மலைத் தொடரின் பளுவினால் நன்றாக அழுத்தப்பட்டு அமுங்கிக் கிடப்பதால் அந்தப் பகுதிகளில் சின்னஞ்சிறு எண்ணெய்த் தேக்கங்கள் கூட அங்கெல்லாம் இருக்குமா என்பதே சந்தேகம்தான். அவ்விடங்களில் எண்ணெய் கிடைக்குமா என்று ஆராய்வதை விட மேலே குறிப்பிட்ட இதர பிராந்தியங்களில் எண்ணெய்த் தேக்கங்கள் இருக்க வாய்ப்புகள் உண்டு. அங்கே கவனம் செலுத்தினால் பயன் ஒருகால் கிடைக்கக் கூடும். ஜ்வாலாமுகி சமீபத்தில் பூமிக்கடியில் காணப்படும் வாயுப் பிரதேசம், காம்பேயில் கண்டு பிடிக்கப்பட்ட எண்ணெய்த் தேக்கமும் உபயோகமுள்ள எண்ணெய்க் குளங்களாக இருக்கும் என்று நம்பலாம்.

இந்தியா வருஷத்துக்கு எரி பொருளாக 5 கோடி டன்கள் விறகும் 40 கோடி டன் வரட்டியும் உபயோகப் படுத்துகிறது என்று சொல்லப் படுகிறது. இதைத் தவிர ஜன சங்கியை மிகுந்த நாடானதால் மனித உழைப்பின் மூலமும் கால்நடையின் உழைப்பின் மூலமும் நாம் நமக்குத் தேவைப்படும் சக்தியில் ஏறக்குறைய பாதி அதாவது 45/50 சதவிகிதம் பெறுகிறோம். மற்றப் பாதியை நிலக்கரி, பெட்ரோலியம், மின்சாரம் முதலியவை மூலம் பெறுகிறோம். பெட்ரோலியப் பொருள்கள் மொத்தம் சுமார் 60 லக்ஷம் டன்கள் வருஷவாரி இந்தியாவில் செலவாகின்றன. இவற்றில் ஏறக்குறைய பாதி அளவு அஸ்ஸாமிலுள்ள எண்ணெய் சுத்திகரிப்புச் சாலையிலிருந்து கிடைக்கிறது. இந்தச் சுத்திகரிப்பு ஆலைக்குத் தேவையான பெட்ரோலிய மூலப் பொருள்கள் அங்கேயே கிடைத்து வருகின்றன. பம்பாயிலும், விசாகப் பட்டணத்திலும் செயலாற்றும் இரண்டு சுத்திகரிப்பு ஆலைகளுக்குத் தேவையான மூலப் பொருளான பெட்ரோலியம் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் படுகின்றது. இந்தியாவிலேயே எண்ணெய்க் குளங்களும் வாயுத் தேக்கங்களும் கண்டுபிடிக்கப்பட்டு விட்டால் இறக்குமதி செய்வதற்காக இப்போது செலவிடப்படும் கோடிக் கணக்கான ரூபாய்கள் வீணாகாமல் மிச்சமாகும்.

பதிலுக்குப் பதில்!





அரசிளங்குமரியின் அரங்கேற்றம்

வேங்கடலட்சுமி

அல்லியும் தாமரையும் நெருங்கிப் பிணைந்த அழகியதோர் தடாகம். அதன் ஒரு கரையில் நடன ஸரஸ்வதியின் ஆலயம். அதற்கு நேராக எதிர்க் கரையில் சென்னக் கேசவனின் திருக் கோயில். இவ்விரண்டுக்கும் இடையே வடக்குப் புறமாக அமைந்திருந்தது ஹொய்சாலமன்னன் பிட்டிதேவவிஷ்ணு வர்த்தனின் வனப்புமிக்க மாளிகை.

உதயத்தின் மனோகரமான வேளை. எங்கும் பரவியிருந்த அமைதியைக் கலைத்துக் கொண்டு புள்ளினங்கள் மரக் கிளைகளில் தாவிச் சிறகடித்துக் கீதம் இசைத்தன. சென்னக் கேசவனின் ஆலயத்திலிருந்து இலேசாகப் பரவிய இனிய மணியோசையும் உஷக் காலத்து வாத்தியவொலியும் சக்கரவர்த்தி விஷ்ணு வர்த்தனனைத் தட்டியெழுப்பின. கண் விழித்த மன்னன் பலகணி வழியாகத் தெரிந்த ஆலயத்தின் தங்கக் கலசங்களை நோக்கிக் கரங்கூப்பி வணங்கி விட்டு, மஞ்சத்தை விட்டுக் கீழே இறங்கினான்.

"சென்னக் கேசவா! நான் மேற்கொண்டிருக்கும் முயற்சியில் எனக்கு வெற்றி கிடைக்குமாறு அருள் செய்வாய்!" என்று மனத்துக்குள்ளாகவே வேண்டிக் கொண்டான்.

விடுதியின் கதவைத் திறந்துகொண்டு கையில் பூஜா திரவியங்களுடன் உள்ளே நுழைந்தாள் பணிமகள் ஒருத்தி. அவற்றை ஒரு புறமாக வைத்து விட்டு மன்னனை வணங்கினாள்.

"ரங்கதேவி எங்கே? வரவில்லையா?" என்று வினவினான் மன்னன்.

"இளவரசி இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்து விடுவதாகச் சொன்னார்கள்!" என்று கூறி வணங்கி வெளியே சென்று விட்டாள் அவள்.

அடுத்த சில விநாடிகளுக்கெல்லாம் அழகே வடிவாய்ச் சர்வாலங்கார பூஷிதையாய்க் குளித்துப் புத்தாடையுடுத்தி, ஆலயம் செல்லச் சித்தமாக உள்ளே நுழைந்த புது மலர் போன்ற தன் இனிய சகோதரியைக் கனிவுடன் நோக்கினான் மன்னன்.

"குழந்தாய், ரங்கதேவி! நாளை மாலை நடக்கவிருக்கும் அரங்கேற்றத்துக்கு எல்லாம் தயாராயிருக்கின்றனவா?" என்று கேட்டான் மன்னன் அன்புடன்.

தன் கருவிழிகளை மலர்த்தி அவனை உற்று நோக்கினாள் இளவரசி.

"ஆம், அண்ணா! எல்லாம் தயார் தான். ஆனால் சின்ன அண்ணாவை நினைத்தால்தான் எனக்குப் பயமாயிருக்கிறது" என்றாள்.

கலகலவென்று நகைத்தான் விஷ்ணு வர்த்தனன். "அவனைப் பற்றி உனக்கு என்ன பயம்? தான் செய்வதோ, சொல்வதோ இன்னதென்றே அறிய முடியாத பிராயம் அவனுக்கு! யாரோ சொல்வதைக் கேட்டுக்கொண்டு உணர்ச்சி வேகத்தில் ஏதேதோ பேசுகிறானே தவிர, அவனுடைய மனம் ஒரு குழந்தையைப் போன்றது! நீ அவனைப் பற்றிக் கவலைப் படாதே!" என்றான் பரிவுடன்.

ரங்கதேவியின் முகம் அப்படியும் தெளியவில்லை. "அண்ணா! நீங்கள் என்ன சொன்னபோதிலும் என் மனம் ஏனோ சமாதானமடையவில்லை. சின்ன அண்ணாவால் உங்களுக்கு ஏதாகிலும் தீங்கு நேரிடாமல் இருக்க வேண்டுமே யென்று கவலையுறுகிறேன்! நேற்றுப் பகல் திடீரென்று அந்தப்புரத்துக்கு வந்த சின்ன அண்ணா என்ன சொன்னான் தெரியுமா?" அவள் குரல் பயத்தினால் நடுங்கியது.

அவளைக் கூர்ந்து நோக்கினான் ஹொய்சாலச் சக்கரவர்த்தி. "ஏன்? என்ன சொன்னான்?" என்று கேட்டான்.

"இந்த நடன அரங்கேற்றம் மட்டும் நடந்தேறினால், உங்களையும் என்னையும் குத்திக் கொன்று, நடன சரஸ்வதியின் ஆலயத்துக்கும் தீ வைத்து விடுவானாம்!"

கலகலவென்று நகைத்த மன்னன், இளவரசியின் சிரத்தை அன்போடு தடவிய வண்ணமே, "அப்படியா சொன்னான், பைத்தியக்காரன்! வாய் அறியாமல் வார்த்தைகளைக் கொட்டி விட்டுத் திண்டாடுவதுதான் அவனுக்கு வழக்கமாகி விட்டதே! நீ போ, குழந்தாய்! நான் அவனைக் கவனித்துக் கொள்கிறேன்!" என்று ரங்கதேவியின் பயத்தைப் போக்கும்படியாகப் பேச, ஓரளவு சமாதானம் அடைந்தவளாய்ப் பூஜா திரவியங்களைக் கையில் எடுத்துக் கொண்டு தன் தோழியுடன் ஆலயத்துக்குக் கிளம்பினாள் இளவரசி.

பலகணி வழியாக அவள் செல்வதைப் பார்த்தபடி நின்றிருந்த விஷ்ணுவர்த்தனன் நீண்ட ஒரு பெருமூச்செறிந்து விட்டுத் தன்னுடைய சபா மண்டபத்துக்குச் செல்லத் தயாரானான்.

•

ஹொய்சால சாம்ராஜ்யத்தின் மகாமன்னனாகிய பிட்டிதேவ விஷ்ணுவர்த்தனின் காலத்தில், கலைகளுக்கு ஒரு மிகச் சிறந்த ஸ்தானம் அளிக்கப்பட்டிருந்தது. அதிலும் முக்கியமாக நாட்டியத்துக்கு முதலிடம் அளித்து, கலைகளை மிக்க ஊக்கத்துடன் வளர்த்து வந்தான் மன்னன். வயதில் மிக இளைஞனேயாயினும் அவன் தன்னுடைய பெருங் குணத்தினாலும் சீரிய செங்கோல் முறையினாலும் மக்களின் இருதயத்தைத் தன்பக்கம் வசீகரித்திருந்தான். அவனுடைய ஒரே சகோதரி ரங்கதேவியையும், தம்பியான வீரவல்லாளனையும் அவனிடம் ஒப்படைத்து விட்டு அகால மரணமடைந்த பெற்றோர் இருவரும், தங்கள் மூத்த மகனை விஷ்ணுவர்த்தனன் தன் கடமையைச் சரிவர நிறைவேற்றுவான் என்ற திருப்தியுடனேயே மரித்தனர்.

தன் தங்கையை அருமையாய் வளர்த்து வந்த அரசன் அவளுக்கு நாட்டியத்திலும் சங்கீதத்திலும் சிறந்த பயிற்சியளிக்க விரும்பியவனாய்க் கைதேர்ந்த விற்பன்னர்களைக் கொண்டு அவளுக்குச் சாஸ்திரிய முறையில் அவ்வற்புதமான இரு கலைகளையும் பயிற்றுவிக்கலானான். ரங்கதேவிக்குக் கலைப் பயிற்சி ஆரம்பித்த தினத்திலிருந்து, அரண்மனையில் சதா சலங்கைகளின் இனிய ஒலியும், வீணை, குழல் முதலிய வாத்தியங்களின் இசையும் கேட்டன.



விஷ்ணுவர்த்தனனுக்கு நான்கு வயது இளையவன் வீரவல்லாளன். பெயருக்கேற்ப வீரமும் வலிமையும் பொருந்தியவன். ஆயினும் அண்ணனின் விசால நோக்கும், கலையார்வமும், பெருந்தன்மையும் அவனிடம் காணப்படவில்லை. அதற்கு மாறாகத் தானென்ற ஆணவ சுகம்பாவமும் அவனுடைய பிறவிக் குணங்களாய் அமைந்திருந்தன. அதனால் இளவரசியான ரங்கதேவியுள்படப் பலருடைய வெறுப்புக்கு அவன் ஆளாகியிருந்தான்.

ரங்கதேவியின் நாட்டியப் பயிற்சிக்கு ஆரம்பத்திலிருந்தே பலமான எதிர்ப்பைக் காண்பித்தான் வீரவல்லாளன்.

''என்ன அண்ணா! அரச வம்சத்தில் உதித்த கன்னிகைகள் சாதாரணத் தெருக் கூத்தாடிகளைப் போலக் காலில் சலங்கையைக் கட்டிக் கொண்டு குதிப்பதா? அது நம்முடைய ஹொய்சால வம்சத்தின் பெருமைக்கே இழுக்கல்லவா? அப்புறம் நம் ரங்கதேவியைத் திருமணம் செய்துகொள்ள மதிப்புக்குரிய எந்த மன்னனாவது முன்வருவானா? பிறந்ததிலிருந்தே அவளுக்காக நிச்சயம் செய்யப்பட்டிருக்கும் ராயதுர்க்கம் இளவரசன் ரங்கமல்லன் ஒருநாளும் இதற்கு இணங்கவே மாட்டான்'' என்றான் தன் தமையனிடம்.

சக்கரவர்த்தி இதற்குப் பதிலாக, ''வல்லாளா! தேவர்களாலும் அப்சரஸ்களாலும்கூடப் பயிலப்பட்ட மகா அற்புதமான நாட்டியக் கலையைக் கேவலமாகக் கருதுவானேயானால் ராயதுர்க்கம் இளவரசன் என் அருமைச் சகோதரியை மணக்க ஒரு சிறிதும் தகுதியற்றவன். அப்படிப்பட்டவன் விரும்பினாலும்கூட அவனுக்கு ரங்கதேவியைக் கொடுக்க நான் சம்மதிக்க மாட்டேன். அவளும் அப்படிப்பட்டவனை மணக்கச் சம்மதிக்கமாட்டாள். அதற்காக நீ கவலைப்படாதே!'' என்றான் சாந்தமாக.

அவன் தம்பியின் முகம் சிவந்தது. கண்கள் நெருப்புத் துண்டங்களாய் ஒளி வீசிக் கொண்டிருந்தன.

''அண்ணா! நீங்களா இப்படிப் பேசுகிறீர்கள்!'' என்றான் ஆத்திரத்துடன்.

''ஆம்! நானேதான். என் அருமைச் சகோதரி கலாதேவியின் வரப்பிரசாதம் பெற்றவள். நாட்டியமும் சங்கீதமும் அவளுடனேயே பிறந்திருக்கின்றன. நடன சரஸ்வதிக்கும் கான சரஸ்வதிக்கும் மிகப் பிரியமானவள் என்னுடைய



ரங்கதேவி. அப்படிப்பட்ட அருமையான கலைகளை ரசிக்கும் திறமையற்றவனுக்கு அவளை அர்ப்பணிப்பது பிசகல்லவா, தம்பி? நீயே சொல்லு! மலரின் மணத்தை அனுபவிக்கும் ரசனையற்றவனிடம் திவ்யமான பரிமளமுடைய மலரைக் கொண்டு கொடுத்தால் அவன் அதைக் கசக்கியல்லவா எறிவான்? அப்படிப்பட்ட பிசகை நான் ஒரு பொழுதும் செய்ய மாட்டேன்."

சக்கரவர்த்தியின் குரல் தாழ்ந்திருந்த பொழுதிலும், அதில் தொனித்த உறுதி வீரவல்லாளனை ஒருகணம் அயரும்படி செய்து விட்டது. அடுத்தகணம் அவன் வெகுண்டு எழுந்தான்

"அப்படியானால் மகா மன்னர்களாகிய ஹொய்சாளர்களின் வம்சத்தில் உதித்த என் தங்கை, நாளையதினம் ஆயிரமாயிரம் பேர்கள் காண அரங்கிலேறி ஆடப் போவது நிச்சயம்! அப்படித்தானே?" என்று சீறினான்.

"ஆமாம்!" சக்கரவர்த்தியின் குரல் மேல் எழும்பியது கம்பீரமாய்.

"அதைப் பார்த்து விடுகிறேன்" என்றபடி புலி போல் வெளியே பாய்ந்து சென்று விட்டான் வல்லாளன்.

சக்கரவர்த்தி அவன் செல்வதையே மிகுந்த வியப்புடன் பார்த்தபடி சிலை போல் நின்றான்.

மறுதினம் மாலை.

கதிரவன் வெண்மேகப் பொதிகளினிடையே மின்னிச் சிவந்து மெல்ல மெல்ல மறையும் தருணம்.

தலைநகரான துவாரசமுத்திரத்தின் மக்கள் நடன ஸரஸ்வதியின் ஆலயத்தை நோக்கித் திரளாய் வந்து கொண்டிருந்தனர். சில தினங்கள் முன்பே மிக நேர்த்தியாக நிர்மாணிக்கப்பட்டிருந்த நடன அரங்கம், மணி விளக்குகளாலும் சரம் சரமான முத்துக்களாலும் மலர்மாலைகளாலும் மிக அழகாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. வெகு தூரத்தில் வரும் போதே குழலும் யாழும் தங்கள் இன்னிசையைப் பரப்பி யாவரையும் வரவேற்றன.

உட்புறம் நடன அரங்கத்தின் பின்னால் அழகியதோர் விடுதி. நேர்த்தியான திரைச் சீலைகளால் மறைக்கப்பட்டு அலங்காரப் பொருள்களால் நிரப்பப்பட்டிருந்தது. அங்கு உருக்கி வார்த்த செப்புச் சிலையாய், அழகுப் பிம்பமாய்த் தளதளவென்று பொலிவுற்ற காட்டுக் கொடி போல் நின்ற கட்டழகி ரங்கதேவியை, நாட்டிய அரங்கத்துக்காகச் சேடியர் அலங்கரித்துக் கொண்டிருந்தனர். அலங்காரம் முடியும் தருணம். விடுதியின் கதவு இலேசாகத் தட்டப்படும் சத்தம் கேட்டுச் சேடியொருத்தி மெல்ல வெளியே தலை நீட்டிப் பார்த்தாள்.

அங்கு வந்து நின்றது சக்கரவர்த்தியான விஷ்ணுவர்த்தனன். வணங்கி நின்ற பணிமகள் சட்டென்று இளவரசிக்கு விஷயத்தை எட்ட விட்டாள். வேகமாக அங்கே வந்த ரங்கதேவி, "வாருங்கள், அண்ணா!" என்று வரவேற்று உள்ளே அழைத்துச் சென்றாள்.

பொன்னாலும் மணியாலும் அலங்கரிக்கப்பட்டு, வண்ணப் பட்டாடையணிந்து பொற்கொடி போல் அவன் எதிரே நின்ற பூங்கொடியாளைக் கண்டு மனம் சொல்ல முடியாத உணர்ச்சிகளால் விம்மிதம் அடைந்தது. அவளை உற்றுப் பார்த்துக் கேட்டான்: "குழந்தாய்! ஏன் உன் முகம் வாடியிருக்கிறது? இந்நிகழ்ச்சியில் உனக்குப் பிரியமில்லையா?"

தலையைக் கவிழ்ந்து கொண்டாள் ரங்கதேவி. ஏனோ அவள் விழிகளில் நீர் நிரம்பியது. பதறிப் போனான் விஷ்ணுவர்த்தனன். "குழந்தாய், ரங்கதேவி! என்ன நேர்ந்து விட்டது? அரங்கேற்றத்தை நிறுத்தி விடட்டுமா?" என்றான் மன்னன்.

சட்டென்று இளவரசி கண்ணீரினூடே ஒரு புன்னகை பூத்தாள். "அதெல்லாம் ஒன்றுமில்லை, அண்ணா! அரங்கேற்றம் எப்படியும் நடக்கத்தான் வேண்டும். எனக்காகத்தானே அண்ணா, நீங்கள் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டீர்கள்! நடன சரஸ்வதியின் ஆலயத்தில் இந்த முத்து விதானத்தின் கீழ் கலா தேவியின் சந்நிதியிலேயே இவ்வரங்கு நடக்க வேண்டுமென்று எத்தனையோ வருஷங்களாகத் தாங்கள் கண்டுகொண்டிருக்கும் கனவை அழித்து விடுவது சரியா? ஒரு நாளும் இல்லை!


மழமழப்பான
சுகமான
க்ஷவரத்திற்கு...
வாழ்வில் வெற்றி கண்டவர்கள் வேறெந்த தயாரிப்பையும்
நாடாமல்
பாமாலிவ்
ஷேவிங் கிரீமைத்தான் உபயோகிக்கிறார்கள்
PALMOLIVE
BRUSHLESS
PALMOLIVE
PALMOLIVE
LATHER
PALMOLIVE
பிரஷ் தேவையில்லை
நேரம் இல்லை—
சுத்தமான உடனடி
க்ஷவரம்!
நுரையுடனோ அல்லது பிரஷ் இல்லாமையோ நீங்களே தேர்ந்தெடுங்கள்
பாமாலிவ் என்றாலே உயர்ந்த ரகம்!


கால்கேட்டின்
துப்புரவாக சுத்தம் செய்யும்
வன்மை உங்களது
பற்களையும் ஈறுகளையும்
பாதுகாக்கிறது !
COLGATE
சாஸ்திரீயமாக அமைக்கப்பட்ட கால்கேட் டூத் பிரஷ் உங்கள் பற்களின் இடுக்குகளில் எளிதாக நுழைகிறது... உட்புறத்தையும், வெளிப்புறத்தையும் துப்புரவாக சுத்தம் செய்கிறது... பல் ஈறுகளை மிருதுவாகத்தடவி உறுதிப்படுத்துகிறது! உங்கள் பற்களையும், ஈறுகளையும் கால்கேட் டூத் பிரஷ்ஷால் பாதுகாத்துக்கொள்ளுங்கள்
* அடல்ட் * ஜூனியர்
* சைல்ட் * பேபி
* ஹார்ட் * மீடியம் * ஸாப்ட்
சுகாதார பிளாஸ்டிக் குழாயில் கிடைக்கும். ரெகுலரும் கிடைக்கிறது.
அழகான பிளாஸ்டிக் பிடிகளில் உறுதியாகப் பொருத்தப்பட்ட ஸ்டெரிலைஸ் செய்யப்பட்ட நைலான் பிரிஸ்ஸில்கள்
COLGATE
Nylon TOOTH BRUSH
இந்தியாவில் சிறந்த டூத்பேஸ்ட் செய்பவர்களால் தயாரிக்கப்படுகிறது!

ஆயினும் சின்ன அண்ணாவின் போக்கு மிகவும் விபரீதமாய் இருக்கும் போலிருக்கிறது. இதோ இதைப் பாருங்கள்!'' என்று தன் கைக்குள் கசக்கி வைத்துக்கொண்டிருந்த ஒரு கடிதத்தைக் காண்பித்தாள்.

சட்டென்று அதை வாங்கிப் பிரித்தான் மன்னன். இரண்டே வரிகள் இருந்தன, அதில் —

''நடன அரங்கேற்றம் நடந்தால் என்னை மறந்து விடு.''

— ரங்கமல்லன்

தலை நிமிர்ந்து தன் சகோதரியை நோக்கினான் விஷ்ணுவர்த்தனன். ''குழந்தாய்! உன் மனத்தில் உள்ளதைத் தயங்காமல் கூறு!''

''என் எண்ணமாவது அண்ணா? சந்தேகமில்லாமல் சின்ன அண்ணாவின் தூண்டுதலால் தான் அவர் இதை எழுதியிருக்கிறார்.''

''அதிருக்கட்டும். உன் விருப்பம் என்ன? அதைக் கூறு! கலைக்காக உன்னுடைய காதலைத் தியாகம் செய்யத் தயாராக இருக்கிறாயா?''

''அண்ணா! கலையும் காதலும் இணைந்து போகும் தன்மையுடையவை. கலையுணர்ச்சி இல்லாதவனிடம் காதல் இராது; காமம்தான் இருக்கும். இளமையும் அழகும் அழிந்தவுடனேயே அதுவும் அழிந்து விடும். ஆகையால் ராயதுர்க்கம் இளவரசன் என்னை உண்மையாகக் காதலிக்கவில்லை என்பது தெரிந்து விட்டது. அப்படிப்பட்டவனுக்காக என்னுடைய கலையை நான் தியாகம் செய்ய விரும்பவில்லை. நேரமாகி விட்டது. மேடையைத் தயார்செய்யும்படி உத்தரவிடுங்கள்!'' என்றாள் உறுதியுடன்.

ஹொய்சாலச் சக்கரவர்த்தி தன் சகோதரியைக் கூர்ந்து நோக்கினான். அவன் முகத்தில் இலேசான புன்னகை விரிந்தது. அப்படியே திரும்பினான், அரங்கை நோக்கி.

தேவியின் சந்நிதியில் கற்பூர ஹாரத்தி நடந்து கொண்டிருந்தது. சிலம்பணிந்த ஒரு மலர்ப் பாதத்தை இலேசாகத் தூக்கி, நர்த்தன பாணியில் விளங்கினாள் சர்வகலா வல்லியாகிய அன்னை. ரத்தினாபரணங்கள் 'டளீர், பளீர்' எனப் பளிச்சிட, அங்கங்கள் அழகே உருவாய் விளங்க, கலைக்கும் கருணைக்கும் இருப்பிடமான தேவியின் அழகிய முகம் தீபவொளியில் புன்னகையுடன் ஜோதிமயமாக ஒளிர்ந்தது.

எதிரே மாபெரும் அரங்கமும் நடன மேடையும். ஆயிரக்கணக்காக அலைமோதும் ஜனத்திரள். கண்ணைப் பறிக்கும் மின்னல் கொடிபோல் மேடையின் மீது தோன்றினாள் ரங்கதேவி.



தேவியின் சன்னிதியில் கரங்கூப்பி நின்றிருந்த ஹொய்சால மன்னன் அம்பிகையைக் கரங்கூப்பி வணங்கிவிட்டு, நடனமேடை யருகில் இடப்பட்டிருந்த பொற்சிம்மாசனத்தில் சென்று அமர்ந்தான். அமைச்சர்களும், பெரியோர்களும் சூழ அமர்ந்தார்கள். மன்னனின் விழிகள் நாற்புறமும் சுழன்றன. அவற்றில் ஒரு கலக்கம். காரணம்? வீரவல்லாளனை அங்கு காணவில்லை.

'ஜல் ஜல்' என்று சலங்கைகள் ஒலித்தன. ஜால்ரா சப்தித்தது; மிருதங்கம் முழங்கியது. யாழும், குழலும் சேர்ந்து இசைத்தன. அஞ்சலி முடிந்தது.

''மாணிக்க வீணா முபலாலயந்தீம்
மதாலஸா மஞ்சுளம் வாக்விலாஸாம்''

என்று ஆரம்பித்தார் நட்டுவனார்.

கரம் குவித்து வணங்க மகாகவியின் தேவி ஸ்தோத்திரத்துக்கு இசைய அபிநயம் ஆரம்பித்தாள் இளவரசி.

சபையில் சற்றும் கலையாத ஒரு பேரமைதி: எத்தனையோ ஆயிரம்கண்கள் ஆடாமல் அசையாமல் மேடையின் மீது நிலைத்து நின்றன.

'விர்'ரென்று எங்கிருந்தோ பறந்து வந்த வாளொன்று, மேடையின் மீது இளவரசியின் பின்னாலிருந்த வண்ணத் திரைச் சீலையின்மீது பாய்ந்து இறங்கியது! 'டணார், டணார்' என்று ஆயிரக்

ணைக்கானசேமக்கலங்கள் ஒன்றுசேர்ந்து ஒலிப்பது போன்ற பெரும் சப்தம் வானைப் பிளந்தது. ஒரு விநாடி முழுப்பு அமைதியே வடிவாயிருந்த ஜனத்திரளிடையே பிரளயமே வந்து விட்டது போன்ற பெருங் கோஷம் எழும்பியது. ஒளிப் பிழம்பாயிருந்த மண்டபத்தைப் பேரிருள் கவ்வியது. தொடர்ந்து எங்கிருந்தோ ஒரு தீப்பிழம்பு தோன்றியது அரங்குக்குப் பின்னால்; ஒரே விநாடியில் தீயின் செந்நாக்குகள் வானை நோக்கி எழும்பின.

"அண்ணா!" என்று அலறிய இளவரசியை வலுவான இரண்டு கரங்கள் பற்றி நெருப்பினின்று வெளியே இழுத்தன. "அண்ணா! அண்ணா! நீ எங்கேயிருக்கிறாய்?" என்று அலறித் துடித்த இளவரசி மூர்ச்சித்து விட்டாள்.

* * *

இதெல்லாம் நடந்து மூன்றாம் நாளிரவு. அந்தப்புரத்தின் அமைதியான சூழ்நிலையில் அன்னத் தூவியாலான அமளியின் மீது படுத்திருந்தாள் இளவரசி. சேடியொருத்தி விசிறிக் கொண்டிருந்தாள், அருகே நின்று. ஒரு புறம் அமர்ந்திருந்த விஷ்ணுவர்த்தனின் விழிகள் இளவரசியின் முகத்தின்மீது பதிந்திருந்தன.

புரண்டு படுத்த ரங்கதேவி மெல்லக் கண்களை விழித்தாள்.

"அண்ணா!.... நீ.... உனக்கொன்றும் இல்லையே!..." அன்புடன் அவள் கரங்களைப் பற்றிய மன்னன், "குழந்தாய்! நான் சுகமாயிருக்கிறேன். யாருக்கும் ஒரு தீங்கும் நேரிடவில்லை. நெருப்பு பரவுவதற்கு முன்பே அணைக்கப்பட்டு விட்டது. ஆயினும் ரங்கமல்லன் உன்னைக் காப்பாற்ற விட்டால் நீ மட்டும் நெருப்பில் அகப்பட்டுக் கொண்டிருப்பாய்! இப்படி நேரிடக் கூடுமென்று கருதி அவன் முன்னாலே அங்கு வந்து காத்துக் கொண்டிருந்திருக்கிறான்!"

"அப்படியானால் அந்தக் கடிதம்?...." வியப்புடன் கேட்டாள் அவள்.

"அதுவும் உன்னைப் பயப்படுத்துவதற்காக வீரவல்லாளனால் எழுதப்பட்டது தான்!" நாணத்தின் செம்மை அவள் முகத்தில் சிவப்பேற்றியது.

"அவனுக்கு?... சின்ன அண்ணா....... அவன் எங்கே?"

சக்கரவர்த்தியின் விழிகள் கலங்கின.

"குழந்தாய்! அவனைத் தேவி தண்டித்து விட்டாள்!" என்றான் மன்னன் தழுதழுத்த குரலில்.

ரங்கதேவியின் விழிகளில் வெம்பனி முத்துக்கள் இரண்டு உதிர்ந்தன. வெடித்து வந்தது அழுகை. அவளுடன் சேர்ந்து சக்கரவர்த்தியும் விம்மிவிம்மி அழலானான் சிறு குழந்தையைப் போல்.

நெடு நேரம் சென்றது. ஓசைப்படாமல் திறந்து கொண்டது அவ் விடுதியின் கதவு. திரும்பிப் பார்த்த இளவரசியின் முகத்தில் கண்ணீர்ச் சுவட்டினூடே ஒரு புன்னகை மலர்ந்தது.

"ரங்கமல்லா!" என்று அன்போடு அழைத்த ஹொய்சாலச் சக்கரவர்த்தி தனது விழிகளைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தவாறு தன் அருமைச் சகோதரியை நோக்கினான்.


குங்குமக் குழம்பாய்ச் சிவந்தது அவள் முகம். இலேசான ஒரு புன்னகையுடன் ஓசைப்படாமல் வெளியே சென்றான் ஹொய்சால மன்னன்.

இளவரசன் ரங்கமல்லன் மஞ்சத்தில் கிடந்த அழகியை நெருங்கினான்.

"ரங்கதேவி!"

நாணம் மிகுதியால் கண்களை மூடிக் கொண்டாள் அவள்.





"பக்கத்திலே ஜயா, உமா, கஸ்தூரி, போதாக்குறைக்கு வாயாடி மாலினி இத்தனை பேர்களும் இருக்கிறார்கள். இந்தப் பாட்டிக்கு ஆனாலும் ஒன்றுமே தெரியவில்லை" என்று அலுத்துக் கொண்டாள் பிரேமா.

பிரேமா கல்லூரியில் 'பிரீ யூனிவர்சிடி' என்ற முதல் வகுப்பு படித்துக் கொண்டிருப்பவள். ஜயா, உமா எல்லோரும் அவளுடைய வகுப்புத் தோழிகள். அவர்கள் எல்லோரையும் வைத்துக் கொண்டு அவளுடைய பாட்டி வைதேகி அம்மாள் அப்படிக் கேட்டிருக்கக் கூடாதுதான். கல்லூரி மாணவியாகிய பிரேமாவுக்குக் கோபம் வந்ததில் வியப்பொன்றுமில்லை.

மீனாக்ஷி அம்மன் கோவிலிலிருந்து வெளியே மேலத்தெரு கோபுர வாசலுக்கு வந்த ஆராவமுதன், தானப்ப முதலி அக்கிரகாரத்துக்குள் நுழைந்து வடக்கு மாசி வீதிக்கு எளிதாகப் போய் விடலாம் என்ற எண்ணத்தைச் செயலாக்க முனைந்தபோது இடையில் நாலைந்து கல்லூரி மாணவிகளுக்கு மத்தியில் இப்படி ஒரு இக்கட்டான நிலை ஒரு எழுபது வயதுக் கிழத்தின் கேள்வி உருவத்தில் முளைக்கும் என்று எதிர்பார்த்தவனே அல்ல.

மிகச் சமீபத்தில் எதிர்பாராது வெடித்த வெடியின் சத்தத்தில் மிரண்டு போய் அருகிலிருந்த வீட்டின் குறட்டில், தான் ஏறிய நிலையானது சில இளம் பெண்களுக்கு ரசித்து மகிழ்வதற்கான நகைச்சுவை நிரம்பிய ஒரு நல்வாய்ப்பை அளித்தது என்பதே, அவர்களது 'கிண்கிணி'ச் சிரிப்பைக் கேட்டுத் திரும்பிய பிறகு தான் அவனுக்குத் தெரியும்.

"என்னடி, பெண்களா! நேரம் போது இல்லாமல் சிரிப்பு?" என்று அதட்டிய வைதேகிப் பாட்டி ஆராவமுதனை உற்றுப் பார்த்து விட்டு, "யாருடா அது? கோமளத்தின் பேரன் ஆராவமுதுவா?" என்று கேட்கவே பெண்கள் மத்தியில் சிரிப்பொலி 'கப்' என்று அடங்கி விட்டது.

ஆராவமுதனுக்கு ஒன்றும் விளங்கவில்லை. கழுகுப் பார்வையுடன் அந்த மங்கிய வெளிச்சத்தில் அவனை இனங்கண்டு பிடித்ததோடு நில்லாமல் அந்தத் தெரு முழுக்கக் கேட்கும்படியான குரலில் இரண்டாவது தலைமுறையிலிருந்து அவனை அறிமுகம் செய்து வைப்பதற்கு இப்பொழுது என்ன அவசியம் வந்தது என்று அவன் யோசிப்பதற்குள் இன்னொரு வெடிகுண்டைத் தூக்கிப் போட்டாள் கிழவி.

"ஆமாண்டாப்பா, வந்தது தான் வந்தே. இந்தப் பெண்கள் அப்பொழுதே பிடித்து ஏரோப்ளேன் வாணமோ என்னமோ, கொளுத்தத் தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதைக் கொஞ்சம் கொளுத்திக் கொடுத்து விட்டுப் போ" என்றாள்.

பிறகு, அந்தப் பெண்களைப் பார்த்து, "கொடுங்களேன், அந்த ஏரோப்ளேன் வாணத்தை. ஆராவமுது கொளுத்துவான். விழித்துக் கொண்டு நிற்கிறீர்களே" என்று ஒரு அதட்டலும் போட்டாள்.

ஆராவமுதனுக்குத் திடீரென்று காலஞ்சென்ற தன் தகப்பனார் வேங்கட தாத்தாச்சாரியாரின் மீது ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. முன் ஒரு காலத்தில் அவன் சின்னஞ்சிறு பையனாக இருந்தபோது அந்த மனிதர் தம் பையன் பட்டாசு வெடித்துக் கையைக் காலைச் சுட்டுக்கொள்ளப் போகிறான் என்ற அதிஜாக்கிரதையான எண்ணத்தில் அவனுக்கு வருடா வருடம் மத்தாப்பு வகையறாக்களை மட்டுமே கொளுத்த அநுமதி அளித்திருந்தார். வெடிக்கும் பட்டாசுகளை மற்றவர்கள் கொளுத்த ஆராவமுதன் அவற்றைப் பார்ப்பதோடு திருப்தியடைய வேண்டியது.

நான்கு வீடுகளுக்கு அப்பால் ஒரு பெரிய யானை வெடியை அநாயாசமாகக் கொளுத்திக் கொண்டிருந்த வாண்டுப் பயலின்மீது ஆராவமுதனுக்கு ஒரே பொறாமையாக இருந்தது.

'ஒரு அழகான வாலிபனுக்கு முன்னால் தங்களுக்கு ஏரோப்ளேன் வாணத்தைக் கொளுத்தத் தெரியவில்லை என்ற குட்டைப் போட்டு உடைத்து விட்டாளே பாட்டி?' என்ற வெட்கம் அந்தப் பெண்களைப் பிடுங்கித் தின்றது.

"வேண்டாம், பாட்டி! நாங்களே கொளுத்திக் கொள்கிறோம்" என்று அவசரம் அவசரமாகக் கத்தினாள் பிரேமா. தொடர்ந்து, "ஆமாம்! ஆமாம்!" என்று மற்றப் பெண்களும் சேர்ந்து கொண்டார்கள்.

ஆராவமுதன் அந்தப் பெண் தெய்வங்களை மானசீகமாக ஒரு முறை வணங்கி நன்றியைத் தெரிவித்துக் கொண்டான். எனவே சிறிது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு, "அது தானே! இந்தக் காலத்துப் பெண்கள் வெறும் ஏரோப்ளேன் வாணம் மட்டுமா, 'ஜெட் பிளேன்' வாணம், இன்னும் 'ஸ்புட்னிக்' வாணம் எல்லாம் கொளுத்த மாட்டார்களா! நீங்கள் ஒன்று!" என்று ஒரு போடு போட்டான். ஏரோப்ளேன் வெடி இல்லாவிட்டாலும் ஒரு நூறாயிர வெடியையாவது வெற்றிகரமாகப் போட்டு வைக்கலாமே என்பது அவனுடைய எண்ணம்!

ஆனால் அந்தப் பொல்லாத பெண்களுக்கு நகைச்சுவைக் குறைவோ; அல்லது சூழல் சரியாக இல்லையோ தெரியவில்லை. அவனது நூறாயிர வெடியும் சரியாக வெடிக்காமல் பிசுபிசுத்துப் போய் விட்டது!

வைதேகிப் பாட்டி இதைக் கவனித்ததாகவே தெரியவில்லை. "ஆமாம்! நன்றாகக் கொளுத்தினீர்கள்! நானும் ஒரு நாழியாகப் பார்த்துக்கொண்டுதானே இருக்கேன். மேலே

பார்க்கிறதும், பிறே பார்க்கிறதும், திரி பற்றிக் கொள்வதற்குள் ஓடி வருவதுமாகத் தாலே பொழுதைப் போக்கிக் கொண்டிருக்கிறீர்கள்? இங்க கொடுங்கோ, அதை ஆராவமுது கொளுத்துவான். பெண்களா உக்ஷணமா நீங்கள் பேசாமல் இருங்கள்'' என்று பிரேமாவின் கையிலிருந்த ஏரோப்ளேன் வாணத்தைப் பிடுங்கி ஆராவமுதன் கையில் கொடுத்தாள் பாட்டி.



வாணம் கொளுத்துவதில் தன்னுடைய திறமையைப் பற்றி அசாத்தியமான நம்பிக்கையை வெளிப்படுத்திய பாட்டியை ஏமாற்றவேண்டியிருக்கிறதே என்று வருந்தினன் ஆராவமுதன்.

தொடர்ந்து அந்தப்பெண்களின் மீது அவனுக்கு எரிச்சல் எரிச்சலாகவந்தது. 'இந்தப் பெண்களுக்கு ஏரோப்ளேன் வாணம் ஒன்றுதான் குறைச்சல்' என்று பல்லைக் கடித்துக் கொண்டான்.

அதற்குள் பாட்டி திடீரென்று நினைத்துக் கொண்டவள் போல், ''ஏண்டா குழந்தை! எங்க பிரேமாவைக் கல்யாணம் செய்து கொள்ளேன். பிரேமா பிறந்தபோதே நானும் கோமளமும் பேசிக் கொண்டிருக்கிறோம். பிரேமா இப்போது கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கிறள்!'' என்றாள்.

பெண்கள் எல்லோரும் 'களுக்' என்று சிரித்து விட்டார்கள்.

பாட்டியின் இந்த இரண்டாவது கட்டளை ஏரோப்ளேன் வாணத்தைக் கொளுத்துவது போல் கஷ்டமாக இல்லாமல் இருந்தது மட்டுமல்ல, இனிக்கவும் செய்தது என்பது ஆராவமுதனுக்கு மட்டற்ற மன மகிழ்ச்சியை அளித்தது.

எப்படியாவது தைரியத்தை வரவழைத்துக் கொண்டு அந்த ஏரோப்ளேன் வாணத்தைக் கொளுத்தி விடுவது என்று தீர்மானித்துக் கொண்டான் ஆராவமுதன்.



தீக்குச்சியை உரைத்து இரண்டு முறைகள் கண்களைப் பாதி மூடியபடியே சற்றுத் தள்ளி நின்ற வண்ணம் வாணத்தைப் பற்ற வைப்பதற்கு முயற்சி செய்தான்.

மூன்றாவது முறை இன்னும் அருகில் நின்று கொண்டு கண்களை நன்றாக திறந்துகொண்டு முயற்சி செய்தான். தீக்குச்சியின் வெளிச்சத்தில் ஏரோப்ளேன் வாணத்தை இப்பொழுது நன்றாகப் பார்த்தவன் 'ஆ' என்று மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தான். 'கார்த்திகைப் பெருமானுடைய கருணையே கருணை' என்று நினைத்துக் குமரக் கடவுளுக்கும் ஒரு கும்பிடு போட்டுவைத்தான்.

ஏரோப்ளேன் வாணத்துக்குத் திரியே காணவில்லை! முன்பே தெரிந்திருந்தால் இவ்வளவு பயப்பட்டிருக்க வேண்டாமே என்று அவன் நினைத்துக் கொண்டான்.

வாணத்தைக் கையில் எடுத்துக் கொண்டு திரும்பியவனிடம், ''ஏண்டாப்பா! கொளுத்தாமல் எடுத்துக் கொண்டு வந்துவிட்டாய்?'' என்று விசாரித்தாள் பாட்டி.

''திரியே இல்லை, பாட்டி! இதைக் கொளுத்தவே முடியாது. அதனால் இனிமேல் இது பிரயோசனப்படாது'' என்று சொல்லிக் கொண்டே அதைக் குப்பைத் தொட்டியை நோக்கி அவசரம் அவசரமாக வீசி எறிந்தான். தன் கையிலேயே இருந்தால் எப்படியாவது அதைக் கொளுத்தி விட்டுத்தான் போக வேண்டும் என்று பாட்டி மறுபடியும் பிடிவாதம்பிடிக்க ஆரம்பித்து விட்டால் என்ன செய்வது என்று அஞ்சியே அதைக் குப்பைத் தொட்டியில் வீசி எறிந்து விட்டான் ஆராவமுதன். இதற்குள் நேரம் ஆகவே பிரேமாவின் கல்லூரித் தோழிகள் அனைவரும் அவளிடம் விடை பெற்றுக் கொண்டு தங்கள் வீட்டுக்குக் கிளம்பினார்கள்.

ஆராவமுதனும் கிளம்பினன்.

பாட்டி அவனை இருக்கச் சொல்லி விட்டு, ''ஆராவமுது! பட்சணங்கள் தருகிறேன். கொண்டு போகலாம்'' என்று கூறிவிட்டு உள்ளே போனாள்.

இப்பொழுது பிரேமாவும் ஆராவமுதனும் மட்டுமே தனியாக இருந்தனர்.

''பாவம், உங்களுக்கு அவ்வளவாகப் பட்டாசு கொளுத்திப் பழக்கமில்லை போலிருக்கிறது!'' என்றாள் பிரேமா மெதுவாக.

ஆராவமுதனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. இருந்தாலும் சமாளித்துக் கொண்டு, ''ஊம்! அதொன்றுமில்லை. அந்த ஏரோப்ளேன் வாணத்திலேதான் திரியேகாணுமே?'' என்று இழுத்தான்.

''நான்தான் திரியைப் பிய்த்து விட்டேன்'' என்றாள் பிரேமா நிதானமாக.

''என்ன?'' என்று திகைத்தான் அவன்.

''ஆமாம். நீங்கள் முதலிலேயே வெடிக்குப் பயந்து கொண்டு இங்கே தஞ்சம் புகுந்ததையும், பின்னாலே எங்கள் பாட்டி உங்களை வாணத்தைக் கொளுத்தச் சொன்னவுடனே நீங்கள் 'திரு திரு' என்று விழித்ததையும் பார்த்தபோதே 'ஐயோ பாவம்! இவருக்குப் பட்டாசு என்றால் பயம் போலிருக்கிறது' என்று எண்ணிக் கொண்டேன். கடைசியில் பாட்டி பிடிவாதமாக என்னிடமிருந்து வாணத்தைப் பிடுங்கும் போது கட்டைவிரல் நகத்தால் அதன் திரியை அடியோடு நறுக்கிவிட்டேன்'' என்று துண்டான திரியை அவன் கையில் கொடுத்தாள்.

ஏரோப்ளேன் வாணம் பற்றிக் கொள்ளாவிட்டாலும் திரியில்லாமல் பற்றிக் கொண்ட பிரேம வாணத்தை நினைத்து அவன் மகிழ்ச்சியடைவதற்கும் பட்சணங்களுடன் கைதேவிப் பாட்டி உள்ளேயிருந்து வருவதற்கும் சரியாக இருந்தது!

இந்தியன் பாங்க் லிட்.

(ஸ்தாபிதம் : 1907)

இந்தியன் பாங்க் பில்டிங்ஸ், வடக்கு பீச் ரோடு, சென்னை-1

சென்னையில் 23 கிளைக் காரியாலயங்கள் உள்ளன

தென்னிந்தியா முழுவதிலும் கிளை ஆபீஸ்களும், பம்பாய், பூனா, புது டெல்லி கல்கத்தா, கொழும்பு, பினாங்கு, கோலாலம்பூர், மலாக்கா & சிங்கப்பூர் முதலிய இடங்களிலும் கிளைகள் உள்ளன

அதிகாரம்பெற்ற மூலதனம்	...	ரூ.	1,00,00,000
வழங்கி வாக்களிக்கப்பட்ட மூலதனம்	...	ரூ.	72,00,000
செலுத்தப்பட்ட மூலதனம்	...	ரூ.	66,19,626
ரிஸர்வ் & இதர நிதிகள் (ஷேர் பிரீமியம் உள்பட)		ரூ.	91,61,883
டிபாசிட்டுகள் (30-6-1958ல் உள்ளபடி)	...	ரூ.	38,00,96,416
அமுலிலுள்ள மொத்த நிதிகள்	...	ரூ.	46,05,11,811

வெளிநாட்டு பரிவர்த்தனையுள்பட சகலவிதமான பாங்கிங் அலுவல்களும் ஏற்று நடத்தப்படும்

London Agents: WESTMINSTER BANK LIMITED
New York Agents: FIRST NATIONAL CITY BANK OF NEW YORK

D. P. பார்த்தசாரதி
காரியதரிசி



படை சிரங்கு

(ECZEMA)

முதலிய சர்ம வியாதிகளுக்கு


லிச்சென்ஸா

உபயோகியுங்கள்

எங்கும் கிடைக்கும்

சிலோன் டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :
மகாராஜா டிஸ்டரிபியூட்டர்ஸ் லிமிடெட்
54, பேங்க்ஷல் தெரு, கொழும்பு

அதிசயமும் அற்புதமுமான சருமப் பாதுகாப்பு



மலபார்

லிம்டா

டாய்லெட் சோப்

தி வெஜிடபிள் சோப் ஒர்க்ஸ்
கோழிக்கோடு-1

பொங்கிவரும்

பதினொரும் அத்தியாயம்

தங்கமான உள்ளம்

மன ஆறுதல் பெற மணிசேகரனைக் கண்டு பேசச் சென்ற பொன்னம்மாளுக்கு அவனிடம் அது கிடைக்கவில்லை. அதற்குப்பதிலாகப் பொன்னம்மாளையே அவன் கோபித்துக் கொண்டான்.

"மகனை வளர்த்திருக்கும் லட்சணத்தைப் பார்! சிறு வயதிலேயே அடக்கியிருக்க வேண்டும். ஒரே மகன் என்பதால் செல்லம் கொடுத்துக் கெடுத்துக் குட்டிச்சுவராக்கி விட்டீர்கள். முழு மடையனை, அயோக்கியனை வளர்த்து விட்டு இப்போது என்னிடம் வந்து புலம்பி என்ன பயன்?"

"மணி! உன்னிடம் மன ஆறுதலைத் தேடி வந்தேன். என்னையும் என் மகன் நடராஜனையும் சேர்த்துத் திட்டுவதால் அல்லல்படும் என் மனத்துக்கு ஆறுதலை நீ அளிக்க முடியாது!"

"திட்டாமல் என்ன செய்வது? பொதுக் கூட்டம் கூட்டி மல்லிகாவை மணக்கத் தீர்மானித்ததற்காக நடராஜனுக்குப் பாராட்டு விழா நடத்துவதா? புகழ் மாலைகளும் மலர் மாலைகளும் சூட்டுவதா? திட்டத்தான் திட்டுவேன்."

"நீகூட இப்படி அசட்டுத்தனமாகப் பேசுகிறாயே, மணி! இதெல்லாம் நாம் சொல்லி நடத்தக் கூடிய காரியங்களா? அவரவர்கள் மனப்போக்கின்படி விட்டு விட வேண்டியதுதானே?"

"மனத்தைச் சரியாக வைத்துக் கொண்டிருப்பவர்களிடம் அப்படி விட்டு விடலாம். தன்னுடைய மனத்தைத் தானே புரிந்து கொள்ளாதவர்களிடம் நாம்தான் எடுத்துச் சொல்ல வேண்டும். ஆனால் தனக்கும் தெரியாது, மற்றவர்கள் சொல்லியும் கேட்க மாட்டேன் என்பவர்களை என்ன செய்வது?"

"நீ என்ன சொல்கிறாய், மணி? நடராஜன் தன் மனத்தை இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்றா?"

"அப்படித்தான் நினைக்கிறேன், மாமி! மல்லிகாவிடம் அவனுக்கு அனுதாபம் ஏற்பட்டிருக்கிறது. அவளும் வாழ்க்கையில் ரொம்பக் கஷ்டத்துக்குள்ளானவள் என்று எனக்குத் தெரியும். அதை அவனிடம் சொல்லியிருப்பாள். அதனால் உண்டான அனுதாபத்தைக் காதல் என்று எண்ணி ஏமாந்து போகிறான்."

"அது உண்மையாயிருந்தால் பின்னால் அவன் ரொம்பவும் மனக் கஷ்டத்துக்குள்ளாவான் அல்லவா? அதை நீதான் கொஞ்சம் எடுத்துச் சொல்லேன்!"

"ஆமாம்! பெற்ற தாய் சொற்படி நடக்காதவன் நான் சொல்லித்தான் கேட்கப்போகிறான்! அவன் ஒரு பாறை, மாமி! கடலோரத்திலே நிற்கும் கற்பாறையின் மீது அலைகள் மேலே மேலே வந்து மோதிக் கொண்டேயிருக்கும், வருஷக்கணக்காக. ஆனால் பாறை கரையாது; அசைந்து கொடுக்காது. அவனிடம் போய் மனிதன் பேசுவானா?"

"இப்போதுதான் உன்னுடைய நோக்கம் எனக்கு நன்றாகப் புரிகிறது. மனத்துக்குள் நடராஜன் மல்லிகாவை மணக்க வேண்டும் என்று நீ நினைக்கிறாய். அப்புறம் விமலாவிடம் நீ கொண்டிருக்கும் காதல் நிறைவேறி விடும் என்று உனக்கு நப்பாசை."

மணி தலையை அசைத்தான். "நடக்காத காரியம், மாமி! உங்களிடம் முன்பு சபதம் செய்தது போல் விமலாவை உலகத்துக்காக நான் கல்யாணம் செய்து கொள்ள முடியும். அதனால் என் காதல் நிறைவேறும் என்ற நம்பிக்கை கிடையாது. மல்லிகாவை நடராஜன் கல்யாணம் செய்து கொண்டால் நான்கு பேருடைய வாழ்க்கையும் வீணாகிப் போகும். சந்தேகமில்லை. ஆனால் 'குட்டிச் சுவரில் முட்டிக் கொள்ளாதே' என்றுதான் சொல்லலாம். அதையும் மீறி, 'அப்படித்தான் முட்டிக் கொள்வேன், நீ யார் கேட்பதற்கு?' என்றால் நாம் என்ன செய்ய முடியும்?"

"எனக்கென்னவோ, மல்லிகா நடராஜன் மனத்துக்கு ஏகந்த பெண்தான் என்றும் நடராஜன் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துவான் என்றும்தான் தோன்றுகிறது, மணி"

"சில நாட்கள், சில மாதங்கள், சில வருஷங்கள்கூட அவ்வாறிருக்கலாம். அதன்பிறகு, கள்ளங்கபடறியாத ஒரு பெண்ணுக்கு இழைத்துவிட்ட துரோகம் அவன் மனத்தை அரிக்க ஆரம்பிக்கும். தான் நடைப்பிணமாக்கிவிட்ட ஒரு மங்கையின் நினைவு அவனை ஆட்கொண்டு கொடுமைப்படுத்தும். கொலைக் குற்றம்

பெருநிலவு

கி. ராஜேந்திரன்

புரிந்து விட்டவன் போல் வாழ்நாள் முழுவதும் கஷ்டப்பட்டுச் சாவான்.''

''கொஞ்ச நஞ்சம் பாக்கியிருந்த மனச் சாந்தியையும் நீ குலைத்து விட்டாய். உன்னிடம் பேச வந்ததே தப்பு.''

''தப்புத்தான் மாமி, தப்புத்தான்! இந்த ஒரு தவறு மட்டுமா? விமலாவையும் நடராஜனையும் அதிகமாக நெருங்கிப் பழக விட்டு அவளிடம் அவனுக்கு அலுப்புத் தட்டிவிட வகை செய்தது தவறு. அவர்கள் இருவருக்கும் கல்யாணம் என்று சிறு வயதிலேயே தீர்மானித்துப் பேசி வந்ததும் தவறு. அதன் மூலம் நடராஜனுக்கு மனத்தில் செருக்கை வளரவிட்டது தவறு. அவனைக் கண்டிக்காமலேயே செல்லம் கொடுத்து வந்தது மிகவும் தவறு...''

''மணி! குற்றப் பத்திரிகை தாக்கல் செய்தது போதும்'' என்றாள் பொன்னம்மாள். ''கடவுள் இருக்கிறார்'' என்று சொல்லிக் கொண்டே எழுந்தாள்.

''உங்கள் மகன் செய்யும் அக்கிரமத்துக்குக் கடவுள் என்ன செய்வார்?'' என்று முணுமுணுத்தான் மணி, அவள் அப்பால் போன பிறகு.

• • •

விமலாவும் நடராஜனும் பேசுவதைக் கேட்டுக் கொண்டே யிருந்த மரகதம்மாள் ''உன் சந்தோஷத்தின் தலையில் இடி விழ'' என்று சபித்துக் கொண்டே உள்ளேயிருந்து வந்தாள். ''இப்படியும் ஒரு பெண்ணா? அந்தச் சினிமாக்காரி மல்லிகாவைக் கல்யாணம் செய்து கொள்ளப் போகிறேன் என்று அவர் வந்து சொன்னால் உனக்கு அதில் சந்தோஷமா உண்டாகிறது?''

''அம்மா! உனக்கு ஒன்றும் தெரியாது. வாயை மூடிக் கொண்டிரு!''

''இப்படி அவர் எதிரிலேயே என் வாயை அடக்கி அவமானப்படுத்துவாய் என்பதால்தான் பேசாமல் உள்ளேயே இருந்தேன். இல்லாவிட்டால் சுடச்சுடக் கேட்டிருக்க மாட்டேனா? அப்பா பெற்றுக்கொண்ட வாக்குறுதியிலிருந்து இவன் விடுதலை யளிக்கிறானாம். எப்படியடி மனம் வந்தது உனக்கு? அதற்கு உனக்கு உரிமைதான் ஏது?''

''என்னைப்பற்றிய விஷயத்தில் எனக்கு இல்லாத உரிமை பின்னர் உனக்கா இருக்கிறது? கொஞ்சம் என்னை நிம்மதியாக விட்டுப் பேசாமல் இரேன்.''

''அந்த நாட்டியக்காரியை அவர் மணந்து கொண்டால் இவன் வருத்தப்படமாட்டானாம்! ஏன் உனக்குப் புத்தி இப்படிப் போகிறது? அவர் காலில் விழுந்து கேட்டுக் கொள்வதுதானே? வேறு இடத்தில் அவருக்குக் கல்யாணமாகி விட்டால் அப்புறம் நீ என்ன செய்யப் போகிறாய்?''

''அம்மா! நீ பேசாமல் இருக்க மாட்டாய்? இன்னும் ஒரு வார்த்தை நீ பேசினால்கூடப் பின்பக்கம் ஓடிப் போய்க் கிணற்றில் விழுந்து விடுவேன்'' என்று பயமுறுத்தினாள் விமலா.

''அதைக் கூடத்தான் செய்யமாட்டேன் என்று வாக்குறுதி கொடுத்திருக்கிறாயே, உன் அருமை அத்தானுக்கு'' என்றாள் மரகதம்மாள் வெறுப்புடன்.

''நான் இப்போது சாவது அத்தான் பொருட்டு இல்லையேயம்மா! உன்னுடைய தொந்தரவைத் தாங்க முடியாமல்தானே?'' என்றாள் விமலா.

அது மரகதம்மாளை அடக்கிவிட்டது. ''என்னவோ அம்மா உன் நன்மைக்குத் தானே நான் சொல்கிறேன். நீ என்னிடமே எரிந்து விழுந்தால் என்ன செய்வது?'' என்றபடியே போய்விட்டாள் சமையலறைக்குள்.

விமலா எழுந்து பூஜையறைக்குள் சென்றாள். அங்கே மண்டியிட்டுக் கரம் குவித்துப் பிரார்த்தித்தாள்.

மதுராந்தகத்தில் அத்தானுடன் கோதண்டராமனைத் தரிசிக்கும்வரை அவளுக்கு மன அமைதி இருக்கவில்லை. அத்தான் குதூகலமாக இருக்க வேண்டும் என்பதுடன் தன் சந்தோஷத்தையும் சேர்த்து வைத்துப் பார்த்து வந்தாள் அதுவரையில். ஆனால் அந்தச் சந்நிதியில் ராமபிரானுடைய அருள் நிறைந்த கண்களும் பிராட்டியின் இதழ்களில் தவழ்ந்த மந்தகாசமும் அவளுக்கு மன அமைதியை நாடும் முறையை உணர்த்தின.

'அத்தான் சந்தோஷமாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் உனக்கு எப்போதுமே உண்டு. ஆனால் அத்துடன் உனது வாழ்க்கையையும் பிணைத்திருந்தாய். அதனால்தான் உனக்கு அமைதி கிட்டவில்லை. சுயநலத்தை அகற்றிவிடு. உன் மனம் முழுமையையும் அத்தானுடைய சந்தோஷத்துக்காகவே அர்ப்பணித்து விடு' என்று உணர்த்தியதாக அவளுக்குத் தோன்றியது.

பகவானின் அந்தக் கட்டளையை நிறைவேற்றி விட்டதாக அவனுக்குக் கண்ணீருக்கிடையே குதூகலம், சந்தோஷம், மன அமைதி எல்லாம் கிட்டின.

"உங்கள் ஆக்ஞைப்படி நடந்து கொண்டு விட்டேன். அத்தானுக்கும் எனக்கும் இடையே இருந்த பிணைப்பை அறுத்து விட்டேன். அவருக்காக இதற்கு மேல் என்னால் செய்யக்கூடியது ஒன்றுமே யில்லை. இனிமேல் அவர் வாழ்க்கையில் இன்பம் பொங்க, மகிழ்ச்சி ததும்பப் பார்த்துக் கொள்ள வேண்டியது உங்கள் பொறுப்பு" என்று வாய்விட்டுக் கூறியபடியே நமஸ்கரித்து எழுந்தான்.

அவன் திரும்பியபோது மணிசேகரன் கண்ணாடியை எடுத்துவிட்டுக் கண்களைக் கைக்குட்டையால் துடைத்துக் கொள்வதைப் பார்த்தாள். அதைத் தான் கவனித்ததாகக் காட்டிக்கொள்ள விரும்பாமல் பூஜைக்குரிய படங்கள் வரிசையாக மாட்டப்பட்டிருந்த சுவர் பக்கமாகத் திரும்பிக் கொண்டாள்.

"விமலா!" என்று அவளை அழைத்தான் மணிசேகரன்.

திடுக்கிட்டவள் போலத்திரும்பி, "எப்போது வந்தீர்கள்?" என்று கேட்டாள் அவள். அவன் கண்ணாடியைத் திரும்பவும் அணிந்திருந்தான். கண்ணீரைத் துடைத்த சுவடு தெரியவில்லை.

"இப்போதுதான் வந்து கொண்டேயிருக்கிறேன், விமலா! எல்லாம் கேள்விப் பட்டேன், பொன்னம்மாள் மூலமாக. நீ மனம் கலங்கக் கூடாது என்று சொல்லிவிட்டுப் போக வந்தேன்."

"இல்லை. நான் கொஞ்சங்கூடக் கஷ்டப்படவே யில்லை! ரொம்ப அமைதியாகத்தான் இருக்கிறேன்."

"விமலா! உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் தனிமையில் பேச வேண்டும். உன் அம்மா காதில் விழ வேண்டாம் என்று நினைக்கிறேன்."

விமலா சமையலறையில் எட்டிப் பார்த்தாள். தாயார் ரொம்ப மும்முரமாக அடுப்பை ஊதிக் கொண்டிருப்பதைப் பார்த்து விட்டு மணியை வாசல் பக்கம் வருமாறு சைகை காட்டினாள்.

"மெதுவாகப் பேசுங்கள். யாராவது வந்திருப்பது தெரிந்தால் என்ன பேசுகிறீர்கள் என்று ஒட்டுக் கேட்பாள்" என்றாள் விமலா.

"பல நாட்களுக்கு முன்னால் நான் பொன்னம்மாளிடம் உன் பொருட்டு ஒரு சபதம் செய்தேன். அதை உன்னிடம் சொல்ல வேண்டிய சமயம் இப்பொழுது வந்துவிட்டது."

விமலா மௌனமாகக் கேட்டாள்.

"நடராஜனுக்குக் கல்யாணம் ஆகும் வரை நான் கல்யாணம் செய்து கொள்வதில்லை என்றும், ஒருவேளை அவன் உன்னைத்தவிர வேறு யாரையாவது மணந்து கொண்டால் நான் உன்னைக் கல்யாணம் செய்து கொண்டு சந்தோஷமாக வைத்திருப்பேன் என்றும் சபதம் செய்தேன்."

விமலாவுக்கு இதைக் கேட்டதும் கோபம் பொத்துக் கொண்டு வந்தது. 'சபதமாம் சபதம்! யார் எதற்காகச் சபதம் செய்வது? என் விருப்பத்தை அறியாமல் என்னைக் கல்யாணம் செய்து கொள்வதாகச் சபதம் செய்ய இவருக்கு என்ன உரிமை இருக்கிறது? எல்லாமே கேலிக் கூத்தாக அல்லவோ தோன்றுகிறது? இவருக்குத்தான் பைத்தியம் பிடித்து விட்டதா? அல்லது நான் மனம் மாறி இவரை மணந்து கொள்வேன் என்று நிஜமாகவே நம்புகிறாரா? அத்தான் என்னை மணந்து கொள்ள மறுத்த பிறகு இன்னொருவரை நான் மனத்தினால் கூட நினைப்பேன் என்று எதிர்பார்த்தால் அவரைப் பைத்தியக்காரன் என்றுதான் சொல்ல வேண்டும். என் மனம் அப்படியொன்றும் தெறிகெட்டு ஓடி விடவில்லை. அப்படிப் பட்ட கேவலமான பெண்ணாக நான் மாறி விட வில்லை. நானென்ன பச்சைக் குழந்தையா? ஒரு விளையாட்டுப் பொம்மை உடைந்துபோனால் இன்னொரு பொம்மையைக் காட்டி அழாமல் பார்த்துக் கொள்வது போல அல்லவா இவர் பேசுகிறார்?

'அப்படி நான் அழுது புலம்பவும் இல்லையே? எனக்கு என்ன வந்து விட்டது? அத்தான் சந்தோஷமாக இருக்கும் வரையில் எனக்கு ஒரு குறைவும் இல்லையே? அத்தான் நடத்தும் இல்லறம் என்னுடன் நடத்துவதாகவே பாவித்துக் கொள்வேன். மல்லிகாவைக் கல்யாணம் செய்து கொண்டு அவர் மகிழ்ச்சியடைந்தால் எனக்கும் மகிழ்ச்சி. அவர் இன்பத்திலே திளைத்தால் எனக்கும் இன்பம். மல்லிகாவை அவர் கோபித்துக் கொண்டால் என்னையே கோபித்தது போல வருத்தமடைவேன். அவள் சமாதானமடையும் போது நானும் கண்ணீரைத் துடைத்துக் கொள்வேன். கை நிறைய அவள் குழந்தையைப் பெற்றெடுத்தால் எனக்கே குழந்தை பிறந்து விட்டது போல ஆனந்தமடைவேன். அதை மடியில் எடுத்து வைத்துக் கொண்டு கொஞ்சி மகிழ்வேன். விதம் விதமாக ஆடை அலங்காரம் செய்து மனம் பூரிப்பேன்.

'என்னுடைய இன்பமும் துன்பமும் அத்தான் நடத்தும் இல்லறத்தின் இன்ப



கண்ணம்மா — என் காதலி

"நீயாகவே செய்து பழகு. படித்துப் பட்டம்பெற்ற பெண் எவளாவது கல்யாணம் பண்ணிக்கொள்ளப் போகிறவள் இப்போதே பழகவேண்டாமா? இதோ, இந்தக் காலத்துப் பெண்களுக்குத்தான் விரல் அசைகிறதா பார்!" என்று முணுமுணுத்தாள் பாட்டி. என் கிழிசல் சட்டையை இன்று நானே — அதுவும் வெளியே போகும் அவசரத்தில் — தைத்துக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம்; வீட்டுப் பெண்மணிகளுக்கெல்லாம் வேறு காரியம், அதாவது, கைக்கு மருதாணி அரைத்து இட்டுக்கொள்ளும் காரியம்!

"ஊசியால் குத்திக்கொண்டு விட்டாற்போலிருக்கிறதே உங்கண்ணா. இரத்தம் வருகிறது மீனு!" என்றாள் என் அத்தை மகள் கண்ணம்மா. தனது பி.ஏ. பரீட்சையை முடித்துக்கொண்டு சென்னையிலிருந்து இன்று காலைதான் வந்து சேர்ந்திருக்கிறாள் அவள்.

"கை சிவந்துவிட்டதாமே மருதாணி இடாமலேயே!" என்றாள் மீனா; உடனே கலீரென்று சிரிப்பொலி; எனக்கோ வலி.

"கட்டுப் போடுங்களேன் விரலுக்கு. கந்தலுக்கா பஞ்சம் இந்த வீட்டில்"

"இருக்கவே இருக்கிறது மீனுவின் பழம்புடவை!" மீண்டும் கும்மாளம்!

இதைத் தொடர்ந்து புடவைகளைப்பற்றிய பேச்சு: இரண்டு வருஷங்களுக்கு முன்பு ஜோடியாக எடுத்த ஒரே மாதிரியான புடவைகளில் மீனுவுக்கு ஒன்றும் கண்ணம்மாவுக்கு ஒன்றுமாகக் கொடுத்தார்களாம்; மீனுவின் புடவை மட்டும் சில மாதகாலத்தில் கட்டுப் போடுவதற்கும் குடுகுடுப்பாண்டிக்கும் போய்விட, கண்ணம்மாவின் புடவை மட்டும் இன்னும் அவள் உடம்போடு இருந்து வருவதைக் கண்டு வியந்தனர்.



"நீயும் மருதாணி இட்டுக்கொள், கண்ணம்மா" என்று உபசரித்தாள் மீனு. "இல்லே, மீனு. அப்புறம் . . ." என்று தயங்கினாள் கண்ணம்மா.

நறுக்கென்று இடைவெட்டினாள் பாட்டி. "பி.ஏ. படிக்கிறவள்கிட்ட என்னடி உபசாரம் உன் பழங்காலத்து மருதாணியை?"



உடனே கண்ணம்மா சொன்னாள்: "மருதாணி எனக்கும் பிடிக்கும், பாட்டி. ஆனால்... இப்போதே இட்டுக் கொண்டுவிட்டால்... வந்து..."

"இட்டுக்கொண்டால் என்ன..."

"ஒன்றுமில்லை... அழுக்குத் துணிகளை இன்றைக்கே துவைத்துக்கொள்ள முடியாமல் போய்விடுமோ என்று யோசித்தேன்."

கண்ணம்மா துணி துவைப்பதாகக் கூறியது எல்லோருக்கும் தூக்கிவாரிப் போட்டது. "வேடிக்கைதான், சலவை செய்வதற்கு நாங்களே வெளியே அனுப்புகிறோம் துணிகளை... இதைக் கேளண்ணா... இவள் சொல்கிறாள்..." என்று என்னைக் கூப்பிட்டாள் மீனா. வெளியே கிளம்பும் அவசரத்தில் இவர்கள் வம்புப் பேச்சைக் கேட்க எனக்கேது நேரம்?

அப்புறம் விளக்கு வைக்கும்போதுதான் வீடு திரும்பினேன். வந்தவுடனே அந்தத் தையல்காரன் 'பில்'லைத் தேடும்படி நேரிட்டது. "அந்த சட்டைப் பையிலே வைத்திருந்தேன், எங்கே அந்தப் பழைய சட்டை? அழுக்குத் துணிகளோடு அனுப்பிவிட்டீர்களா? அடாடா!" என்று கூச்சலிட்டேன். அந்த 'பில்'லை கண்ணம்மாவே கொணர்ந்து கொடுத்ததும் எனக்குப் புரியவில்லை.


"எங்கே ஓடிவிடப்போகிறது உன் சட்டை, பார் இதோ" என்று அம்மா, மேஜைமீது அடுக்கி வைத்திருந்த துணிவரிசையைக் காண்பித்தாள். வெள்ளை வெளேரென்று கண்ணைப் பறிக்க அவற்றைப் பார்த்து பிரமித்து விட்டேன்.

"தன் கையினாலேயே கண்ணம்மா இவ்வளவையும் துவைத்திருக்கிறாள். படித்தும் கர்வமில்லாத பெண்!" என்றாள் அம்மா. தும்பைப் பூவைப்போல பளிச்சிட்ட அந்தச் சட்டையை உடுத்தியதும் புதியதோர் பொலிவை உணர்ந்தேன்; அதே சமயம் அத் துணிகளையெல்லாம் துவைத்தவள் மீது பச்சாத்தாபமும் உண்டாயிற்று. "இவ்வளவு துணிகளையுமா துவைக்கும்படி விட்டீர்கள், சிரமப்பட்டிருப்பாளே, பாவம்!" என்றேன்.

இதைக் கேட்டுவிட்ட கண்ணம்மா சொன்னாள்: "இதில் சிரமம் என்ன அத்தான். ஸன்லைட் சோப் உபயோகித்தால் இலகுவாயிற்றே! ஏன் தெரியுமா?" சுத்தம் வாய்ந்த சோப்பானதால் ஸன்லைட், சக்திவாய்ந்த நுரை கொழிக்கிறதென்றும், அடித்துத் துவைக்காமலேயே அந்த நுரை, அழுக்கை அறவே அகற்றிவிடக் கூடியது என்றும் விளக்கினாள் கண்ணம்மா.



"அவள் சொல்வதும் சரிதானே. அடித்துத் துவைத்துப் பிழியவும் வேண்டாம்; அப்புறம் கிழிசல் தைக்கிறேன் என்று ஊசியால் குத்திக்கொள்ளவும் வேண்டாம்!" என்றாள் பாட்டி குத்தலாக.



"முன்னமே தெரியாமல் போச்சு, கிழியாமல் பளிச்சென்று வெகுகாலம் வைத்துக் கொண்டிருக்கலாம்" என்று சொல்லிக் கொண்டாள் மீனா.

பாட்டிக்கோ பரம சந்தோஷம்: தன் பேத்தியின் கரங்களைப் பற்றியபடி வாழ்த்தினாள்: "என் கண்ணம்மாவின் கைக்கு மருதாணிதான் இடவேண்டும். இவளைக் கொத்திக்கொண்டு போகிறவன் கொடுத்து வைத்தவன்!" அப்போது பார்க்க வேண்டும் கண்ணம்மாவின் கன்னத்தில் ஏறிய சிவப்பை!

துன்பங்களுடன் இழைந்துதான் வர முடியுமேயன்றி தனிப்பட்ட முறையில் எனக்கும் இனி இல்லற சுகம் ஏது?

'இதைப் புரிந்து கொள்ளாமல் இவருடன் நான் இல்லறம் நடத்த முடியும் என்று எண்ணுகிறார். அத்தகைய வாழ்க்கையில் நான் இன்பம் துய்ப்பேன் என்று கருதுகிறார்.

'அர்த்தமற்ற சபதம் எதையோ செய்து விட்டு அதைப் பெருமையுடன் வந்து சொல்லிக் கொள்கிறார். ஏதோ பெரிய உதவியை எனக்குச் செய்வதாக வேறு நினைக்கிறார்! அத்தான் அப்பால் போனவுடன் வெட்கங் கெட்டுப் போய் இவரை மணப்பேன் என்று ஆசையுடன் எதிர்பார்க்கிறார்!'

அவ்வளவு கேவலமாகத் தன்னை மதித்து விட்ட மணிசேகரனை நாக்கில்



நரம்பில்லாமல் கண்டபடி திட்ட வேண்டும் என்று தோன்றியது விமலாவுக்கு.

தன்னுடைய கோபத்தைக் கஷ்டப் பட்டு அடக்கிக் கொண்டு, "உங்களைப் பற்றி நான் கொண்டிருந்த நல்ல அபிப்பிராயத்தை மாற்றிக் கொள்ள வேண்டியதுதான். என்னை நன்கு புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்று எண்ணி வந்தேன். அது தவறு என்று இப்போது தான் தெரிகிறது. என்னிடம் அன்புடனும் அனுதாபத்துடனும் நடந்து கொள்வீர்கள் என்று நம்பினேன். பல வருஷங்களாக நெருங்கிப் பழகியுள்ள நீங்கள் கூட என் மன நிலையைப் புரிந்து கொள்ளாமல் பேசுவது வேதனை யளிக்கிறது" என்றாள்.

"விமலா! நானா உன்னைப் புரிந்து கொள்ளவில்லை? உன்னைச் சுற்றியுள்ளவர்களில் யாராவது ஒருவர் உன்னைச் சரியாகப் புரிந்து கொண்டிருக்கிறார்கள் என்றால் அது நான் தான். அதனால்தான் உன்னை வேறு யார் தலையிலும் கட்டி விட வேண்டாம், நானே மணந்து கொள்கிறேன் என்று சபதம் செய்தேன்."

"நடக்காத காரியம்" என்றாள் விமலா அழுத்தமாக. "நான் சம்பந்தப்பட்டிருக்கும் ஒரு விஷயத்தில் என்னைக் கேட்காமலே நீங்கள் அளித்த எந்த வாக்குறுதியும் உங்களைப் பாதிக்காது. கவலைப்படாதீர்கள். அத்தானுக்கு விடுதலை யளித்தது போலவே உங்களுக்கும் சபதத்திலிருந்து விடுதலை யளிக்கிறேன்."

"உன்னுடைய விடுதலையைக் கோரி நான் வரவில்லை, விமலா! சொல்வதை முழுக்கக் கேட்டுவிட்டுப் பேசு! யார் யாரைச் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்பது அப்போது தெரியும்!" என்று அதட்டிய மணி, தொடர்ந்து கூறினான்:

"நடராஜனின் மனத் தடுமாற்றத்தை அப்போதே நானும் பொன்னம்மாளும் உணர்ந்து மனம் விட்டுப் பேசினோம். நாங்கள் நடராஜனைப் பற்றி அதிகமாகக் கவலைப்படவில்லை. அவனுடைய நடத்தையினால் நீ அடையக் கூடிய துன்பத்தை எண்ணித்தான் கவலைப் பட்டோம். நடராஜனுக்குக் கல்யாணம் ஆனபிறகு, உன் உள்ளத்திலே காதலுக்கு இடம் இருக்காது. வேறு யாருடனும் நீ இல்வாழ்க்கை நடத்த முடியாது என்பதைப் புரிந்துகொண்டோம். ஆனால் அதே சமயத்தில் உன்னைக் கல்யாணம் ஆகாமலே வீட்டில் வைத்திருக்க முடியாது; உலகத்தின் கண்களுக்கு நீ இல்லறம் நடத்துவதாகத் தோன்ற வேண்டும் என்று தீர்மானித்தோம்.

"அப்போதுதான் மாமி, உன்னை மணந்து கொண்டு, காதலை எதிர்பார்க்காமல் தூய நட்பினால் ஆறுதலளிக்க வேண்டும் என்று என்னைக் கேட்டுக் கொண்டாள். நானும் அப்படியே சபதம் செய்தேன். அதை நிறைவேற்றவும் தயாராக இருக்கிறேன், விமலா!"

விமலா ஒரு கணம் ஸ்தம்பித்துப் போனாள். அடுத்த கணம் உடல் முழுவதும் நடுக்கம் ஏற்பட்டது, 'எவ்வளவு பயங்கர சபதம்! அதைச் செய்யவும், நிறைவேற்றவும் எவ்வளவு மன உறுதி வேண்டும்? என்னிடம் எவ்வளவு அன்பு இருக்க வேண்டும்? இத்தகைய உத்தமரைப் போய் என்னைச் சரியாகப் புரிந்துகொள்ள வில்லையோ என்று சந்தேகித்தேனே?' அவள் இதயம் நெகிழ்ந்தது; கண்களில் நீர் சுரந்தது.

"நான் சொல்வது உனக்குப் புரியவில்லையா விமலா!" என்று சந்தேகத்தோடு கேட்டான் மணிசேகரன்.

"நன்றாகப் புரிகிறது" என்றான் விமலா நாத் தழுதழுக்க. "தங்கமான உங்கள் உள்ளத்தை எண்ணும்போது பேச்சு வர வில்லை. உங்களைக் கணவனாக அடையப் போகிறவன் யாராயிருந்தாலும் அவன் பாக்கியசாலிதான். நான் அவ்வளவு பாக்கியம் செய்திருக்கவில்லை. என்னைத் தான் துரதிர்ஷ்டம் விடாப்பிடியாகத் துரத்திக்கொண்டே யிருக்கிறதே!"

"என்னை மணக்க நீ மறுத்தாயானால் அதைவிட வேறு துரதிர்ஷ்டம் எனக்கு நேரப் போவதில்லை. நான் சொல்வதைக் கேள். கல்யாணம் செய்து கொண்டு இலக்கிய நண்பர்களாக வாழ்வோம். தமிழில் உள்ள அத்தனை இலக்கியங்களை யும் கரைத்துக் குடிப்போம். வள்ளுவன் முதல் பாரதி வரை எல்லாரையும் நமது உற்ற நண்பர்களாக்கிக் கொண்டு சங்கம் அமைப்போம். மேனாட்டு இலக் கியகர்த்தாக்களையும் நமது சங்கத்தில் சேர்த்துக் கொள்வோம். ஆங்கிலத்தை யும் ஜெர்மனையும், பிரெஞ்சையும் ரஷ்ய மொழியையும் பயில்வோம். அந்தப் பாஷைகளில் உள்ள இலக்கியங்களை யெல்லாம் படித்து இன்புறுவோம்."

"பிதற்றல்!" என்றான் விமலா.

"ஏன் அப்படிச்சொல்கிறாய், விமலா?"

"காதல் இல்லாத இலக்கியம் எங்கே யிருக்கிறது?"

மணிசேகரன் பதில் கூறத் தெரியாமல் வாயடைத்துப் போய் நின்றான்.

சற்று நேரம் மௌனம் நிலவியது. அங்கே. "சில நாட்கள் யோசிக்க இடம் தாருங்கள்" என்றான் விமலா.

மணிசேகரன் மனத்தில் நம்பிக்கை துளிர் விடத் திரும்பினான்.

பதினேழாம் அத்தியாயம்

மல்லிகாவின் சீற்றம்

நடராஜனுடைய கார் கண்ணுக்கு மறையும் வரை பார்த்துக் கொண்டிருந் தாள் மல்லிகா. நடராஜனுடன் சேர்ந்து நிலவை அனுபவித்து மகிழ்ந்ததால் அவள் கால்கள் தரையில் பாவவில்லை. ஆகாயத்தில் மிதப்பது போல ஒயிலாக நடந்து சென்று வீட்டுக்குள் நுழைந் தாள். நிலைப்படியைத் தாண்டியதும் அவளைக் காண ஏற்கனவே வந்து காத் துக் கொண்டிருந்த டைரக்டர் குமார னுடைய விநோதமான செய்கைகளைக் கண்டு சற்றுத் தயங்கி நின்றாள்.

டைரக்டர் குமாரன் மேஜையைக் குத்தினார். முகத்தை அழுத்தி அழுத் தித் தடவி விட்டுக் கொண்டார். தலை மயிரைக் கோதி விட்டார். விரல் களைச் சொடுக்கினார்.

அவருடைய கண்கள் தூக்கமின்மை யால் சிவந்திருந்தன. முகத்தில் கவலை யும் பயமும் குடிகொண்டிருந்தன. மல் லிகா அங்கு வந்து நின்றதை அவர் கவனிக்கவில்லை. தம்முடைய அகன்ற கைகளில் முகத்தைப் புதைத்துக் கொண்டு உட்கார்ந்திருந்தார்.

"அப்பா! அப்பா!" என்று அவரைக் கூப்பிட்டாள் மல்லிகா.

விரல்களைச் சிறிது சிறிதாக அகற்றி ரத்தம் தேங்கி நின்றது போன்ற சிவந்த கண்களால் மல்லிகாவைப் பார்த்து விழித்தார் குமாரன். புருவங்களை நெறித்துக் கொண்டு, "வந்து விட் டாயா?" என்று கேட்டார்.

"ஆமாம், அப்பா! வந்து விட்டேன். உங்கள் உடம்புக்கு என்ன? கண்கள் ஏன் இப்படிச் சிவந்திருக்கின்றன? முகம் ஏன் இப்படிப் பேயறைந்தது போலத் தோற்றமளிக்கிறது?"

திடீரென்று குமாரன் உரக்கச் சிரித் தார். எழுந்து நின்று வயிற்றைப் பிடித் துக் கொண்டு முழங்கால் வரை குனித் தும் அண்ணாந்து பார்த்தும் பயங்கர மாகச் சிரித்தார். மல்லிகாவின் உடல் அந்தக் கோரச் சிரிப்பைக் கேட்டு நடு நடுங்க ஆரம்பித்தது.

"அப்பா! அப்படிச் சிரிக்காதீர்கள். எனக்குப் பயமாயிருக்கிறது."

சட்டென்று சிரிப்பை நிறுத்திவிட்டு, அவளை முறைத்துப் பார்த்தார் குமாரன். விழி பிதுங்க அவளைப் பார்த் துக் கொண்டே நெருங்கி வந்தார். "பயமாயிருக்கிறது என்றா சொன்னாய், மல்லிகா? உனக்குப் பயம் என்றால் என்னவென்று தெரியுமா? தெரிந் திருக்க முடியாது. என்னைக் கேள். நான் சொல்கிறேன். உடல் நடுங்கினால் பயம் என்று நினைக்கிறாயா? இல்லை, மல்லிகா இல்லை; இதயத்துடிப்பு சில நிமிஷங்கள் அதிகமாகிக் குறைவதும் பயமில்லை. இந்தப் பயமெல்லாம் சில நிமிஷங்கள் சில மணி நேரம் இருக்கும், போய்விடும். அதற்குப் போயப பயமாயிருக்கிறது என்று சொல்லி விட்டு நடுங்குகிறாயே.

"ஆனால் நிஜமாகவே பயம் என்றால் என்னவென்று எனக்குத் தெரியும். என் னைப் பயம் ஆட்கொண்டு பதின்மூன்று வருஷங்கள் ஆகின்றன. மல்லிகா! ஆம், பதின்மூன்று வருஷங்களுக்கு முன்னால் நான் ஒரு கொலை செய்து விட்டேன்.



ஊன்றிய
நம்பிக்கையோடு
நீங்கள் லோமா
உபயோகிக்க எவ்வயதும்
ஏற்ற வயதே
லோமா
எம். எம். கம்பாட்வாலா. அஹமதாபாத்-1.
MPS-TAM

அன்றிலிருந்து இன்று வரை, ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நிமிஷமும், விநாடியும் என்னைப் பயம் ஆட்கொண்டிருக்கிறது. அது உனக்கு எங்கே தெரியப் போகிறது? போகட்டும், நான் எதற்குச் சிரித்தேன் தெரியுமா? என் முகத்தைப் பார்த்தால் பேயறைந்தது மாதிரி இருக்கிறது என்று சொன்னாயல்லவா? அதற்காகத்தான். நீ சொன்னது ரொம்ப ரொம்ப உண்மை, மல்லிகா! என்னைப் பேய்தான் அறைந்து விட்டது. நான் கொன்று குழி வெட்டி மூடிய மனிதன் பேயாக மாறி என்னைத் தொடர்ந்து வந்துகொண்டே யிருக்கிறான். திடீர் திடீரென்று நினைத்துக் கொண்டு என் முகத்தில் அறைகிறான். அப்போதெல்லாம் என்னுடைய முகம் பேயறைந்த மாதிரி மாறிவிடுவதில் ஆச்சரியமென்ன, மல்லிகா?'' என்றார் சுகுமாரன்.

மல்லிகாவுக்கு அருவருப்பும் பயமும் அதிகரித்தன. என்ன செய்வது என்று தெரியவில்லை. அந்தப் பேச்சைக் கேட்கவும் அவள் விரும்பவில்லை. எவ்வளவு சந்தோஷமாக வந்தாள்? அப்பாவிடம் கல்யாணப் பேச்செடுத்துச் சம்மதம் பெற வந்தவளிடம் பேயைப் பற்றியும் கொலையைப் பற்றியும் பேச்சு! மல்லிகா மெல்ல மெல்லப் பின்னால் நகர்ந்தாள். அந்த அறையை விட்டுப் போய்த் தன் படுக்கை அறைக்குச் சென்று கதவைத் தாளிட்டுக் கொண்டுவிட வேண்டும் என்று அவளுக்குத் தோன்றியது.

அவள் பின்னால் நகருவதைக் கவனித்து விட்டார் சுகுமாரன். ''மல்லிகா! போகாதே!'' என்று தொண்டை கிழியக் கத்தினார். பயந்து போய் ஓட ஆரம்பித்த அவளைத் தாவிப் பிடித்துத் தம் பக்கமாக இழுத்தார். ''மல்லிகா! நான் 'திடீரென்று அவ்வளவு அருவருக்கத் தக்கவனாக மாறி விட்டேனா? எதற்கு என்னைத் தனியே விட்டு விட்டுப் போகிறாய்? போகாதே! எனக்குத் துணையாக இந்த உலகத்தில் வேறு யாருமே இல்லை. நீ ஒருத்திதான் இருக்கிறாய். நீயும் போய் விடாதே! அதோ பார்! அந்த மூலையில் அந்தப் பேய் நிற்கிறது! என்னைப் பார்த்துப் பல்லை இளித்துச் சிரிக்கிறது. நீ அப்பால் போய் விட்டால் என்னை அடித்துத் துன்புறுத்தும். உன் அப்பாவிடம் உனக்குப் பிரியம் இல்லையா? அவரைத் தனியாக விட்டு விட்டுப் போகலாமா?'' என்று கண்ணீருடன் அவர் கெஞ்சினார்.

''அப்பா! இத்தனை நாட்களாகச் சரியாகத்தானே இருந்தீர்கள்? இன்று திடீரென்று என்ன வந்து விட்டது? ஏன் இப்படி ஏதேதோ பிதற்றுகிறீர்கள்? பேயுமில்லை, பிசாசுமில்லை. எல்லாம் மனப் பிரமை. பேசாமல் வீட்டுக்குப் போய்த் தூங்குங்கள்; காலையில் எல்லாம் சரியாகி விடும்.''

''தூக்கமா? எனக்கு ஏது மல்லிகா தூக்கம்? நான் சரியாகத் தூங்கிப் பதின்மூன்று வருஷங்கள் ஆகின்றன! நான் தூங்குவதற்காக அந்தப் பேய் காத்துக் கொண்டிருக்கும்போது நான் எப்படித் தூங்க முடியும்? தப்பித் தவறிக் கண் அயர்ந்தால் அதோ தன் கையில் வைத்திருக்கிறதே ஒரு கயிறு. அதிலே ஒரு சுருக்குப் போட்டு என்னுடைய கழுத்திலே மாட்டி......''

''அப்பா! கொஞ்சம் பேசாமல் இருங்கள். வேண்டாம்! என்னால் இதற்கு மேல் பொறுக்கவே முடியாது'' என்று காதைப் பொத்திக் கொண்டு சொன்னாள் மல்லிகா.

''மல்லிகா! அந்தப் பேய் தன் முயற்சியில் வெற்றி பெறாவிட்டாலும் சட்டமும் நீதியும் என்றாவது ஒரு நாள் வெற்றி பெறும். அப்போது என்ன செய்வார்களாம், தெரியுமா? ஒரு கிணற்றின் மீது பலகையைப் போட்டு அதில் நிற்க வைப்பார்களாம். மேலே விட்டத்திலிருந்து தொங்கும் சுருக்கைக் கழுத்தில் மாட்டி விட்டுப் பலகையை அகற்றி விடுவார்களாம். ஒரு முறைக்கு இரண்டு முறையாக இப்படிச் செய்து நிச்சயப் படுத்திக் கொள்வார்களாம்!''

''அப்பா! அப்பா! நான் உங்களுக்கு என்ன தீங்கு இழைத்தேன்? ஏன் இப்படி என்னை வதைக்கிறீர்கள்? என்னைப் போக விடுங்கள்! மன்றாடிக் கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன். என்னைத் தயவுசெய்து விட்டு விடுங்கள்!''

''மல்லிகா! இந்த விதமாக நான் இறந்துபோக நேர்ந்தால் அதற்கு நீயும் பொறுப்பாளிதான். நான் தூக்கிலிடப் பட்டுச் செத்துப் போனால் அதற்குக் காரணம் நீதான்!''

மல்லிகா துவண்டு விழப் பார்த்தாள். மேஜையைப் பிடித்துக் கொண்டு, ''அப்பா! என்னைக்கொன்றுபோடுங்கள்! இப்படியெல்லாம் சொல்லி அணு அணுவாகச் சிதைக்காதீர்கள்'' என்றாள்.

''நான் உண்மையைச் சொன்னேன், மல்லிகா! உண்மை கசப்பாகத்தான் இருக்கும். இன்று காலையில் சேகர் என் வீட்டுக்கு வந்தான். அந்தப் போட்டோவையும் கடிதங்களையும் போலீஸாரிடம் கொடுத்து எல்லாவற்றையும் சொல்லி விடப்போவதாகச் சொன்னான். நீ அவனைக் கல்யாணம் செய்து கொண்டிருந்தால் அப்படி நடக்குமா? அதனால்தான் சொன்னேன், நான் தூக்கிலிடப்பட்டால் நீதான் காரணம் என்று.''

"அப்பா! அந்த "யோசனையை" உங்களுக்குச் சொன்னதே நான்தான். உங்களுக்காக என் வாழ்க்கையையே பாழடித்துக் கொள்ளத் தயாராக இருந்தேன். மனச்சாட்சிக்கு விரோதமாக நான் விரும்பாத ஒருவனை, அருவருக்கும் ஒருவனை மணந்து கொள்ளத் தீர்மானித்தேன். ஆனால் அவர் என்னை ஏற்றுக் கொள்ள மறுத்தார். அதற்கு நான் என்ன செய்ய முடியும், அப்பா?"

"நீ என்ன செய்ய முடியுமா? மனம் வைத்தால் உன்னால் முடியாத காரியம் உண்டா என்ன? உன்னை மணந்து கொள்ள மாட்டேன் என்று சொல்லவில்லை அவன். சினிமா நட்சத்திரத்தைத்தான் மணந்து கொள்வேன் என்றான். அவ்வளவுதானே? நீதான் நடிக்கவே மறுக்கிறாய்! அவன் மனத்தை மறுபடியும் மாற்ற நீ முயற்சி எடுத்துக் கொள்ளவில்லை. உன் உடலில் குடி கொண்டிருக்கும் வனப்புக்கும் அழகுக்கும் அவனைச் சுண்டு விரலால் ஆட்டுவிக்கலாம், மல்லிகா!"

திடீரென்று மல்லிகாவுக்குக் கோபம் பொத்துக் கொண்டு வந்தது.

"உங்களுக்காக அந்த அழகை உபயோகிக்கச் சொல்கிறீர்களா? வெட்கமாக இல்லையா?" என்று சீறினாள்.

சுகுமாரன் அவள் முகத்தைப் பார்க்க முடியாமல் குனிந்து கொண்டார். "இல்லை, மல்லிகா! அப்படிச் சொல்லவில்லை. நீ முயற்சி செய்திருந்தால் அவனைக் கல்யாணத்துக்குச் சம்மதிக்கச் செய்திருக்கலாம் என்றேன். ஆனால் உனக்கு நடராஜன் மீது காதல். அந்தக் காதலைப் பூர்த்தி செய்து கொள்ள என்னைக் கைவிட்டாய். உன் சுயநலத்துக்காக என்னைப் பரிதவிக்கவிட்டாய்."

"சுயநலமாம் சுயநலம்! சுயநலமே உருவான ஒருவர் சுயநலம் கூடாது என்று மற்றவர்களுக்கு உபதேசிப்பது வேடிக்கைதான், அப்பா! இதுவரையில் நடந்திருப்பதையெல்லாம் யோசித்துப் பாருங்கள். எல்லாமே உங்களுடைய சுயநலத்துக்குத்தானே நடந்திருக்கின்றன? கதிர்வேலனைக் கண்டு பிடித்தீர்கள். அவனைப் பயமுறுத்தி உங்களுடைய சுயநலத்துக்காகப் பயன்படுத்திக் கொண்டீர்கள்! கடைசி வரையில் அவன் உங்களுக்காகக் கேவலமான வழிகளில் உழைத்தான். உங்கள் இரும்புப் பெட்டியை ரூபாய் நோட்டுக்களால் நிரப்பினான். கடைசியில் தன் கரங்களையும் உங்களுக்காக இழந்தான். அப்போதும் உங்களைக் காட்டிக் கொடுக்காமல் உங்களுக்குப் பதிலாகச் சிறைவாசத்தை அனுபவித்தான். என்னையும் உங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டீர்கள். உங்கள் படங்களில் நடிக்கச் செய்தீர்கள். இலங்கையிலிருந்து கள்ளத்தனமாக வைரங்களைக் கொண்டுவர என்னை உபயோகித்தீர்கள். எனக்குத் தெரியாது என்று நீங்கள் எண்ணியிருக்கலாம். ஆனால் என் மார்பிலே தவழ்ந்து கொண்டிருந்த போலி வைர மாலைக்குள் பதுங்கியிருந்த அசல் வைரக் கற்களைப் பற்றி எனக்கே தெரியாமல் போகுமா என்ன? இப்போது மறுபடியும் உங்கள் சுயநலத்துக்காகச் சேகரை மயக்கிப் பித்தனாக அடித்துக் கல்யாணமும் செய்து கொள்ளச் சொல்கிறீர்கள்.

"இத்தனை நாட்களாக உங்களிடம் எனக்கு அனுதாபம் இருந்து வந்தது, அப்பா! இப்போது அதெல்லாம் சென்றவிடம் தெரியாமல் மறைந்து விட்டது. உங்களுடைய சுயநலத்துக்காகப் பாடுபட்டது போதுமென்று தோன்றிவிட்டது. என்னுடைய நலனைத்தான் நான் இனிமேல் நினைக்கப் போகிறேன். சற்று முன்னால் நீங்கள் என்னிடம் பேசியதெல்லாம் நாடகம் என்று தெரிந்து கொண்டேன். பேயைப் பற்றியும் தூக்கு மேடையைப் பற்றியும் பேசினால் நான் உள்ளம் நெகிழ்ந்துபோவேன், உங்களுக்காக மனத்தை மாற்றிக் கொண்டு சேகரைக் கல்யாணம் செய்து கொள்ள முயற்சி செய்வேன் என்று திட்டமிட்டு வந்தீர்கள். நான் அதற்கெல்லாம் ஏமாற மாட்டேன், அப்பா! என்னைக் கல்யாணம் செய்து கொள்வதற்கு வேறு ஒருவர் தயாராக இருக்கிறார். நான் பார்க்கிறேன்."

"நடராஜனைப் பற்றித்தானே நீ பேசுகிறாய் மல்லிகா? அப்படிச் செய்யாதே! இந்த இக்கட்டான நிலையில் என்னைக் கைவிட்டு விடாதே! என்னுடைய சொத்தில் பெரும் பகுதி சேகருக்குக் கொடுத்தே கரைந்து போய் விட்டது, மல்லிகா! மறுபடியும் மறுபடியும் கேட்டுக் கொண்டே இருக்கிறான். எத்தனை நாட்களுக்கு அவனைச் சமாளிப்பது? நான் எத்தனையோ தவறுகள் செய்திருக்கிறேன். இல்லை என்று சொல்லவில்லை. அதற்கெல்லாம் மனப்பூர்வமாக மன்னிப்புக் கேட்கிறேன், மல்லிகா! என்ன இருந்தாலும் நான் உன்னுடைய அப்பா இல்லையா? என்னை மன்னித்து விட மாட்டாயா? மன்னித்துவிட்டு நான் சொன்னபடி கேட்க மாட்டாயா? உன்னைப் பெற்ற தகப்பனுக்காக இந்தக் காரியத்தைச் செய்யக் கூடாதா?" என்று குழைந்தார் சுகுமாரன்.

"நீங்களா என்னைப் பெற்ற தகப்பன்?" என்று கேட்ட மல்லிகா, "என்னைப் பெற்றவர் இறந்து பதின்மூன்று வருஷங்களாகிவிட்டன" என்றாள். (தொடரும்)

உற்சாகத்துடன் கால
தாமதமின்றி மரியாதை
யுடன் வாடிக்கையாளர்
களின் சேவைக்காகவே
இருக்கின்றது
இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க்

பிற்கால உதவிக்கும், குடும்பப் பாது
காப்பிற்கும், பிறரை நாட வேண்டி
யதைத் தவிர்க்க மக்களுக்கு நீண்ட
காலமாக சேவை செய்துவரும்
இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்கில்
சிறு தொகையாகச் சேமியுங்கள்.

கீழ்க்கண்ட கிளைகளில் Safe Deposit Locker வசதிகள் இருக்கின்றன.

எஸ்பிளனேட் (மதராஸ்)
மயிலாப்பூர் (மதராஸ்)
புரசைவாக்கம் (மதராஸ்)
மாதுங்கா (பம்பாய்)
திருச்சிராப்பள்ளி
காரைக்குடி
கல்கத்தா




தி இந்தியன் ஓவர்ஸீஸ் பாங்க் லிட்.
சென்னை

கிளைகள் : பம்பாய் (கோட்டை, மாண்ட்வி, மாதுங்கா) கல்கத்தா, மதராஸ் புதுடெல்லி, ஹைதராபாத் மற்றும் தென்னிந்தியாவிலும் உள்ளன.

வெளிநாட்டுக் கிளைகள் ரங்கூன், கொழும்பு, ஈப்போ, கோலாலம்பூர் பினாங்கு, சிங்கப்பூர், மலாக்கா, பாங்காக், ஹாங்காங், ஸைகான்.

சென்னை கிளைகள் : எஸ்பிளனேட், மவுண்ட் ரோடு மயிலாப்பூர், புரசைவாக்கம், தியாகராயநகர் சௌகார்பேட்டை.

10B-4-66



செவ்வாய் கிரஹத்திலிருந்து.....

அண்டை வெளிக்கு செல்லும் விமானமானது செவ்வாய் கிரகத்திலிருந்து இன்னும் 15 நிமிடத்தில் மேற்றளம் 4-ல் வந்து சேரும். வந்தனம்.

இதைக் கேட்பதற்கு நம்பத்தகாத கற்பனையாக தோன்றவில்லையா? இருந்தபோதிலும் விஞ்ஞானத்தின் துரிதமான முன்னேற்றத்தின் காரணமாக, இன்று இம்மாதிரியான பிரயாணங்கள் நிச்சயமாக நிகழக்கூடியனவைதாம் என நம்பப்படுகிறது.

வருங்காலத்தில் ஒவ்வொரு கிரகங்களுக்கும் பூமிக்குமிடையே உள்ள அண்டை வெளியில் விமானநிலையங்கள் கட்டப்படும். இவ்வகையாக விமானநிலையங்களைக் கட்டுவதற்கு பூமியிலிருந்து இயந்திர கருவிகளும் சாதனங்களும் அனுப்பப்படும்—இவைகளை அண்டை வெளியில் ஒன்றாக இணைத்து விமானநிலையத்தைக் கட்ட முடிப்பதற்கு உதவப்போகின்றது.

பூமியிலிருந்து வெகுதூரம் வியாபித்து இந்த அண்டை வெளியின் மேற்றளமானது பூமியைச்சுற்றிச் சுழலும். இந்த மேற்றளங்கள் மனிதன் கிரகங்களை அடைவதற்கு மேற்கொள்ளும் பிரயாணத்தில் முதல் தங்குமிடம்.

துரிதமாக விஞ்ஞானம் வளர்ந்து கொண்டிருக்கும் இக்காலத்திலும் புதுப்புது முறையில் பலவாக சிந்தித்து கொண்டிருக்கும் இவ்வுலகில்கூட அன்றாட வாழ்க்கைக்கு சில பொருள்கள் ஒரேமாதிரியான உற்சாகத்தை தொடர்ந்து அளிக்கின்றன—உதாரணமாக வில்ஸ் நேவிகட் சிகரெட்டுகள்—புகை பிடிப்பதிலுள்ள இன்பம் பூரணமாயும் கொடுப்பதற்கு மிகவும் சேர்த்தியாக அமைந்திருக்கிறது. இந்த இன்பத்தை எல்லோராலும் வெகு எளிதில் அடையலாம்.



வில்ஸ் என்றாலே
சிறந்த சிகரெட்டுகள்

IWC 152

Issued by The Imperial Tobacco Company of India Limited

விளையாட்டுப் பிள்ளையார்

வாசவன்

சீவன்களில் ஏழை கணபதிராயன். தொப்பை வயிற்றுக்கு வருவோர் போவோரே துணை. சிங்கம்பட்டிகணபதி அப்படி அல்ல; பத்து ஏக்கர் கொண்ட மூதல் நம்பர் பட்டாவுக்குரிய சிறு மிராசுதார்.

மிராசுதார்களுக்கு இப்போது போதாத காலம் அல்லவா; சிங்கம் பட்டி கணபதிக்கும் போதாத காலம் வந்து விட்டது. ஏர் பிடித்து உழாமல் வாரம் வாங்கிக் கொள்ளும் மிராசுதாராக இருந்ததால் அந்த வினை தீர்க்கும் பெருமானுக்கே பெரும் வினை சூழ்ந்து விட்டது உச்சிப் பகல் வேளையில் மட்டை அரிசிப் பொங்கல் உண்டு, ஒரு சந்தி விரதம் இருக்கும் அவருடைய நெடு நாள் பழக்கத்துக்கும் போதாத வேளை அடுத்து விட்டது.

கணபதியின் காரியக்காரர் கிராமக் கர்ணம் முத்துச் சர்க்கரையப்பப் பிள்ளை வானத்தில் பொன் சேவல் கூவியதும், வெற்றிலைப் பெட்டியும், புகையிலையைக் குதப்பத் துடிக்கும் கன்னமுமாகத் திண்ணைக்கு வந்தார். வெற்றுக் கடகத்தைக் குப்புறக் கவிழ்த்து விட்டு, கும்பிடு போட்டு நின்றான் பிள்ளையார் கோயில் பூசாரி மாயாண்டிப் பண்டாரம்.

"என்னடா, பண்டாரம்! வெள்ளைச் சாமித்தேவன்கிட்டே போறியா?" என்று வெற்றிலைப் பெட்டியைத் திறந்தார் கர்ணம்.

"போனேனுங்க. சின்னையா உடையான்கிட்டே போறிறதுதானே? அவனவன் கோயில் நெல்லைப் பதுக்கிக்கிட்டு, ஆறு காலத்துக்குப் பேசுறானுங்க. அதுக்கெல்லாம் ஒரு முடிவு கண்டா, நான் பூசைக்கு நெல் தாரேன் இல்லேன்னு பிள்ளையார் கோயில் பூட்டியே கிடக்கட்டும்னு சொல்லிட்டாரு" என்றான் மாயாண்டிப் பண்டாரம்.

கர்ணம் கையில் எடுத்த வெற்றிலை தாறுமாறாகக் கிழிந்தது. "அப்படியா சொன்னான் அயோக்கியன்? சரி, உடையான் கிட்டே போனியா?"

"போகாமே இருப்பேனுங்களா? அந்த பயனுசன் அதுக்கு மேலே ஆட்டம் போடுறாரு. 'மூணு வருசக் கோயில் வார நெல்லை வாயிலே போட்டுக்கிட்டானே தொத்தக் கோனான். அவனை என்னு கேட்கிறதுக்கு இந்த ஊரிலே நாதி இருக்கா? 'ஒரு மணி நெல்லைக் கூடத் தரமாட்டேன், போடா'ன்னு விரட்டிட்டாரு. தொத்தக்கோனார் சங்கதி நமக்குத் தெரிந்த விசயந்தானே! அதுதான் நேரே வெத்துக் கடகத்தோடே இங்கே வந்துவிட்டேன். நீங்கதான் படியளக்க வேணும்." பண்டாரம் கடகப் பெட்டியை நிமிர்த்தி வைத்தான்.



"அந்தப் பயலுக அடாவடித்தனம் பண்ணுகிறபோதெல்லாம் நாழியை அளந்து கொடுத்துப் பூசைக்குச் கணக்கும் வராமே நான் பார்க்கிறதால்தானே இப்படிக் கொழுப்புப் பிடிச்சு ஆடுகிறானுங்க? ஊரைக் கூட்டிப் பஞ்சாயம் வைக்க ஒரு ஒழுங்குபண்ணுகிற வரையிலே ஒரு பிடி நெல்லுகூடத் தரமாட்டேன்!" என்று காரமாகக் கத்திவிட்டு ஒரு பிடித்த பிடி சுற்றைக் காம்பைத் தம் வாயில் அடக்கிக் கொண்டார் முத்துச் சர்க்கரை.

"அப்படியானால் இன்னிக்குப் பூசை?" மாயாண்டி கேள்வியோடு சர்ந்து வளைந்தான்.

"இன்னிக்கு ராத்திரி ஊரைக் கூட்டிப் பஞ்சாயம் வைக்கிறேன். நியாயம் தீர்ந்ததும் கணபதிக்கு வழி பிறக்கட்டும்."

"பிள்ளையார் அப்பச்சியைப் பட்டினி போடறது ஊராரைச் சேர்ந்த விஷயம். ஆனால் நான் தவறாமே பரம்பரை பரம்பரையா மணி அடிக்கக்கிட்டு வாரோம். இன்னிக்குமட்டும் நிறுத்திறது எப்படிங்க? நான் பாட்டுக்கு வழக்கம் போலே மணியையாவது அடிச்சுக்கிட்டுப் போகட்டுங்களா?" என்றான் மாயாண்டி.

"மணியை அடிச்சிடுவியா? மணிக்கட்டை முறிச்சிடுவேன். கோவிலைத் திறக்கப்படாது. கொண்டா, இப்படிச் சாவியை!" என்று இரைச்சலிட்டு விட்டுக் கையை நீட்டினார்.

மாயாண்டிக்குக் கண்ணீர் வந்தது. இடுப்பிலிருந்த சாவி மட்டும் அத்தனை சீக்கிரமாக அவிழ்க்க வரவில்லை. கடைசியில் வேறு வழியின்றிச் சாவியை எடுத்துக் கொடுத்தான். அதை வாங்கிக் கொண்டு உள்ளே சென்றார் கர்ணம்.

அன்று இரவு. உடையார் குடி இருப்பு, மறவர் குடி இருப்பு, கோனார் குடி இருப்பு, வேளாளர் தலைக்கட்டு—முதலிய ஊரின் பகுதிகளிலிருந்து வீட்டுக்கு ஓர் ஆள் வீதம் முத்துச் சர்க்கரையப்பப் பிள்ளையின் வீட்டு வாசலில் கூடி இருந்தனர். கிராம ஊழியர்களான பண்டாரம், ஆசாரி, நாவிதர், வண்ணார், பள்ளர் ஆகியோர் சற்று ஒதுங்கி நின்று கொண்டிருந்தனர்.

சுமார் நூறு பேருக்கும் அதிகமான அந்தக் கூட்டத்தில் ஓர் இருமல் சத்தம் கூட வரவில்லை. ஒவ்வொரு குடி இருப்புக்காரரும் பகுதி பகுதியாகப் பிரிந்து மறைமையை அடக்கிக் கொண்டிருக்கும்



கருமேகத்தைப் போலக் கனன்று கொண்டிருந்தனர்.

முத்துச் சர்க்கரை கூட்டத்தைப் பார்ப்பதும், பார்வையை இழுத்துப் பெருமூச்சு விடுவதுமாக இருந்தார். பேசுவதற்கே பிடிக்காதது போல அவர் உதடுகள் விரிந்து, குமிந்து, சுருங்கி நசுங்கிக் கொண்டிருந்தன.

அந்தப் பஞ்சாயத்துக்கு நெய்வயல் ஆறுமுகம் சேர்வையும் விசேஷமாக அழைக்கப்பட்டிருந்தார். அவர் நீதி வழங்குவதில் வல்லவர். சுற்றுப் பகுதிகளில் அவருக்கு மிகுந்த செல்வாக்கு உண்டு. அக்கிரமம் செய்தவர்கள் அவருடைய முறுக்கு மீசையைப் பார்த்ததுமே பணிந்து அபராதம் செலுத்தத் தயாராகி விடுவார்கள். அவரும் நீண்ட நேரமாக மீசையைத் திருகிப் பார்த்தார். காலம் மௌனத்தில் மடங்கிக் கொண்டிருந்தது. ஆனால் மீசை மட்டும் மடங்கவில்லை.

ஆறுமுகம் சேர்வை செருமினார். அத்தனை தலைகளும் நிமிர்ந்தன. "என்ன பிள்ளைவாள்! ஊரையெல்லாம் உங்க வீட்டு வாசலிலே கட்டி வைச்சிட்டு நீங்கபாட்டுக்கு ஊமைப் பிள்ளையாராயிருந்தால்?.... என்ன பஞ்சாயம்?" என்று கேட்டார் அவருக்கே உரித்தான செருக்குச் சிரிப்புடன்.

'கணபதி கோயில் பூட்டிக் கிடக்கு. அவர் நிலத்திலே வருஷத்துக்கு நூறு கல நெல் விளையுது. ஆனால் இன்னிக்கு அவர் கோவிலப் பட்டினி. நீங்களே ஊரிலே நியாயத்தைக் கேளுங்க" என்று படபடத்தார் முத்துச் சர்க்கரை.

ஆறுமுகம்சேர்வைக்கு ஏற்கனவே விவகாரம் தெரியும். அதனால் விவகாரத்துக்கு விதை போட்ட பாலையத்தேவனை நிமிர்ந்து பார்த்தார்.

மறவர்கள் பக்கம் சலசலப்பு எழுந்தது. பாலையத்தேவன் கண்கள் செவ்வரி படர்ந்தன. "ஏன் கணபதி கோயில் பூட்டிக் கிடக்குதுன்னு கர்ணத்தையே கேளுங்க. ரொம்ப நாட்களாக எங்க தலைக்கட்டார் இடத்திலே அவருக்கு வன்மம். எங்க பேரிலே பழியைப் போட்டுக் கோயிலை இழுத்து மூடினால்தானே ஊர்ப் பகை எங்க மேலே விழும்? கோயிலை ஏன் இழுத்து மூடணும்? போன வருஷம் நெல்விற்று முதல் வரவு கர்ணத்திடம் இல்லே? அதிலேயிருந்து நெல் வாங்கிக் கொடுத்துப் பூசை வைக்கச் சொல்லி இருக்கப்படாதுங்களா?"


"அதிருக்கட்டும், பாலையப்பா! நீ ஏன் பூசைக்கு நெல் கொடுக்கலே?" என்று குரலை உயர்த்தினார் சேர்வை.

"நான் கொடுக்கலே என்கிறபோது இவ்வளவு விவகாரத்தை வளர்த்த கணக்குப்பிள்ளை, சின்னையா உடையார் வாரத்து நெல்லையே அமுக்கின போது ஏன்னு ஒரு வார்த்தை கேட்டாரா? சின்னையா உடையார் பணம் வாங்காமல் இவருக்கு ஆட்டுக்கிடையை ஓட்டிக் கொடுத்தார். அதுக்காகக் கர்ணம் நியாயத்தை அமுக்கப் பார்க்கிறதா? நானும் இந்த விவகாரம் அம்பலத்துக்கு வரவேணும்னுதான் 'கோயில் பூசைக்கு நெல் கொடுக்கல்லே' என்றான் பாலையப் பத் தேவன் திருகு மீசையை நன்றாக முறுக்கிக் கொண்டு.

சின்னையா உடையார் சீற்றத்துடன் எழுந்தார். "வாயை மூடு, பாலையப்பா! ஆள் கட்டு உம் பக்கம் அதிகமிருந்தால்


எச்சரிக்கை!
உங்கள் ஜலதோஷம்
அபாயகரமாகக் கூடும்!
கடும் வியாதி ஆரம்பிக்கு முன்னரே, இந்த
நல்ல, சக்தி மிகுந்த ஆயின்மென்ட்டால,
சளி உபாதைகளை ஒழியுங்கள்!
2 விதங்களில் ஜலதோஷத்திலிருந்து
நிம்மதி தருகிறது.
1
மூக்கின் வழியாக வேலை செய்கிறது.
2
சருமத்தின் வழியாக வேலை செய்கிறது.
விக்ஸ் வேபோரப்
மார்பிலும், முதுகிலும்,
தொண்டையிலும் தேய்த்தாலே போதும்!
VICKS
VAPORUB


மேலும் மலிவானது!
குடும்பம் முழுவதற்கும் ஒரே டால்க்
PROTEX
All Purpose
TOILET POWDER
ப்ரோடெக்ஸ்
சர்வ பிரயோக டாய்லெட் பவுடர்
ஜயண்ட் சைஸ் அழகிய
டப்புடன் கிடைக்கும்!



கப் காலி
என்றால்...
டீ நன்றாக
இருந்தது!
TEA BOARD
INDIA

நியாயத்தையும் அடிச்சுக் கொன்னுவிடலாம்னு பார்க்கிறீயா? தொத்தக் கோனார் மூணுவருஷமா வாரம் கொடுக்காதபோது நீ முரண்டுகிறதுதானே? உனக்கும் அவருக்கும் கரி வியாபாரத்திலே கூட்டு இருந்தால், உன்ன விவகாரம்கூட உன்னை போயிடுமா?"

அவர் துண்டைப் பரப்பி விட்டு உட்கார்ந்ததும், உடையார் பகுதியில் புழுதி பறந்தது. "மறவங்க மீசையை முறுக்கி முறுக்கி எங்க கொல்லைக் காட்டிலே ஆட்டை ஓட்டி விட்டு மேய்க்கிறதை இனியும் பொறுக்க மாட்டோம். இந்தக் கோயில் வார விவகாரத்தோடே எல்லா விவகாரமும் தீரணும். அதுவரை எங்க தலைமை உடையாரை நெல் கொடுக்க விடமாட்டோம்" என்று சீறினார்கள் வாலிபர்கள்.

கோனார் வகையரா மட்டும் என்ன சளைத்ததா? தொத்தக் கோனார் பேரன் வீரண்ணன் விருப்போடு பேசினான்: "உடையார்மாருங்க கோயில் நெல்லைக் கொடுக்கவில்லைன்னு சொல்லியிருந்தா நாங்க ஏற்றுக் கொள்கிறோம். பாளையத் தேவரோடு சேர்ந்து எங்க தாத்தா கரி வியாபாரம் செய்கிறதை இந்தக் கூட்டத்திலே சின்னையா உடையார் ஏன் சொல்லணும்? 'தொத்தக் கோனாருங்க தானே; அவங்களை ஓட ஓட விரட்டலாம்' என்கிற நினைப்போ? அந்தக்காலம் மலை ஏறிப் போச்சு. நாங்களும் மூப்பது தலைக்கட்டுக்காரங்க இருக்கோம்."

மூன்று பகுதிகளிலும் ஒரே ஆரவாரம். தேவர்கள் முண்டாசை இழுத்துக் கட்டினார்கள். உடையார்கள் கம்புகளை எடுத்துப் பிடித்தனர். கோனார்கள் பாய்ந்து குதறத் துடித்தார்கள். நிலை கட்டுக் கடங்காமல் போய், வெட்டுப் பழி குத்துப் பழி விழும்போலாகி விட்டது.

ஆறுமுகம் சேர்வை அத்தனை காட்சிகளையும் வாய் மூடியே பார்த்துக்கொண்டிருந்தார் உதட்டுக்கு மேலே உலகம் அளந்து வந்த சிரிப்பு மிதந்தது. கம்பீரமான குரலை உரத்து எழுப்பினார்: "ஏண்டா, எல்லோருக்கும் மண்டையை உடைக்கக் கொள்ள வேணுமின்னு ஆசையிருந்தா, விவகாரத்தை வேறிடத்திலே வைக்கக் கொள்கிறதுதானே? இங்கே நடக்கிறது பஞ்சாயம், எவனாவது கொம்பு அலைத்தால் சீவிவிடுவேன். சீவி!" என்றார்.

அமளிகள் அடங்கின. முண்டாசு அவிழ்ந்தது. கம்பு கீழே தாழ்ந்தது.

"கோயிலைச் சாத்தப்படாது, நாளைக்கே திறக்கிறதுக்கு வழி செய்யப் போறீங்களா, இல்லையா?" சேர்வைகாரரின் குரல் வேண்டுகோளாக ஒலித்தது.

"கோயில் சம்பந்தப்பட்ட எல்லா விவகாரங்களும் தீர்ந்தா நான் கட்டளைப்படி பூசைக்கு நெல் கொடுக்கிறேன். உடையார் நெல்லும், கோனார் நெல்லும் வரணும், கணக்குப் பிள்ளை ஐயா கணக்கு வழக்குகளை ஒப்பிக்கணும். மூணும் வருஷம் பாண்டுகுடிச் செட்டியாருக்கிட்டே போட்ட நெல்லுக்கு, புரோ நோட்டு எழுதி வாங்கியிருக்கிறார் அவர். இப்போப் பாண்டுகுடிச் செட்டியார் ஏழையாய்ப் போயிட்டார் அவர் நோட்டை வைச்சு நாம் என்ன செய்யறது? அந்தத் தொகையைக் கணக்குப் பிள்ளை ஐயா சொந்தத்திலே வசூல் செய்கிறாரா என்று கேளுங்க. இத்தனையும் தீர்ந்தால் என் நெல்லு தன்னாலே கோயிலிலே வந்து குவியும்" என்றான் பாளையப்பத் தேவன்.

முத்துச் சர்க்கரையின் மூக்கில் கோபம் வேர்த்தது. "சேர்வைக்காரரே! பாளையத்தேவன் வேணுமின்னே வழக்கு கொண்டு வாரான். மூணும் வருஷம் பாண்டுக்குடிச் செட்டியாரு கிட்டே நெல் போடுகிறதுக்கு முன்னாலே ஊரைக் கூட்டிப் பஞ்சாயத்திலே சம்மதி கேட்டேன். அப்போ இந்தப் பாளையப்பன் ஒன்னரை முழத்துக்குத் தலையை நீட்டிச் சம்மதம் கொடுத்தானா இல்லையா என்கிறதை இங்கே கூடியிருக்கிற ஊராரையே கேளுங்க. முறைப்படி நான் எல்லோரையும் கேட்டு நடந்ததினாலே நோட்டுத் தொகையை ஊர் பூராவும் பங்கு போட்டுத்தான் வசூலிக்கணும். அப்படி இஷ்டப்பட்டால் என் பங்குத் தொகையை இப்பொழுதே தர, 'ரெடி'யாக இருக்கேன்."

பாளையப்பத்தேவன் மூக்கு உடைபட்டு அவமானத்தில் முகத்தைத் திருப்பிக் கொண்டான்.

"வழக்கை யெல்லாம் தீர்த்துக் கோயிலைத் திறக்கிறதுன்னா, இந்த ஜன்மத்திலே நடக்காது. இதற்காக விவகாரத்தை விட்டு விட வேண்டாம். சாவகாசமாக ஒரு நாளைக்கு வைச்சுக் கொள்வோம். முதல்லே நாளைக்குக் கோயிலைத் திறக்கணும்" என்றார் ஆறுமுகம் சேர்வை.

"நல்லாத் திறக்கச் சொல்லுங்க. சாவிகூட இப்போ கணக்குப்பிள்ளையிடம்தானே இருக்கு!" என்று நீல வானத்தைப் பார்த்துக் கொண்டு கூறினான் பாளையப்பத் தேவன்.

"கோயிலைத் திறந்தால் போதுமா? பூசை வைக்க வேண்டாமா?"

"வைக்கச் சொல்லுங்க."

"பூசைக்கு நெல்லு வேணுமே! காலையிலே உன் வீட்டுக்குப் பண்டாரம் வரு



வான். சின்ன மரக்காலிலே இருபது மரக்கால் அளந்து கூடு!"

"அளக்கவேண்டியவங்களெல்லாம் முதல்லே அளந்து கொடுத்தால் பிற்பாடு நான் அளந்து கொடுக்கிறேன்."

ஆறுமுகம் சேர்வை அகன்று விரிந்த பார்வையைச் சின்னய்யா உடையார் மேல் செருகினர்.

"என்ன உடையாரே! உங்க நெல்லையாவது கொடுக்கலாமா?"

"தேவரும் கோனாரும் வாரத்தை அளந்துவிட்டால் நம்ம நெல்லு சொல்லாமே வந்து சேரும்!" என்று பெரும் புதிர் விடுத்தார் உடையார்.

சேர்வைக்காரரின் மீசை 'விண்' ணென்று மேலே எழும்பியது. "எல்லோரும் பிடிச்ச முயலுக்கு மூணு காலுன்னு சொல்றிங்க! கோனாரே, உங்க முயலுக்கு எத்தனை கால்?"

"மூணு கால்தானுங்க! விவகாரம் வந்து விட்டபோது வீம்பை விட்டுக் கொடுக்க முடியுங்களா? அவங்க நெல்லுக்கு அடுத்து என் நெல்லும் இருக்கும்" என்று தொத்தக் கோனார் விவகாரத்தைப் பழுக்க வைத்தார்.

"விட்டோடுங்க சங்கதியை! தலைக்குத் தலை அம்பலமாய்போச்சு. விவகாரம் திரட்டும். அப்புறம் மெதுவாகக் கோவிலைத் திறந்துக்கலாம். இதோ இருக்கு கோயில் சாவி. எவன் தலைப்பாகை கட்டிக்க ஆசைப்படுகிறானோ, அவனே திறக்காத கோயிலை மேற்பார்க்கட்டும்" என்று இரைந்த முத்துச் சர்க்கரை, கோயில் சாவியைக் கூட்டத்துக்கு முன்னே வீசி விட்டு, 'விசுக்' கென்று எழுந்து வீட்டுக்குள் நுழைந்தார்.

ஆறுமுகம் சேர்வைக்கு அடங்காத ஆத்திரம். முன்னே கிடந்த சாவியை எடுத்துத் தம் ஜேபியில் செருகிக் கொண்டார். கூட்டத்தைப் பார்த்தார். கனல் பரப்பினர். "டேய், சிங்கம்பட்டியான்களா! உங்க கம்பும், வீறுப்பும் எவ்வளவு நீளம் இருக்கும்? அதையும் நான் பார்த்தாகணும்... இன்னும் ஒரு மாசத்துக்குள்ளே நீங்களெல்லாம் ராசியாகிக் கோயில் சாவியை வந்து வாங்கலேயானால் உங்க ஊர் பிள்ளையார் கோயில் நிர்வாகத்தை எங்க தெய்வயான் காரங்க எடுத்து நடத்துவோம். அப்புறம் 'எங்க கோயில்'னு வர பயல்களை எலும்பு தொறுங்க அடிச்சு விரட்டுவோம்." அம்பு விடுபட்டதைப் போல் 'விருட்' டென்று கூட்டத்தை விட்டு வெளியேறினர்.

பஞ்சாயத்துக்காகக் கூடிய கூட்டம் இந்தாறு கோலமாகக் கலைந்தது.

ஊர் இரண்டுபட்டதில் ஒரே ஒருவருக்குத்தான் நஷ்டம். அந்த ஒரே ஒருவர் கடவுள்களுக்கெல்லாம் முதல்வர் ஸ்ரீமான் சிங்கம்பட்டி மிராசுதார் கணபதி அவர்கள்தான்.

கோயிலுக்கு வெளியே ஒரே வெளிச்சம். ஊரில் நல்ல விளைச்சல், களஞ்சியங்கள் வழிந்தன. ஊருணிக் கரையில் சிறு சிறு குன்றுகள் போல் வைக்கோல் போர்கள் புதுக்கமறல் எடுத்தன. ஊரில் பிளவு கண்டிருந்தாலும், வைக்கோல் போரை அடைத்து வைப்பதற்கு ஊருணிக் கரையில்தான் எல்லோரும் ஒன்று கூட வேண்டும். வேறு தோதான மேட்டுப் பொட்டல் எதுவும் பக்கலில் இல்லை.

எத்தனைதான் ஊர் செழித்திருந்தாலும் ஒருவருக்காவது கணபதியை இருட்டறையிலிருந்து திறந்து விட்டு இரண்டு கவளம் கொடுக்க வேண்டுமென்று தோன்றவில்லை.

அன்று இரவு ஊராரின் வாழ்க்கையில் தோன்றிய வெளிச்சம் ஊருணிக் கரையில் ஆயிரம் செந்நாக்குகளை நீட்டி வானத்தைச் செம்மை ஆக்கியது. அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்த ஊர் மக்கள், 'தீ' என்று எவனோ ஒருவன் ஓலமிட்டதைக் கேட்டுப் பதறி எழுந்து ஊருணிக் கரையை நோக்கி ஓடினர். அங்கே அத்தனை வைக்கோல்போர்களும் எரிந்து சாம்பலாகித் தணிந்து கொண்டிருந்தன.

'ஊர்ப் பகையாளியோ நெருப்பிட்டிருப்பானோ?' எல்லோரும் மண்டையை உடைத்துக் கொண்டபொழுது பாளையப் பத்தேவன் ஒரு முடிவு கண்டவனாகப் பேசினான்: "இதற்குக் காரணம் மனிசன் இல்லே. கணபதி அப்பன். அவனை ஒரு மாதமாகப் பட்டினி போட்டோம். அதற்கு ஒரு வருஷத்துக்கு நம்பளைப் பட்டினி போட்டுட்டான்."

சின்னையா உடையார் அனுசரித்துக் கூறினார்: "இன்னிக்கு மாட்டுக்கு, நாளைக்கு மனுசனுக்கன்னு திரும்பிட்டா என்ன செய்யறது?"

தொத்தக் கோனார் சுருதி கூட்டினார்: "ஏன் திரும்பாது? அவன் நிலத்தை உழுது கஞ்சி குடிக்கிற நாம், அவனுக்குக் கஞ்சி இல்லாமே செய்து விட்டோம். ஊரை ஒதுக்கி வைச்ச ஊருணிக் கரையிலே நெருப்பு மூலமா நமக்கு எச்சரிக்கை காட்டி இருக்கிறான். இதிலே நாம் திருந்தலையானால் நம்ப தலையிலேயே நெருப்பு வைச்சிடுவான்!"

முப்பது நாட்களாக மூன்று கிளைகளாகப் பிரிந்திருந்த ஊர், சங்கமித்துக் குரல் கொடுத்தது. "விடிஞ்சவுடனே கோயிலைத் திறக்கவேணும். பிள்ளையா



வித்வான்: கச்சேரிகளை நீங்கள் விமர்சனம் செய்வதால் என் கச்சேரியையும் அவசியம் கேட்டு ..... இரண்டு வார்த்தை பாராட்டும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்'

ருக்குப் பால் பள்ளயம்போட்டு நம்ம பாவத்தைக் கரைத்துக் கொள்ளணும்.''

விடிந்தது.

நெல் வயல் ஆறுமுகம் சேர்வை, கண்ணைத் துடைத்த கையால் அறந்தாங்கிக் காளைக் கன்றின் திமிலைத் தடவி விட்டுக் கொண்டிருந்தார்.

''கும்பிடுகிறோம்!''

திரும்பிப் பார்த்தார் சேர்வை. எதிரே சிங்கம்பட்டி முத்துச்சர்க்கரை, பாளையப்பத்தேவன், சின்னையா உடையார், தொத்தக் கோனார் முதலியோர் நின்று கொண்டிருந்தனர்.

''வாங்க!'' என்று வரவேற்ற சேர்வையின் குரலில் ஆச்சரியமோ, பரபரப்போ இல்லை. ''எங்கே இப்படி? சண்டைத் தளபதிங்க நாலு பேர்களும் சேர்ந்து வந்திருக்கிறது கொடுமையா இருக்கே!.. மாட்டுக்கு வைக்கோல் வாங்கிப் போகலாம்னு வந்திருக்கீங்களா?''

''ஐயாக்கிட்டே கோவில் சாவியை வாங்கிக்கிட்டுப் போகலாம்னு வந்திருக்கிறோம்!'' என்றார் சின்னையா உடையார்.

''உங்க விவகாரம் தீர்ந்து போச்சா?''

''பிள்ளையாரைப் பட்டினி போட்டதுக்கு ஊரெல்லாம் சேர்ந்து 'தண்டனை'யை அனுபவிச்சிட்டோம். இனிமேல் விவகாரம் இல்லாமே காரியத்தை முடிக்கிறதாகத் தீர்மானிச்சிட்டோம். நாங்க கொடுக்க வேண்டிய வார நெல்லை இன்னிக்குக் கணக்குப் பிள்ளையிடம் ஒப்படைச்சிடப் போகிறோம். இனி யாரும் வாரத்துக்குப் பிள்ளையார் நிலத்தை உழப் போகிறதில்லை. ஊரெல்லாம் சேர்ந்து உழுது, உழைத்துக் கண்டு முதலாகிற நெல்லை அப்படியே கோயிலுக்குச் சேர்த்திடப் போகிறோம். இதனாலே வாரம், சாரம், போட்டி, பொறாமை, எதுவும் வராது பாருங்க!'' என்றார் தொத்தக் கோனார்.

''இதை முதலிலேயே செஞ்சிருக்கலாமே!''

''இடிச்சாத்தானே தலையைக் குனியச் சொல்லுது?'' என்றார் முத்துச்சர்க்கரை.

''நல்ல வேளையாய்ப் போச்சு! ஏதோ தன் வயிற்றைக் காப்பாத்திக் கொள்கிறதுக்கு இப்படி ஒரு நெருப்பு நடவடிக்கையைப் புத்திசாலித்தனமாக எடுத்துக் கொண்டதனாலே பிள்ளையார் பிழைச்சார்! உங்க மாதிரி ஆளுங்க எங்கே கடவுளைக் கடவுளாக இருக்க விடறீங்க? அவனை மாந்திரீகனா ஆக்கி விடுறீங்க. கல்லுப் பிள்ளையாரா இருந்த போது கதவைச் சாத்தினீங்க. சித்துகள் செய்கிற சித்தி விநாயகரா மாறிட்ட போது ஊர்ப் பகை போகுது. பால் பள்ளயம் நடக்குது. ஜமாய்ங்க!'' என்றார் ஆறுமுகம் சேர்வை.

''சேர்வைக்காரரே, சாயங்காலம் பால் பள்ளயத் திருவிழாவுக்கு நீங்க அவசியம் வரவேணும்!''

''அவசியம்!'' என்று கூறிவிட்டு வீட்டுக்குள் போனார்; சாவியை எடுத்துவந்து முத்துச் சர்க்கரையிடம் கொடுத்தார்.

'ஆஹா. சங்கரப்பட்டி மிராசுதார் கணபதி நாயகருக்கு வந்த யோகம் தான் என்ன? ஒருமாத உஷ்ணத்தைப் போக்குவதற்காகப் படி எண்ணெய், குடம் பால், புட்டித்தேன், குலை இளநீர்.

பிள்ளையாருக்கு அருகே பக்திப் பரவசத்துடன் நின்று கொண்டிருந்த ஆறுமுகம் சேர்வை, மௌனாஞ்சலி புரிந்தார். ''விநாயகப் பெருமானே! பாமர மக்களைப் பக்தியில் திருப்பக் கடவுளைப் பூச்சாண்டியாக்க வேண்டியதிருக்கிறது. உன்னையும் பூச்சாண்டியாக்கி வைக்க நேற்றிரவு ஒரு காரியத்தைச் செய்தேன். என் ஆட்களை அனுப்பி வைக்கோல் போர்களுக்கு நெருப்பு வைக்கச் செய்தேன். நான் என்ன நோக்கத்தில் செய்தேனோ, அது பலித்து விட்டது. நீ குறை கேட்டு விட்டாய் என்று பயந்தார்கள் ஊரார். அதனால்தான் இன்று உனக்கு இத்தனை தடபுடல்! உன்னுடைய மகத்தான சக்தியைக் களங்கப்படுத்தும்படி நான் நெருப்பு விளையாட்டு ஆடி இருந்தால் என்னை மன்னித்து விடு. நீரில் விளையாடினான் உன் அப்பன். நெருப்பில் விளையாடினேன் நான். நெஞ்சில் விளையாடுகிறாய் நீ! என்றும் நீ விளையாட்டுப் பிள்ளை.. விளையாட்டுப் பிள்ளையார்!''

ஆறுமுகம் சேர்வை நீர் மல்கிய கண்களைத் திறந்தார். சங்கரன் மைந்தன் ஐங்கரன் சந்தனப்பொட்டு மினுமினுக்கத் தன் சந்நிதியில் ஒடிக்கிடந்த ஒளியை ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்தார். ஒளிக்கப் பட்டவருக்குத்தானே ஒளியின் அருமை தெரியும்?

வீட்டுக்கும் கைத்தொழிலுக்கும்

சேவை செய்கின்றன...



பிரபாத் பிரஷர் குக்கிங் ஸ்டவ்கள் வீட்டில் மனைவியின் சமையல் வேலையை எளிதாக்குகின்றன. பிரபாத் லாந்தர்கள் மின்சாரமில்லாத வீடுகளைப் பிரகாசிக்கச் செய்கின்றன. பெரிய தொழிற்சாலை, சிறியது ஆகிய இரண்டுக்கும் பிரபாத் புளோ லாம்புகள் இன்றியமையாத தேவையாக இருக்கின்றன. உண்மையில் ''பிரபாத் பிராடக்ட்ஸ்'' என்ற சொற்றொடர் வீட்டிலும் கைத்தொழிலிலும் பிடி-பதமாக விளங்கி வருகிறது.



'இந்தியாவில் முதன்மையானவை இன்றும் முதல்தரமானவை'

பிரபாத் (ஸ்டவ் & லாம்ப்ஸ்) பிராடக்ட்ஸ் கம்பெனி பிரைவேட் லிட்.

நோபிள் சேம்பர்ஸ், பார்ஸி பஜார் தெரு, போர்ட், பம்பாய்-1

அப்பா சொன்ன ரகசியம்



நான் ஒரு சிவில் எஞ்சினியர். என் தகப்பனார் ஒரு சாதாரணக் குமாஸ்தாவாக இருந்தவர். அவர் வருமானத்தில் என்னை எப்படிப் படிக்க வைக்க முடிகிறது என்பது எனக்குப் புரியாத இரகசியமாகவே இருந்தது. ஐந்து ஆண்டுகளுக்கு முன் நான் முதல் மாதச் சம்பளத்தை வாங்கி வந்து என் அம்மாவிடம் கொடுத்தபோது தான் அந்த இரகசியத்தை வெளியிட்டார் என் தந்தை... சில ஆண்டுகளுக்கு முன் என் அம்மாவின் நகைகளை விற்று, அந்தப் பணத்தைத் தேசிய சேமிப்பு சர்டிபிகேட்டுகளில் போட்டு வைத்தார். அவ்வப்போது சேமித்த சிறு தொகைகளையும் அப்படியே முதலீடு செய்து வந்தார். சிறு துளி பெரு வெள்ளம் என்பது போல அது பெருகி என் படிப்புக்கு உதவியது. தந்தையின் முறையை நானும் பின்பற்றினேன். அதிலே இப்போது மகிழ்ச்சியடைகிறேன். நான் சேமித்த பணமே இப்போது தம்பி வெளிநாட்டில் மேல் படிப்பும் படிக்க உதவுகிறது.

தேசியத் திட்ட சேமிப்பு சர்டிபிகேட்டுகளிலும் அரசாங்கத்தின் சிறு சேமிப்பு உறுதிப்பத்திரங்களிலும் முதலீடு செய்யப்படும் பணம் (வருமான வரியில்லாத) வட்டியுடன் திரும்பக் கிடைக்கிறது. அத்துடன் நமது வளர்ச்சித் திட்டங்களுக்கு உதவுவதன் மூலம் உங்களுக்கும் நாட்டுக்கும் பயன்படுகிறது.

12 ஆண்டு
தேசியத் திட்ட சேமிப்பு
சர்டிபிகேட்டுகள்

- 5.41% வட்டி ஆண்டுதோறும் சேர்ந்து வருமானவரி இல்லை
- ரூ. 5, 10, 50, 100, 500, 1000, 5000 ஆகிய தொகைகளில் தபால் ஆபீஸ்களில் எளிதாக வாங்கலாம்
- அரசாங்கத்தின் உத்திரவாதம் பெற்றது

சிறு சேமிப்புத் திட்டத்தின் கீழுள்ள மற்ற அரசாங்க உறுதிப் பத்திரங்கள்

10 ஆண்டு
கருவூல சேமிப்பு சர்டிபிகேட்டுகள்
தபால் நிலைய
சேமிப்புப் பாங்கி முதலீடுகள்

சிறு சேமிப்புகள் மூலம் நவீன இந்தியாவை உருவாக்க உதவுங்கள்

தேசீய சேமிப்பு ஸ்தாபனம்

மேற்படி முதலீடுகள் சம்பந்தமான மற்ற விவரங்கள் [illegible] தேசிய சேமிப்பு [illegible] கிடைக்கும்.

கடிகாரம்

கௌசிகன்

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

பண்டைக் காலத்தில் மனிதர்கள் காலத்தை அறிய எத்தனைய கருவிகளை யெல்லாம் உபயோகித்தார்கள் என்பதைப் பல்சக்கரம் விஸ்தாரமாக விளக்கியதைக் கேட்டதும், "அடேயப்பா! எத்தனைவிதக் கடிகாரங்கள்!" என்று ரமணியும் உஷாவும் வியந்து போனார்கள்.


"இன்னும் எவ்வளவோ இருக்கின்றன. நமக்கு அந்த ஆராய்ச்சி எல்லாம் வேண்டாம். இன்னும் எகிப்து நாட்டுப் பழங்காலக் கடிகாரத்தைப் பற்றி மட்டும் சொல்லிவிடுகிறேன்" என்றது பல் சக்கரம். "இப்போது நான் சொன்ன பழங்கால முறைகளிலெல்லாம் நேரத்தைச் சுமாராகத்தான் கணக்கிடுவதற்கு முடியும். சீதோஷ்ண நிலைக்கும் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு இந்தச் சாதனங்களில் தவறுகள் ஏற்படலாம்.

"அதோ சுவரிலுள்ள கடிகாரம் தவறு ஏற்படாதபடி செய்யப்பட்டது. உன் பொம்மை மோட்டாரிலுள்ள ஸ்பிரிங் எப்படி இயங்கி வேலை செய்கிறதோ, அதே தத்துவப்படி செய்யப்பட்ட கடிகாரங்களைத் தவிர மின்சார விசையினால் இயங்கக்கூடிய கடிகாரங்களும் இப்போது இருக்கின்றன. புராதன எகிப்தியர்கள் உபயோகித்த கடிகாரத்துக்கு ஸ்பிரிங்கோ, சக்கரமோ, விசையோ கிடையாது. அதற்கு நீர்க் கடிகாரம் என்று பெயர். சிறு தேசத்து நீர்க் கடிகாரத்துக்கும் இதற்கும் ரொம்ப வித்தியாசம். இதில் நீர் நேரத்தைக் காட்டும் முள்ளை ஓட்டும்."

"தண்ணீர் எப்படி...?" என்று புரியாமல் திகைத்தாள் உஷா.

"ஒரு தொட்டியில் தண்ணீர் நிரப்பப்பட்டிருக்கும். அதிலுள்ள நீர் ஒரே ஒழுங்காகச் சொட்டுச் சொட்டாக வெளியேறும்படி ஒரு துவாரம் இருக்கும். ஒரு மணிக்கு இவ்வளவு நீர்தான் வெளியேற வேண்டும் என்று கணக்கிடப்பட்டிருக்கும். தொட்டி நீர் முழுதும் ஒரு நாளில் காலியாகி விடும். முள்ளின் பின்னால் அதோடு இணைக்கப்பட்ட ஒரு குச்சியில் ஒரு கயிறு சுற்றப்பட்டிருக்கும். கயிற்றின் முனையில் ஒரு மரத் துண்டு கட்டப்பட்டு, தொட்டி நீரில் மிதக்கவிடப் பட்டிருக்கும். தண்ணீர் ஒழுகிவெளியேற வெளியேற நீரின் மட்டத்துக்கு மரத் துண்டும் கீழே இறங்கும். அது கீழே இறங்கும் போது குச்சியில் சுற்றப்பட்டுள்ள கயிறு பிரிந்து கொடுக்கும். இதனால் குச்சியோடு இணைந்துள்ள முள் நகர்ந்து மணியைக் காட்டும்."

1. கடிகார முள்: பக்க வாட்டுத் தோற்றம். 2. கயிறு சுற்றப்பட்ட இராட்டினம். 3. மிதக்கும் மரக் கட்டை. 4. தண்ணீர். 5. நீர் ஒழுக்கில் வெளிப்படும் நீர்த்துளி.



பல் சக்கரத்தின் விளக்கம் ரமணிக்குப் புரிந்து விட்டது. உஷாவுக்குப் புரியவில்லை. குழப்பமுடன் "அது எப்படி...?" என்றாள். தன் தங்கைக்கு இதுகூடப் புரியவில்லையே என்று ரமணிக்குக் கோபம் வந்துவிட்டது.

"இதுகூடப்புரியவில்லையா, உஷா? டாக்டர் வீட்டில் உன் எடையைப் பார்க்க நீ அதன் மீது ஏறி நின்றதும் ஒரு முள் நகர்ந்து உன் நிறைக்குச் சரியான எண்ணைக் குறிக்கவில்லையா? அதே முறையில்தான் இந்த நீர்க் கடிகாரமும் இயங்குகிறது. நீர் மட்டம் குறைவதனால், மரக்கட்டை தனியாக அதனோடு இணைக்கப்பட்ட கயிறு கம்பியை உருட்டக் கடிகார முள்ளும் நகர்ந்து மணி காட்டுகிறது" என்று விளக்கினான்.

"ஆமாம் அதுவேதான்!" என்று ஆமோதித்தது பல் சக்கரமும்.

"சக்கரத்தாழ்வாரே! இன்னும் சொல்லும்" என்றான் ரமணி.

"இன்னும் என்ன இருக்கிறது...எல்லாம் தான் சொல்லியாயிற்றே."

"அது சரி, எங்கள் வீட்டுக் கடிகாரம் 8-30 மணி காட்டும்போது அடுத்த வீட்டுக் கடிகாரம் 8-20 காட்டுகிறதே அது ஏன்?" என்று கேட்டாள் உஷா.

"அதுவா? எங்களை ஒரே நேரப்படி நீங்கள் ஒழுங்குபடுத்தி வைப்பதில்லை, அதனால்தான்; சாவி குறைந்தால் எங்கள்ஓட்டமும் குறையும்; எங்கள்மீதுள்ள பல் தேய்ந்தாலும் நாங்கள் ஒழுங்கான நேரத்தைக் காட்ட மாட்டோம்.

"எப்போதாவது உங்களுக்குத் தலைவலி, காய்ச்சல் என்று வருவதில்லையா? அப்போது டாக்டரிடம் போய்த் தானே குணப்படுத்திக் கொள்கிறீர்கள்? அதே போல் கடிகாரங்களுக்கும் இப்படி உடம்புக்கு வருவதுண்டு. அதைக் குணப்படுத்த, எங்கள் உடல் நிலை அறிந்த வைத்தியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்குக் கடிகார ரிப்பேர்க்காரர்கள் என்று பெயர்."

"நம் கடிகாரம் கூடச் சரியாக மணி அடிக்கவில்லை. ஆகவே அதை அந்த டாக்டரிடம் தான் காட்ட வேண்டும் போல் இருக்கிறது!" என்றான் உஷா சிரித்தபடியே.

பல்சக்கரம் 'ஆம்' என்று தலையாட்டியபடி மேஜை மீது சுழல ஆரம்பித்தது.

உனக்குத் தெரியுமா?

முதன் முதலில் 'பாக்கெட்' கடிகாரங்கள் கண்டு பிடிக்கப்பட்ட போது அதைச் சுமந்து கொண்டு வருவதற்கு ஒரு பையனையும் வேலைக்கு வைத்துக் கொண்டார்கள். ஏன் தெரியுமா? அவை அத்தனை கனமாகவும் பெரியதாகவும் இருந்தன!

உங்களால் கண்களைத் திறந்து கொண்டு தும்மவே முடியாது! 'முடியும்' என்று வீம்பு பேசி முயற்சி செய்து பார்க்க வேண்டாம்.

கூடத்து அறையொன்றில் ரமேஷ் 'கோரா'வுடன் பேச்சை வளர்த்துக் கொண்டேயிருந்தார். அவர் கண்கள் கிட்டுவின் வரவையே எதிர்பார்த்துக் கொண்டிருந்தன. அவர் திருவாசகப் பாடலுக்கு விளக்கம் சொல்லிக் கொண்டிருந்தபோது கிட்டு உள்ளே வந்தான். "போகலாம் வாங்க அப்பா எனக்குப் பசிக்குது" என்றான். கிட்டுவின் முக பாவத்திலிருந்து காரியம் முடிந்து விட்டது என்பதை யூகித்துக் கொண்ட ரமேஷ் தம் பேச்சையும் முடித்து விடைபெற்றுக் கொண்டார். தம் மகன் கிட்டுவின் படிப்புக்கு இருநூறு ரூபாய்க்கு ஒரு 'செக்' வாங்கிக் கொள்ளவும் அவர் மறக்கவில்லை.

கிட்டுவும் ரமேஷும் படியிறங்கி நடைபாதையில் வந்து கொண்டிருக்கும்போதே ரங்கசாமியின் கார் வந்து அவர்களை ஏற்றிக் கொண்டது. "ஏன் சார், சதிகாரர்களின் தலைவனான கோராவை இப்படியே விட்டு விட்டால் தப்பிவிடமாட்டானா?" என்று கேட்டான் கிட்டு. ரமேஷ் சிரித்துக்கொண்டே, 'இதோ பார்' என்று தமது ஜேபியிலிருந்து ஒரு சிவப்புக் கைக் குட்டையை எடுத்துத் தலைக்குமேல் தூக்கி அசைத்தார். உடனே பல போலீஸ் தலைகள் செடிகளின் மறைவிலிருந்து வெளிப்பட்டன. அவர்களுக்கு ஜாடையால் ஏதோ உத்தரவிட்டுவிட்டுக் காரினுள் உட்கார்ந்தார். கார் போய்க் கொண்டிருக்கும்போதே சொன்னார்: "கோராவை பிடிப்பது பெரிய விஷயமல்ல, அவனிடம் சிக்கியிருந்த இந்த ஜமீன்தாரை உயிரோடு மீட்பதற்காகவேதான் இந்த நாடகமாடினேன். ஏனென்றால், பிடிபட்டுவிட்டோம் என்ற ஆத்திரத்தில் அவன் இவரைக் கொன்றாலும் கொன்று விடுவான். அதற்காகவே முதலில் ஜமீன்தாரை அவன் பிடியிலிருந்து விடுவிக்க வேண்டுமென்று விரும்பினேன்" என்றார்.

கார் வெகு வேகமாகப் போய்க்கொண்டிருந்தது. போகும்போது மணி இறங்கிய இடத்துக்கு வந்ததும் கிட்டு அவனையறியாமல் வெளியே பார்த்தான். என்ன ஆச்சரியம்! மணி, சேகர், இன்னொரு பெண் (லலிதா) மூவரும் ரஸ்தாவை நோக்கி ஓடி வந்து கொண்டிருந்தார்கள். சேகர் ஓடிக் கொண்டே மணியிடம் சொல்லிக் கொண்டு வந்தார். "மணி! நீ அப்படிச் சமயோசிதமாக ஏணியை அந்த நெட்டையன்மீது தள்ளி விட்டிருக்காவிடில் அந்த அயோக்கியன் நம் மூவரையும் கட்டிக் கொன்றிருப்பான். ஒரு நிமிஷம் எனக்கு ஒன்றுமே ஓடவில்லை" என்றார்.

இதற்குள் ரங்கசாமி காரை இவர்களின் அருகே கொண்டு வந்து நிறுத்தினான். காரினுள் தமது எஜமானரான நரசிம்ம பூபதியைக் கண்டதும், சேகர் அப்படியே அவரைத் தழுவிக் கொண்டு ஆனந்தக் கண்ணீர் விட்டார். சந்தானம் துப்பறியும் ரமேஷை அறிமுகப்படுத்தினார். கிட்டுவும் மணியும் தங்கள் தங்கள் பிரதாபங்களைப் பரிமாறிக் கொண்டார்கள். இதற்குள் போலீஸ் ஜீப்பில் கோராவையும் வேலைக்காரனையும் கைது செய்து கொண்டு இன்ஸ்பெக்டர் வந்து சேர்ந்தார். ரமேஷ் சேகர் சிறை இருந்த வீட்டைச் சுட்டிக் காட்டி, "அங்கு உங்கள் விருந்தாளிகளில் இன்னும் இரண்டு பேர்கள் இருக்கிறார்கள். அவர்களையும் போய் அழைத்து வாருங்கள்" என்று அனுப்பினார்.

உடனே சேகர் "இந்தக் கூட்டத்தாரில் இன்னும் பல பேர்களை எனக்குத் தெரியும். அவர்கள் கொள்ளையடித்த பொருள்களைச் சேமித்து வைத்துள்ள இடங்களையும் என்னால் காட்ட முடியும்" என்றார்.

உடனே மணி "அதெல்லாம் இப்போதைக்கு வேண்டாம், மாமா! முதலில் நீங்கள் அம்மாவை வந்து பார்க்க வேண்டும். எனக்கு உங்கள் கதை முழுதும் சொல்லவேண்டும். உங்களைக் கண்டால் அம்மா எத்தனை ஆனந்தப்படுவாள், தெரியுமா?" என்றான். சேகரும் மணியின் விருப்பத்துக்கு இணங்கினார். பிறகு லலிதாவை எல்லோருக்கும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

கிட்டு, மணி, சேகர், ரங்கசாமி இவர்களைப் பார்த்து ரமேஷ், "உங்களுக்கு ஒரு பெரிய விருந்து வைத்து, பல நாட்களாகப் பல கொள்ளைகளில் ஈடுபட்டு வந்த பெரிய சதிக் கூட்டத்தைப் பிடித்துக் கொடுப்பதில் உதவிய உங்களைக் கௌரவித்துப் பரிசளிக்க அரசாங்கத்தின் சார்பில் தீர்மானித்திருக்கிறேன்" என்றார். கிட்டு, மணி இவர்களின் தோள்களில் கையைப் போட்டுத் தம்முடன் அணைத்துக் கொண்டே சேகர் ரமேஷின் முடிவை மிகுந்த மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டார். (முற்றும்)

Printed and Published by R. Ananthanarayanan for the Proprietors Messrs Bharathan Publications Private Limited at the Kalki Press, Kilpauk, Madras-10
Managing Editor: T. Sadasivam.


புதுமைப் பொலிவையும் வனப்பையும்
உங்களுக்களிப்பது ஹிமாலயா புக்கே
HIMALAYA
BOUQUET
SNOW
Himalaya Bouquet
இளமையும் குளுமையும் தரும் இந்த ஸ்நோவைத் தடவிக் கொண்டு, அதன் மணம் கமழும் புதுமை இன்பத்தை அனுபவியுங்கள்!
ஹிமாலயா புக்கே ஸ்நோ
மிருதுவான இந்த வாசனைப் பவுடரைப் பூசிக் கொண்ட பின், பூர்த்தி பெறும் உங்கள் பொலிவைப் பாருங்கள்!
ஹிமாலயா புக்கே டாய்லெட் பவுடர்
HBS. 14A-50 TM

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon